ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 3 பிரமாதி ௵ கார்த்திகை—டிசம்பர்-1939 கதிர் 5

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை 1

சந்திரன் —"சங்கர குமாரன்" 4

அடுத்த காங்கிரஸ் 6

சோவியத் ருஷியா வரலாறு
—வெ. ஸ்ரீனிவாஸன்
M. A, A. I. I. B. 9

புலவர் பாடும் புகழாளர்
பண்டிதர்—வ. மு. இரத்தினேசவையர் 23

காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம் 25

கேசவன் லைப்ரேரி
—ஸ்ரீ ராமச்சந்திரன் 28

தமையனின் கடிதம் 8
—"தேவீதாஸன்" 31

அக்கா—தொடர்கதை

—எம். வி. வெங்கடராமன் 33

ஞானக்களஞ்சியம்

—ஸ்ரீஸதானந்த ஸ்வாமிகள் 40

கம்பர்—5 அடைக்கலம் கொடுத்த அன்பு

—நா. லக்ஷ்மீநரசிம்மம் 44

ஓ! இந்தியனே!

—"கண்ணன்" 50

இந்தியாவும் மூலப் பொருள்களும்

—"வாதூலன்" 56

ஸம ஸமாஜம்

—வ. அ. தியாகராஜன் M. A. 60

ஸையத் ஹஸன் இமாம்

—"ஒரு காங்கிரஸ் வாதி" 66

துலாக்கோல்

—புத்தக விமரிசனம் 68

இராமகிருஷ்ண சங்கத்தின் இலட்சியங்களும்

அது செய்துவரும் சேவைகளும்—"ஆசிரம வாசி" 71

அன்றாட உலகம் 77

ஜோதி

கதிர் 3 டிசம்பர்—1939 சுடர் 5

கபாடம் திறமினே!

அலகாபாத்தில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம், தற்போதைய அரசியல் நிலைமையைப் பற்றிக் காங்கிரஸ் கொண்டுள்ள கருத்தை விளக்கியும், தேசத்தாரின் கடமை யென்ன வென்பதைத் தெளிவு படுத்தியும் நீண்டதொரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. இந்தத் தீர்மானம் காந்தியடிகளால் தயாரிக்கப் பட்டது. அதனாலேயே, சென்ற சில வாரங்களாக 'ஹரிஜன்' பத்திரிகையில் வெளியாகிக் கொண்டிருக்கும் கட்டுரைகளின் கருத்துக்கள், மேற்படி தீர்மானத்தில் பிரதிபலிக்கின்றன. தீர்மானத்தில், உயரிய தத்துவங்கள் மிளிர்கின்றன. காந்தியடிகளின் தூய மனம், தீர்மானத்தில் நிழலடிக்கிறது. 'இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வேண்டாம்' என்று தீர்மானித்து விட்டவன் கூட, இந்தத் தீர்மானத்தைப் படித்து விட்ட பிறகு, 'ஐயோ பாவம்! இந்தியாவும்தான் கொஞ்சம் சுயராஜ்ய வாசனையை நுகரட்டுமே' என்று நிச்சயம் கூறுவான். ஆனால் பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் மனம், இந்தத் தீர்மானத்தைக் கண்டு இளகுமா? காங்கிரஸ் தலைவர்கள், இளகும் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையில் நாமும் நம்பிக்கை வைப்போம். வேறென் செய்வது? பார்லிமெண்டில், ஸர் ஸாமியல் ஹோரும், லார்ட் ஜெட்லண்டும், ராஜப் பிரதிநிதியின் அறிக்கையை அநுசரித்துப் பேசி விட்ட அப்பொழுதே, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு, காங்கிரஸும் முஸ்லீம் லீக்கும் ஒரு சமரஸத்திற்கு வாராமலிருப்பதே தடையாயிருக்கிறதென்று ராஜப் பிரதிநிதி அறிக்கை வெளியிட்ட பொழுதே, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் சமரஸக் கதவு மூடப்பட்டு விட்டது என்று நாம் கருதினோம். இப்பொழுதும் அப்படியே கருதிக் கொண்டிருக்கிறோம். ஆனால், காரியக் கமிட்டி, தன் தீர்மானத்தில், பிரிட்டிஷ் அரசாங்கம் சமரஸக் கதவை மூடிவிட்ட போதிலும், சமரஸத்திற்கான எல்லா மார்க்கங்களையும் காங்கிரஸ் தேடிக் கொண்டிருக்குமென்று குறிப்பிட்டிருக்கிறது. இதற்காக, அதாவது சமரஸத்திற்காக, காங்கிரஸ் என்னென்ன முறைகளைக் கையாளும் என்று தீர்மானத்தில் காணப்படவில்லை. அடுத்த

காரியக் கமிட்டி கூட்டத்தில் தெரியும் போலும், பொறுத்துப் பார்ப்போம். பொறுமைதான், நமது பரம்பரைப் பொக்கிஷமாயிற்றே!

இந்தியாவின் தன் மதிப்புக்கும் சுதந்திரத்திற்கும் விரோதமாயுள்ள எந்த வழியிலேனும், இந்தியர்கள், அவர்கள் அபிப்பிராயத்திற்கு விரோதமாகக் கொண்டு செலுத்தப்படுவார்களானால், காங்கிரஸ், தனது அஹிம்சா தர்ம முறைப்படி அதனை எதிர்த்து நிற்கும்' என்று காரியக் கமிட்டி தீர்மானத்தில் மற்றொரு வாசகம் காணப்படுகிறது. இந்தியாவின் தன் மதிப்புக்கும் சுதந்திரத்திற்கும் விரோதமில்லாமலே, இது வரை காரியங்கள் நடைபெற்று வந்திருக்கின்றன வென்றே வைத்துக் கொள்வோம். இனி, விரோதமாக என்னென்ன காரியங்களைக் காங்கிரஸ் எதிர் பார்க்கிறது? அதனை எதிர்க்க, காங்கிரஸ் என்னென்ன முறைகளைக் கையாளப் போகிறது? இவற்றின் விவரங்களும் அடுத்த காரியக் கமிட்டி கூட்டத்தில் விளக்கப்படு மென்று எதிர் பார்க்கிறோம். ஏனென்றால், தேசத்திற்கு விளக்கம் வேண்டியிருக்கிறது.

பொதுவாகக் காரியக்கமிட்டி தீர்மானத்தைப் பார்க்கிற போது, தேசத்தில் எவ்வித போராட்டமும் சமீபத்தில் நடைபெறாதென்று தோன்றுகிறது. காங்கிரஸ் மாகாணங்களில், மந்திரிகள் ராஜீநாமா செய்தவுடனே, அஹிம்சைப் போராட்டம் ஆரம்பமாகப் போகிறதென்று உற்சாகங் கொண்டு அநேகர், கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்கள். அவர்களுடைய உற்சாகம், தர்ப்பிரசாரத்திலும், சமூக ஒற்றுமையை நாடுவதிலும், ஹரிஜன சேவையிலும் செல்ல வேண்டுமென்று காரியக் கமிட்டி மேற்படி தீர்மானத்தின் மூலமாக ஆணையிட்டிருக்கிறது. 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்'

இந்தியாவின் எதிர்கால அரசியல் திட்டத்தை வகுக்க, 'கான்ஸ்டிட்யுவெண்ட் அஸெம்ப்ளி' என்று சொல்லப்படுகிற பொதுஜன சபை என்ற ஒரு சபையைக்கூட்ட வேண்டுமென்றும் இதனை வற்புறுத்துவதே, காங்கிரஸின் எதிர்கால வேலைத் திட்டத்தின் முக்கிய அம்சமாயிருக்குமென்றும் காரியக் கமிட்டி தீர்மானம் கூறுகிறது. பண்டித மோதிலால் நேரு, ஜீவிய தசையிலிருந்த காலத்தில், இந்தப் பொதுஜன சபைப் பிரச்னை முன்னணிக்கு வந்து, பல முகங்களாக வாதிக்கப் பட்டிருக்கிறது. பண்டித நேருவே ஓர் அரசியல் திட்டத்தையும் வகுத்தார். இவை யெல்லாம் சேர்ந்துதான் கடைசியில் வட்ட மேஜை மகாநாடு என்னும் புகையாகப் பரிணமித்தது. ஆனால் அது சென்று போன விஷயம். இனி, காரியக் கமிட்டி கோரும் பொதுஜன சபை, உண்மையான ஒரு பிரதிநிதிச் சபையாக இருந்து, இந்தியாவின் எதிர்கால அரசியலை வகுத்துக் கொடுக்குமானால் அது மிகவும் நல்லதுதான்.

பொதுவாக, காரியக் கமிட்டி தீர்மானத்தில் கண்டிருக்கிற கோரிக்கைகள் விரைவிலே நிறைவேற வேண்டுமென்பது நமது பிரார்த்தனை.

• • •

பின்லாந்து

பின்லாந்து, ருஷ்யாவுக்குப் பலியாகி விட்டது. ஸ்ரீ நெவில் சேம்பர்லேனும் அநுதாபக் கண்ணீர் உகுத்து விட்டார். நமது கண்ணீரும் அதனோடு சேரட்டும். ஆனால் நமக்குக் கண்ணீர் மட்டும் வரவில்லை; பெருமூச்சும் கூடவே வருகிறது.

பின்லாந்து ருஷ்யாவுக்கு மேற்கிலும் நார்வேக்குத் தெற்கிலும் உள்ள ஒரு சிறிய நாடு. 132,608 சதுரமைல் விஸ்திரண முடையது; 3,658,000 ஜனத் தொகையுடையது. 1920ம் வருஷத்தில்தான், இது தனிக் குடியரசு நாடாகியது. அதற்குள் இதன் வாழ்வு முடிந்து விட்டது.

பின்லாந்துக்கு எல்லையிலுள்ள சில பிரதேசங்களை ருஷ்யா கேட்டதாகவும் இதற்கு பின்லாந்து இணங்கவில்லை யென்றும் சொல்லப் படுகின்றன. எப்படியும் ருஷ்யாவுக்குச் சொந்தமாயிருந்த தேசம், அதனுடனேயே ஐக்கியமாகி விட்டது. இனி பால்டிக் நாடுகளின் நிலைமை என்ன? என்ன என்ற எதிரொலிதான் நமக்கு கேட்கிறது.

* * *

சேவை

பஞ்சாப் மாகாணத்துப் பிரதம மந்திரி நல்ல ராஜபக்தர். யுத்தப் பிரசாரத்திற்கென்று 75,000 ரூபாய் தேவை யென்று பஞ்சாப் சட்ட சபையில் விசேஷ கிராண்ட்ஒன்று கோரி யிருக்கிறார். தற்போதைய யுத்தத்தின் நோக்கங்களையும் அதன் நல்ல அம்சங்களையும் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக, மாணவர்களடங்கிய பிரயாணிக் கோஷ்டிகளை நியமித்து மாகாணத்தின் பல பாகங்களுக்கும் அனுப்பு வாராம். நல்ல யோசனை; சேவையுங் கூட!

* * *

அஸ்ஸாம்

அஸ்ஸாம், அதிருஷ்ட முள்ள மாகாணந்தான். மற்ற மாகாணங்களைப் போல் மந்திரிச் சபை யில்லாமல் அது தவிக்கவில்லை. ஸர் மகம்மது சாதுல்லா, இந்தத் தவிப்பினின்று அந்த மாகாணத்தைக் காப்பாற்றி விட்டார். புதிய மந்திரிச்சபை அமைத்து விட்டார். வங்காளத்துப் பிரதம மந்திரியும் அவருக்கு வாழ்த்துக் கூறி விட்டார். வேறென்ன வேண்டும்? ஆனால் அஸ்ஸாமில் இது காறும் நிலவி வந்தது கூட்டு மந்திரிச்சபை யென்பதை நேயர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

: சந்திரன் :

—"சங்கர குமாரன்"

இரவு காலத்தில் வெளிச்சங் கொடுக்கும் வெண்ணிலாவை நாம் பார்த்திருக்கிறோம். சந்திர வெளிச்சத்தை விரும்பாதார் யார்! மனிதர் இதை ஏன் விரும்புகிறார்கள் என்றால் இதன் வெளிச்சம் குளிர்ச்சியாயிருப்பதால்தான். ஆனால், சூரியன் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுக்கும் போது, சந்திரன் மாத்திரம் குளிர்ச்சியையும் வெளிச்சத்தையும் கொடுக்குங் காரணமென்ன? ஏனென்றால், சந்திர வெளிச்சம் சுய வெளிச்சம் அன்று; சந்திரனுக்குச் சுயமாக ஒளி கிடையாது. ஆனால், சூரிய வெளிச்சம் சந்திரனில் தாக்கி அந்த வெளிச்சம் பூமியில் பிரதிபலிக்கிறது. இதனால் தான் நிலா வெளிச்சம் குளிர்ச்சியாக விருக்கிறது. சந்திரன் மாத்திரமல்ல, புதன், செவ்வாய், வெள்ளி முதலிய கிரகங்களெல்லாம் சுய ஒளியுடையன வல்ல. சூரிய வெளிச்சம் அவைகளின் மேல் படுவதனால் அவை பிரகாசமாகத் தெரிகின்றன. அப்படியானால், நாம் வசிக்கும் பூமியும் ஒரு கிரகம் தானே. இது சந்திரன், செவ்வாய், வெள்ளி முதலிய கிரகங்களைப் போல் பிரகாசிக்க வில்லையே என்று சிலர் நினைக்கக்கூடும். உண்மையிலேயே நமது பூமியும் சந்திரனைப் போல பிரகாசித்துக் கொண்டேயிருக்கிறது. இப்படிப் பிரகாசிப்பது நமக்குத் தெரியா விட்டாலும், சந்திரனில் மனிதர்கள் இருப்பார்களானால், பூமி பிரகாசிப்பதை அவர்கள் பார்க்கக் கூடும். ஆனால், பூமியின் பிரகாசம் சுயமானதல்ல; சூரிய வெளிச்சம் பூமியில் தாக்கி இந்த வெளிச்சம் பூமியைப் பிரகாசிக்கச் செய்கிறது. செவ்வாய், புதன் அல்லது சந்திரன் முதலிய உலகங்களுக்குப் போகும் சக்தி நமக்கிருந்து, அந்த உலகங்களுக்குப் போய் பூமியைப் பார்ப்போமானால் ஏனைய கிரகங்களைப் போலவே பூமியும், ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் காணலாம். ஆனால், மனிதராகிய நமக்கு ஏனைய கிரகங்களுக்குப் போகும் சக்தி இல்லாதபடியால், இங்கிருந்தபடியே பூமியும் ஏனைய கிரகங்களைப்போலவே பிரகாசிக்கிறதா இல்லையா என்பதையறியக்கூடிய அத்தாட்சி ஏதேனுமுண்டா! ஆம் உண்டு.

பிறைச் சந்திரனைப் பார்க்கும் போது சில சமயங்களில் அது வெள்ளித் துண்டு போல் அழகாகப் பிரகாசிப்பதையும், சந்திரனுடைய மற்றப் பாகங்கள் மிகவும் மங்கலாகக் காணப்படுவதையும் காண்கிறோம். இது சாதாரணமாக எல்லோரும் பார்த்தி

ருக்கக்கூடிய காட்சியே. பிறைச் சந்திரன் பளிச்சென்று பிரகாசிக்கும் போது சந்திரனுடைய மற்றப் பாகங்கள் மிகவும் மங்கலாகக் காணப்படுவதேன்? சந்திரனுடைய ஒரு பாகத்தில் மாத்திரம் சூரிய வெளிச்சம் படுவதால் அந்தப் பாகம் மாத்திரம் பளிச் சென்று பிரகாசிக்கிறது. இந்தப் பாகத்தைத்தான் நாம் பிறைச் சந்திரன் என்று சொல்லுகிறோம். சூரியனுடைய வெளிச்சம் பூமியில் தாக்குவதனால் பூமி வெளிச்சத்தோடு பிரகாசிக்கிறதென்று சொன்னோமல்லவா? இந்த பூமியின் வெளிச்சம் சந்திரனில் பிரதிபலிக்கிறபடியால், சந்திரன் பிறைச் சந்திரனாயிருக்கும் போதும், அதன் மற்றப் பாகங்கள் மங்கலாகத் தோன்றுகின்றன. இதனால் பூமியும் ஏனைய கிரகங்களைப் போலவே ஆகாய வெளியில் ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறதென்பதை அறியலாம்

ஆகாய வெளியில் பிரகாசிக்கும் கிரகங்கள் எல்லாம் மிகச் சிறியனவாய் சிற்றொளியோடு பிரகாசித்துக் கொண்டிருக்க, சந்திரன் அல்லது நிலா மாத்திரம் மிகவும் பெரியதாய் அதிக ஒளியுடன் பிரகாசிக்கும் காரணம் என்ன? ஏனென்றால், ஏனைய கிரகங்களெல்லாம் வெகு தூரத்திலிருக்கின்றன. ஆனால், சந்திரனோ பூமிக்கு மிகவும் சமீபத்தில் இருப்பதனால் பெரியதாயும் அதிக வெளிச்சமுடையதாயும் காணப்படுகிறது. பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலுள்ள தூரம் 240,000 மைல்தான். இது அதிக தூரம் என்று நமது மனதுக்குத் தோன்றிய போதிலும், ஏனைய கிரகங்களோடு ஒத்திட்டுப் பார்ப்போமானால் இது சொற்ப தூரம் என்று தெரியவரும். சந்திரன் பூமிக்கு மிகச் சமீபத்திலிருப்பதால் வான சாஸ்திரிகள் சந்திரனைப்பற்றி அதிகமாகத் தெரிந்திருக்கிறார்கள். சந்திரனுடைய பற்பல பாகங்களையும் படம் பிடித்திருக்கிறார்கள்.

சந்திரன் மிகச் சிறிய உலகம், அது ஐரோப்பா கண்டத்தைப்போல் இரு மடங்கு பெரியது. இன்னும் விளக்கமாகச் சொல்வதென்றால், நமது பூமியை ஐம்பது சமபாகங்களாக வெட்டி எடுத்து, அந்த ஐம்பது பாகத்தில் ஒரு பாகத்தை உருண்டையாகத் திரட்டி வைத்தால் அது எவ்வளவு பெரியதாயிருக்குமோ, அதே அளவுடையதுதான் சந்திரனும். ஆனால் சந்திரனுடைய மேற்பரப்பு விஸ்தீரணம் நமது பூமியின் விஸ்தீரணத்தில் பதின்மூன்றில் ஒரு பாகமுடையதாயிருக்கிறது. இது ஆச்சரியந்தான். பூமியை விட ஐம்பதில் ஒரு பங்கு விஸ்தீரணமுடையதாயிருக்க வேண்டும். அப்படியில்லாமல், விஸ்தீரணத்தில் மாத்திரம் பூமியின் பதின்மூன்றில் ஒரு பங்கு விஸ்தீரணமுடையதாயிருக்கிறது. இதனால்தான் சந்திர உலகம் வெகு சீக்கிரமாகக் குளிர்ந்து விட்டதென்று வான சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

சந்திரன் பூமியைச்சுற்றிக்கொண்டு வருகிறது. சந்திரன் பூமியைச் சுற்றும் பாதை வட்ட வடிவமுடையதென்று சொல்லக்கூடாதபடி சற்று நீண்டிருக்கிறது. சந்திரன் பூமியை ஒருமுறை சுற்றுவதற்கு இருபத்தேழு $\frac{1}{3}$ நாட்கள் பிடிக்கிறது. சந்திரனுடைய ஒரு பாகத்தைத்தான்

நாம் பார்க்கிறோமே யன்றி, அதன் யற்றப் பாகத்தைக் காண்பதில்லை. வான சாஸ்திரிகள் கூட சந்திரனுடைய ஒரு பாகத்தை மாத்திரம்தான் பார்த்திருக்கிறார்கள். ஏனென்றால், சந்திரன் பூமியைச் சுற்றுவது போலவே தன்னைத் தானாகவும் சுற்றுகிறது. அவ்விதம் தன்னைத்தானே சுற்றுவது மிகவும் சாவதானமாகும். அது எவ்வளவு சாவதானமாக, மெதுவாகத் தன்னைத் தானே சுற்றுகிறது என்றால், அது பூமியை ஒருதரம் சுற்றி வர எத்தனை நாள் ஆகிறதோ, அத்தனை நாட்களுக் கொருதரந்தான் தன்னைத் தானேயும் சுற்றுகிறது. அதாவது சந்திரன் பூமியைச் சுற்றி வர $27\frac{1}{3}$ நாள் ஆகிறதென்றால், அது தன்னைத்தானே ஒரு தரம் சுற்றுவதற்கு $27\frac{1}{3}$ நாள் ஆகிறது. இதை வேறுவிதமாகச் சொல்வதென்றால், ஏறக்குறைய பூமியின் ஒரு மாத காலம் சந்திரனுக்கு ஒரு நாளாகிறது. இவ்வித சந்திரன் பூமியைச் சுற்றுவதும் தன்னைத்தானே சுற்றுவதும் ஒரே காலமாயிருப்பதால், அதன் ஒரே பாகத்தை பாத்திரம் தானே நாம் பார்க்கக் கூடியதாயிருக்கிறதே யன்றி மற்றப் பாகத்தைப் பார்க்க முடிகிறதில்லை.

•

•

சந்திரன் என்பது என்ன? எந்தப் பொருள்களால் நமது பூவுருண்டை ஆக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பொருள்களாலேயே சந்திரவுலகமும் ஆக்கப்பட்டிருக்கிறது. வெகு காலத்திற்கு முன்னர் சந்திரனும் பூமியும் ஒரே பொருளாகவிருந்தன. பின்னர் சந்திரன் பூமியிலிருந்து பிரிந்து விண்டு போயிற்று. (இது எப்படி நிகழக் கூடும் என்று விளக்குவதென்றால், பூமி எப்படி உண்டாயிற்றென்று விளக்க வேண்டும். இங்கு எழுதும் விஷயத்திற்கு அது சம்பந்தமுடையதல்லவாகையால் அதனை ஈண்டு எழுதாமல் விடுகின்றோம்.) இவ்விதம் பிரிந்து போன உருண்டைதான் சந்திரன். பூமியிலிருந்து சந்திரன் பிரிந்தவுடன் அது பூமிக்குச் சமீபத்தில் இருந்தது என்றும், பிறகு காலஞ் செல்லச் செல்ல தூரத்தில் சென்று விட்டதென்றும், அன்றியும் அது மிகச் சிறியதாயிருப்பதால் வெகு விரைவில் அதன் உஷ்ணம் குறைந்து குளிர்ந்து விட்டதென்றும் வான சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். அது மட்டுமல்ல, பூமிக்கிருக்கும் ஆகர்ஷண சக்தியை அதாவது இழுக்கும் சக்தியை சந்திரன் இழந்து விட்டது. இதனால், ஒரு மனிதன் பூமியில் ஆறடி உயரம் குதிப்பானென்றால், அவன் சந்திர உலகத்தில் முப்பத்தாறடி எகிறிக் குதிக்கக்கூடும். ஏனென்றால் சந்திர உலகத்திற்கு இழுக்கும் சக்தி (கிராவிடேஷன்) இல்லை. சந்திர உலகத்தில் மிகப் பெரிய எரிமலைகள் ஏராளமாகக் காணப்படுகின்றனவாம். ஆனால் இந்த எரிமலைகள் அவிந்து குளிர்ந்து கிடக்கின்றன. ஏராளமாகக் காணப்படும் இந்த எரிமலைகளின் வாய்கள் மிகவும் பெரியனவாய்த் தோற்றுகின்றனவாம். இந்த எரிமலைகளின் வழியாய்த்தான் சந்திர உலகத்திலிருந்த உஷ்ணம் வெளிப்பட்டு, அது சிக்கிரம் குளிர்ந்து விட்டதென்று சொல்லுகிறார்கள்.

ஆனால் சந்திரனுடைய அதிசயம் இம்மட்டுமல்ல. பூமியின் 28 நாள் கொண்டது சந்திரனுக்கு ஒரு நாள். அதாவது பகல் 14 நாள், இரவு 14

நாள் கொண்டது சந்திரனுக்கு ஒரு நாள். ஆ! இந்த விசித்திரமான சந்திர வுலகத்தில் மனிதர் வசிப்பதில்லை; வசிக்கவும் முடியாது. ஏனென்றால், மனிதர் வசிக்க வேண்டுமானால் காற்றும் தண்ணீரும் அவசியம் வேண்டும். சந்திரவுலகத்தில் காற்றும் தண்ணீரும் கிடையாது. அங்கு தாவரங்களும் மிருகங்களும் மனிதரும் இல்லை. சந்திர வுலகத்தில் மழை பெய்வதுமில்லை. மனிதராகிய நாம் சந்திர லோகம் சென்று ஒரு விளக்கை ஏற்றினால் அது எரியாது. ஒரு மல்லிகை மலரை முகர்ந்து பார்த்தால் வாசனை தெரியாது. நமது கைகளைத் தட்டினால் சப்தம் கேட்காது. ஏனென்றால், நெருப்பு எரிவதற்கும், வாசனை பரவுதற்கும் ஒலி உண்டாவதற்கும் காற்று அவசியம் வேண்டும். காற்று வாயு இல்லாவிடில் அவை யொன்றும் நடைபெறாது. மனிதனும் உயிர் வாழ முடியாது. சந்திர வுலகத்தில் காற்றும் தண்ணீரும் இல்லாத படியால் அங்கே மனிதர் வசிக்க முடியாது. இது மட்டுமல்ல; காற்றும் தண்ணீரும் இல்லாதபடியால் சந்திர வுலகத்தின் சீதோஷ்ண நிலை நமது பூமியைவிட மிகவும் மும்முரமாக விருக்கும். நமது உலகத்தில்காற்றும் தண்ணீரும் இருப்பதால் பகலின் உஷ்ணத்தையும், இரவின் குளிர்ச்சியையும் அவை மிதப்படுத்துகின்றன. சந்திர வுலகத்தில் காற்றும், தண்ணீரும் இல்லாதபடியால் பகல் மிகவும் உஷ்ணமாயும், இரவு மிகவும் குளிராகவு மிருக்கும். அன்றியும் 14 நாள் பகலும், 14 நாள் இரவுமாக விருப்பதால், அங்கு பகல் பொறுக்க முடியாத குளிராகவு மிருக்கும்.

அன்றியும் சந்திரவுலகத்தின் இயற்கை யமைப்பு மாறுபடாமல் ஒரே தன்மையாக விருப்பதால் அவை மேடுகளைப் பள்ளமாகவும், பள்ளங்களை மேடாகவும், பாறைகளை மணலாகவும், மண்ணைப் பாறையாகவும் செய்து பூமியின் இயற்கை யமைப்பை மாறுபடுத்திக் கொண்டே யிருக்கின்றன. இது பூமியில் ஆதி காலத்திலிருந்து நடைபெற்று வருகிற ஒரு இயற்கையாகும். ஆனால், இவ்வித இயற்கை யமைப்பின் மாறுபாடு சந்திரவுலகத்தில் நடைபெறுவதில்லை. ஏனென்றால், இம்மாறுபாடுகளுக்கு இன்றியமையாத முதற் காரணமாயுள்ள காற்றும் தண்ணீரும் சந்திர வுலகத்திலில்லை.

மனிதர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிறமாதிரி பொருள்களை ஓர் ஏற்பாட்டின் மீது உற்பத்தி செய்து கொடுக்கும் ஓர் அமைப்பையே 'சோஷலிஸம்' என்று சொல்லுகிறோம்.

—ட்ரோட்ஸ்கி

அடுத்த காங்கிரஸ்

அடுத்த காங்கிரஸ் பீஹார் மாகாணத்திலுள்ள ராம்கார் என்ற ஊரில் 1940ம் வருஷம் மார்ச் மாதம் கூடும்.

பிரதிநிதிகள் தேர்தல்: **28-1-40** வரையில்

தலைவர் நாமினேஷன்: **4-2-40** வரையில்

தலைவரையும் அ. இ. கா. கமிட்டி அங்கத்தினர்களையும் தெரிந்தெடுக்கப் பிரதிநிதிகளின் கூட்டம்: **15-2-40**

இன்னார் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு விட்டார் என்பதை அறிவித்தல்: **19-2-40**

காங்கிரஸ் மகாநாடு: 1940ம் வருஷம் மார்ச் மாதம் மூன்றாவது வாரம்.

நண்பர்களுக்கு

ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கிற யுத்தம் காரணமாக, காகித விலை பெரிதும் கூடியிருப்பதால் "ஜோதி" யின் பக்கங்களைக் குறைத்து வெளியிட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தவிர நாம் உத்தேசிக்கிறபடி அதிகமான கார்டூன், படங்கள் முதலியவற்றையும் வெளியிட முடியவில்லை. தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்தக் குறைச்சல்களை நண்பர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறோம்.

மானேஜர்.

சோவியத் ருஷியா வரலாறு

—வெ. ஸ்ரீனிவாஸன்
M. A., A. I. I. B.

பீடிகை - ஜாரிஸ்டு ருஷியா - சென்ற மஹாயுத்தம் - கபட சன்னியாசி ரஸ்புடீன் - 1917; மார்ச்சு, நவம்பர் புரட்சிகள் - லெனின் வருகை - ஜாரின் வீழ்ச்சி - கெரன்ஸ்கி ஆதிக்கம் - பொதுவுடைமை சர்க்கார் ஸ்தாபிதம் - லெனின் மறைவு - ஜோஸப் ஸ்டாலின் - வெளிநாட்டுக் கொள்கைகள் - ருஷிய எல்லை பிரிவு - உள்நாட்டு சமூக மாறுதல்கள் - பொருளாதார திட்டங்கள் - ஸ்டாலின் - டிராட்ஸ்கி தகராறு - சமீபகால நிகழ்ச்சிகள் - முடிவு.

பீடிகை

'Yea, Russia is a Sphinx' 'ஆம், ருஷ்யா ஒரு ஸ்பின்க்ஸே.' இந்த வாக்கியம் 'அலெக்சாண்டர் புளாக்' என்ற ருஷிய கவியின் பாட்டொன்றில் காணப்படுகிறது. இந்தக் கவி 1921ல், அதாவது ருஷிய புரட்சிக்குச் சிறிது பின்பு இருந்தார். இதன் பிறகு சுமார் இருபதாண்டிற்கு மேலும், முக்கியமாக சில வாரங்கட்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட ருஷிய ஜெர்மானிய ஒப்பந்தத்திற்கு பிறகு, ருஷியாவை ஒரு மாயம் (Enigma) என்றே உலகத்தார் முடிவு கட்டியிருக்கிறார்கள். ஆனால் இந்த இருபது வருஷ காலத்திலும் ருஷ்யாவில் ஆதிக்கஞ் செலுத்தி வந்திருக்கும் சோவியத் சர்க்கார் ஒருவித மாயை போல் இருந்திருப்பதில் அதிசயமேயில்லை. ஏனெனில் அவர்கள் பட்ட கஷ்டங்கள் பல; சோவியத் லக்ஷியங்கள் உலகத்திற்கே புதியனவாயிருந்தன. 1917ல் நிகழ்ந்த பிரமிக்கத்தக்க புரட்சியை காப்பாற்றுங் கோரிக்கையொன்றையே ருஷியா கடைப்பிடித்திருந்திருக்கிறது. அதன் சர்க்காரின் அயல் நாட்டுக் கொள்கையும் இக்கோரிக்கையையே அடிப்படையாகக் கொண்டிருந்திருக்கின்றது. சமீபத்தில் ஸ்ரீமதி விண்லே சுட்டிக் காட்டிய படி சென்ற யுத்த காலத்தில் ப்ரெஸ்ட்-லிடோவ்ஸ்க் ஒப்பந்தம் செய்யும் போது ருஷியாவானது அநேக பிரதேசங்களை விட்டுக் கொடுத்தது சோவியனிஸ்டு புரட்சியைக் காப்பதற்குத் தேவையான சமாதானத்தைப் பெறுவதற்கேதான். அது ஒரு காலம். இப்பொழுது, ஜெர்மனியால் தாக்கப்பட்ட போலந்தில் ஒரு பாகத்தை எடுத்துக் கொண்டும், தென் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடையே பரபரப்பு உண்டாக்கியும்,

வட ஐரோப்பிய நாடுகளிலும் தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளவும், ருஷியா ஏற்பாடு செய்கிறதிலிருந்து சென்ற மகா யுத்த கால அடக்கத்தை எவ்வளவு தூரம் கைவிட்டு, தைரியத்துடன் பொதுவுடமை சர்க்கார் செல்வாக்கை வெளி நாடுகளில் பரப்ப எவ்வளவு ஆவலாக இருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. ஆகையினுல் ருஷிய சரித்திரத்தில் இப்போது முக்கியமானதொரு அத்தியாயம் எழுதப்படுகிறதென்று சொல்லலாம். இக்காரணத்தை முன்னிட்டு, சோவியத் சமூக வளர்ச்சி விபரத்தை இக்கட்டுரையில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜாரிஸ்டு ருஷியா

சென்ற மகாயுத்த காலத்தில் ருஷியாவில் நடந்த புரட்சிக்கு, அத்தேசத்திலாதிக்கம் செலுத்தி வந்த ஜார் மன்னனின் அட்டூழியங்களினுலேற்பட்ட மனக்கசப்பும் அப்பொழுது நிகழ்ந்த பஞ்சமுமே காரணம். ஜார் பட்டத்தை முதன் முதலாவதாக ஏற்றவர் 16-வது நூற்றாண்டில் அரசு புரிந்த இவான் என்ற கொடுங்கோலன். 1918ல் தன் பிரஜைகளால் சுட்டுக்கொல்லப்பட்ட கடைசி ஜாரின் பெயர் நிக்கோலஸ். 1547லிருந்து 1918 வரை ருஷியாவில் ஆண்ட ஜார்களில் இரண்டொருவரை இங்குக் குறிப்பிடலாம். 1703ல் துறைமுகப் பட்டினமான ஸெயின்ட் பீடர்ஸ் பர்க் என்ற நகரத்தை உண்டாக்கிய பீடர் தி கிரேட் என்ற ஜார் 1672லிருந்து 1725 வரை ஆட்சி புரிந்து ருஷியாவை ஒரு பெரிய தேசமாக்கினுர். (ஸெயின்ட் பீடர்ஸ் பர்க் நகரம் 1918 வரை பெட்ரோகிராட் என்ற பெயருடன் ருஷியாவிற்கு தலைநகராயிருந்தது. இப்பொழுது லெனின் கிராட் என்ற பெயருடன் விளங்குகிறது). பீடருக்குப் பிறகு வந்த மன்னருள் இரண்டாவது காதரின் (1729—1796) என்ற ஜாரினு மிகவும் பிரசித்திபெற்ற அரசியே. அவள் காலத்திலும் அவள் பரம்பரையில் தோன்றிய ஜார்கள் காலத்திலும் ருஷியாவானது ஐரோப்பாவில் மட்டுமன்றி ஆசியாவிலும், சைபீரியா முதலிய பிரதேசங்களைக் கைப்பற்றி நெப்போலிய சகாப்தத்தில் வல்லரசுகளிலொன்றாய் விளங்கிற்று. கோகல், டால்ஸ்டாய், டஸ்தாவ்ஸ்கி முதலிய அறிஞரும் அத்தேசத்தில் சென்ற நூற்றாண்டில் தோன்றினர். ஆனுல் ஜனங்களின் க்ஷேமலாபங்களைக் கோரும் அரசாங்கமாயில்லாததால் ஜாரின் கவர்ன்மெண்டின் பேரில் அதிருப்தியே இருந்து வந்தது. 1883ல் இறந்த மார்க்ஸ் என்ற பிரபல யூதரால் வளர்க்கப்பட்ட பொதுவுடமை வேதாந்தம் ருஷியாவிலும் பரவியது. அதிகார வர்க்கத்தின் பயமிருந்தும் அனேகர் அக்கறையாக மார்க்ஸீய கொள்கைகளை ஆராய்ந்தனர். ஜனங்களுக்கு தம் அதிருப்தியை வெளியிட சாதகங்கள் இல்லாமையால், ரகசிய அரசியல் ஸ்தாபனங்கள் ருஷியாவில் தோன்றின. இதனிடையில் பெரிய ஐரோப்பிய தேசமானுலும் ருஷியா 1905ல் ஜப்பானியருடன் செய்த யுத்தத்தில் தோல்வி யடைந்தது. இவ்வபஜயத்தினுல் ருஷிய மக்களிடையே பரபரப்பும், ஆத்திரமும் வளர்ந்தன.

1905ல் ஏதோ தெய்வம் போல் ஒரு மூட பக்தியுடன் கொண்டாடப்பட்டு வந்திருக்கும் ஜாரிடம் பசியால்

வாடிய கூட்டமொன்று அமைதியுடன் உணவு கேட்கச் சென்ற தறுவாயில் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இந்த அக்கிரமத்தின் பயனாக தேச முழுவதும் 'அரசியல் வேலை நிறுத்தம்' செய்யப்பட்டது. ஆலைத் தொழிலாளிகள் இதில் முக்கிய பங்கெடுத்து, நகரங்களிலே ஒவ்வொரிடத்திலும் சோவியத்துகள் என்ற கௌன்சில்களை ஏற்படுத்திக் கொண்டனர். பிற்காலத்தில் பெயரும் கீர்த்தியும் பெற்ற டிராட்ஸ்கி என்பவர் பீடர்ஸ்பர்க் சோவியத்தின் தலைவரானார். ருஷிய சரித்திரத்திலேயே முதன் முதலாக ஜார் மன்னர் தன் ஜனங்களுடன் சமரசமேற்படுத்த வேண்டியதாயிற்று. ஏதோ டூமா என்ற சபை, முதலிய சின்னஞ்சிறு சீர்திருத்தங்களை வழங்கினாராயினும் அடக்குமுறையும் ரகசிய போலீஸ் உபத்திரவமும் நாட்டில் அதிகமேயாயின. அடக்குமுறை காலத்தில் பிரான்ஸிலிருந்தும் ருஷிய சர்க்காருக்குப் பணவுதவி கிடைத்ததாகவும் பிற்பாடு தெரிய வந்தது.

இந்த 1905ம் வருஷ புரட்சி முக்கியமானதே. ஏனெனில் 1917ல் நடக்கப்போகும் புரட்சிக்கு ஒரு ஒத்திகை போல் தொழிலாளர் 1905ம் வருஷ சம்பவங்களில் பங்கெடுத்துக் கொண்டனர். 1917ல் பிரபல வீரராக விளங்கிய டிராட்ஸ்கி என்பவரும் 1905ல் அரிய தொண்டு புரிந்தார். ஜாரின் ஆதிக்கத்திற்கு ஒருவகையில் சாவு மணியும் அடிக்கப்பட்டது. இது மட்டுமின்றி பிரபல ருஷியரான லெனின் நாடு கடத்தப்பட்டார். அவர் ஒரு உபாத்தியாயரின் புதல்வர்; பள்ளிக்கூடத்தில் மாணவராயிருக்கும் போதே அதிகார வர்க்கத்தை எதிர்த்து நின்று சைபீரியாவிற்கு அனுப்பப்பட்டு 1900ல் விடுதலையடைந்து லண்டன், பாரிஸ் முதலிய நகரங்களில் நெடுநாள் தங்கிவிட்டு 1905ல் தாய்நாடு திரும்பிய அவர் புரட்சிக்கப்புறம் தாண்டவமாடிய அடக்கு முறை காலத்தில் வெளியேறி ஸ்விட்ஜர்லாந்து தேசத்தில் வசிக்கத் தீர்மானித்தார்.

சென்ற மகாயுத்தம்

1914ம் வருஷத்தில் ஜூலை மாதத்தில் செர்பியாவை ஆஸ்திரியா தாக்க செர்பியாவுடன் ஜார் கவர்ன்மெண்டார் சேர்ந்துகொண்டு ஆஸ்திரியா மேலும் அதனுடன் சேர்ந்த ஜெர்மனி மேலும் யுத்தம் தொடுத்தனர். கிழக்கு ப்ரஷ்யாவையும் ஆஸ்திரியாவையும் படையெடுத்தும் ஒன்றும் அவர்களால் சாதிக்க முடியவில்லை. டானன் பெர்க் என்ற இடத்தில் நடந்த ஒரு சண்டையில் ஜெர்மானியருடன் ருஷியர் பெருந்தோல்வியடைந்தனர். ருஷிய ஜார் நிக்கோலஸ் சில விஷயங்களில் நல்ல பெயர் வாங்கினவர். ஏனென்றால் 1899ல் சர்வ தேசக் கூட்டமொன்றை ஹேக் நகரில் கூட்டிய பெருமையுடன், இங்கிலாந்துடன் 1907ல் செய்து கொண்ட உடன்படிக்கை வேறு அவரின் புத்தியை தெளிவுறக் காட்டியது. மகாயுத்தமாரம்பித்ததும் ருஷியாவில் மதுவிலக்குத் திட்டமொன்று அவர் கொண்டு வந்ததாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறு ஐரோப்பிய சதுரங்கத்தில் பெயர் பெற்றும் யுத்தத்தில் அடைந்த அபஜயத்துடன், மற்றும் சில விஷயங்களும் அவரினு திக்கத்தை சீர்குலைக்கலாயின.

ஸ்விட்ஜர்லாந்தில் வசித்து வந்த லெனின் சும்மாயிருக்கவில்லை. 1905 புரட்சிக்கப்புறம், மார்க்ஸீயர் பலர் நாடு கடத்தப்பட்டனராயினும் மிஞ்சிய சிலர் தீவிரமாக சோஷலிஸ்டு கொள்கைகளை அவலம்பித்து வந்தனர். மார்க்ஸீயம் நகரத்து தொழிலாளர்க்கு ஏற்ற திட்டமாக இருந்த போதிலும் ருஷியாவில் ஜனங்களில் பெரும்பாலோர் விவசாயிகளாகவே இருந்தமையால் கிருஷிகரிடையே மார்க்ஸீய சமவுடைமைக் கொள்கைகளை எப்படி அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவது என்பதைப் பற்றியே லெனின் சிந்தித்து வந்தார். 1905ல் கூட நகரத்தினர் மட்டுமே புரட்சியில் சிரத்தை காட்டியது பிசகு என்றும் எந்த இயக்கத்திலும் பெரும்பாலோரான விவசாயிகள் பங்கெடுக்க வேண்டியது அவசியமென்றும் அவருக்குத் தோன்றியது. ருஷியாவுக்குத் திரும்ப தருந்த சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

ருஷியா யுத்தத்தில் கலந்ததே பிசகு என்று லெனின் கருதியிருந்தாராகையால் யுத்தத்தில் ஜாருக்கேற்பட்ட அபகீர்த்தி அவர் எதிர்பாராததன்று. தளபதிகள் திறமையற்றவர்களாயிருந்ததால் ருஷியர்படுதோல்வியடைந்ததுமில்லாமல் ஏராளமான ஜனச் சேதமும் ஏற்பட்டது. பெருஞ் செலவுகளாலேற்பட்ட வரிச்சுமையுடன், பஞ்சத்திலேங்கி வறுமைப்பட்ட ஜனங்கள் தவிக்கும் போது நகரங்களில் முதலாளி வர்க்கம் கொள்ளை லாபத்தை யடைந்து கொழுத்து வரவே கிருஷிகருக்கும், யுத்தத்தில் தியாகம் செய்த வீர மக்களுக்கும் சொல்லொணா ஆத்திரம் உண்டாயிற்று. ஜாரரசனின் அட்டூழியங்களுடன் ராஜ குடும்பத்தை மேலும் சீர்குலைக்க ரஸ்புடீன் என்ற ஒருவனும் தோன்றினான்.

கபட சன்னியாசி ரஸ்புடீன்

இந்த ரஸ்புடீன் ஒரு படிப்பில்லாத சன்னியாசி. சைபீரியாவில் பிறந்து வளர்ந்து, தாடி வளர்த்து சில யோகாப்பியாசத்திற்கிடையில் துஷ்கிருத்திய பாபச் செய்கைகளே ஞானமார்க்க சாதனங்கட்கு வழி என்ற அற்புத முடிவுடன் ராஜசபையை யடைந்து அரசனின் நோய்ப்பட்ட ஏகபுதல்வனொருவனை குணப்படுத்துவதாகச் சொல்லி சமஸ்தானத்தில் அபரிமிதமான சன்மானம் பெற்று செல்வாக்குடன் காலத்தைப் போக்கினான். பட்டம் பதவிகளனைத்தும் அவன் கையிலிருந்தன. அளவிடாத லஞ்சங்கள் பெற்று கவர்ன்மெண்டின் ஒழுக்கத்தைச் சீர்குலைத்து, ராஜ குடும்பத்தையும் கெடுத்து மிகவும் செருக்குற்று சுமார் 12 வருஷ காலமாகக் கொழுத்து வாழ்ந்து கொண்டிருந்தான். இவனிடம் வெறுப்புற்ற ருஷியர் 1916ம் வருஷம் டிசம்பர் மாதம் 15ந் தேதியன்று அவனை ஒரு விருந்திற்கழைத்து சூழ்ந்து கொண்டு தன்னைத்தானே சுட்டுக் கொள்ளும்படி சொல்லியும் அவனிசையாததால், ராஜவம்சத்தைச் சார்ந்த டிமிட்ரி பவ்லோவிட்ச் என்பவரால் சுட்டுக் கொல்லப்பட்டான். அவன் ஒழிந்தும், ஜாரின் கொடுமையும் அட்டகாசமும் அதிகமேயாயின. உணவுப் பஞ்சம் ஒரு பக்கம், தொழிலாளரின் அதிருப்தி மற்றொரு பக்கம். இவை ரஸ்புடீன் ஒழிந்த சில வாரத்திற்குள் புரட்சிக்குக் கொண்டு வந்து விட்டன.

1917: மார்ச்சு-நவம்பர்-புரட்சிகள்—லெனின் வருகை-ஜார் வீழ்ச்சி

1917ல் மார்ச்சு மாதத்தில் தலைநகரான பெட்ரோகிராட் பட்டணத்தில் ஆலைத் தொழிலாளரிடையே புது உணர்ச்சி யொன்று எழுந்தது. ஒரு நாள் ஆலைகளில் வேலை செய்யும் ஸ்திரீகள் வேலை நிறுத்தம் செய்து உணவு வேண்டுமென்று கதறி ஆரம்பித்தனர். கிளர்ச்சியை யடக்க அனுப்பப்பட்ட ராணுவம் தொழிலாளரைக்கூட மறுத்து கூட்டத்தை அடக்க வந்த போலீஸாரையும் சர்க்கார் மந்திரிகளையும் கைது செய்து சிறையிலிருந்த ராஜீயக்கைதிகளை விடுவித்து விட்டனர். இவ்வளவு காரியமும் தலைவரொருவர் இல்லாமல் பெட்ரோகிராட் நகர வாசிகளே செய்து முடித்தனர். இவ்வியக்கம் மாஸ்கோ போன்ற இதர நகரங்களுக்கும் பரவிற்று. ஜார், ராணுவச் சட்டத்தைப் பிரயோகிக்கும் நிலைமையைச் சமாளிக்கக் கூடாமல், ராணுவ தளபதிகளின் வேண்டுகோளுக் கிணங்கி பட்டத்தைத் துறந்தார். அவரும் தன் குடும்பத்தினருடன் சிறையிலடைப்பட்டனர். (மார்ச்சு 1917).

இவ்வாறேற்பட்ட நிலைமையை எப்படி பயன்படுத்திக் கொள்வதென்று மட்டும் சோவியத்துகளுக்குத் தெரியவில்லை. ஜாரரசனால் 1905ல் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்ட டூமா சபை யொன்று இருந்ததால் அச்சபையங்கத்தினரை யணுகி அவர்களின் கமிட்டி யொன்றை ஒரு ராஜவம்ச கனவான் கீழ் ஸ்தாபித்து அதிகாரத்தை வகிக்க ஏற்பாடு செய்து தொழிலாளரும் தங்கள் சோவியத் கவுன்சிலர் மூலமாக புதிய சர்க்காரின் நிர்வாகத்தை மேல் பார்க்கலாயினர். இப்படி இரட்டையாட்சி யொன்று ஏற்பட்டது.

இச்சம்பவங்கள் ஸ்விட்ஜர்லாந்திலிருந்து வரும் லெனினுக்கு அறிவிக்கப்பட்டவுடன் அவர் ருஷியாவிற்குத் திரும்பத் தீர்மானித்தார். ஆனால் எப்படி திரும்புவது? ஏதோ அச்சமயத்தில் அவர் ருஷியா திரும்பினால் குழப்பம் அதிகரிக்கலாமென்ற எண்ணத்துடன் ஜெர்மன் சர்க்கார் அவரை ரகசியமாக ஸ்விட்ஜர்லாந்திலிருந்து ருஷிய எல்லையில் கொண்டு சேர்த்தனர். லெனின் தொழிலாளர்களை, உபயோகமற்ற டூமாவை அணுகினதற்குக் கண்டித்து, கையில் கிடைத்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாததற்கு வருந்தி, முதலாளி வர்க்கத்தை ஒழிக்க வேண்டியதின் அவசியத்தையும் அதற்கு கிருஷிகரினுதவியுடன் போர் செய்துதான் ஆக வேண்டியதென்பதையும் உணர்த்தி, தேச மக்களினுதரவைப் பெற சுமார் ஆறு மாதங்களுக்கு அரும்பாடுபட்டார்.

கெரேன்ஸ்கி ஆதிக்கம்

கவர்ன்மெண்டுக்கும் சோவியத்துக்கும் அபிப்பிராய பேதமேற்பட்டது. சோவியத்துக்காரர் சமாதானத்தையே விரும்பினர். கிருஷிகர் நிலம் வேண்டுமென்றனர். தொழிலாளர் தினம் 8மணி நேரமட்டும் வேலை செய்ய வேண்டுமென்ற திட்டம் விரும்பினர். ஆனால் சர்க்காரோ யுத்தத்தை நடத்த வேண்டுமென்ற பிடிவாதத்துடன் இருந்தனர். இச்சமயம் சர்க்கார் தலைவரா யிருந்தவர் அலெக்

சாந்தர் கெரென்ஸ்கி என்ற ஒரு வாக்குச் சாதுரியமுள்ள வக்கீல். அவர் நேச தேசங்களான இங்கிலாந்து பிரான்சு தேசங்களைத் திருப்தி செய்வதற்கு வேண்டி ஜெர்மெனியைத் தாக்க ஏற்பாடு செய்தார்; ஆனால் அம்முயற்சி பலிக்கவில்லை. யுத்தத்தில் யாருக்கும் மனமில்லை; சமாதானமே கோரப்பட்டது; மிதவாத சர்க்காருக்கும், முற்போக்காளரான தொழிலாளிக்கும் தகாறு பெருகி, சர்க்காரின் மதிப்புப்போய், தேசத்தில் அபரிமிதமாய்த் தோன்றியுள்ள சோவியத்துகளின் மறு வொப்ப மில்லாமல் சர்க்காருத்திரவுகளுக்கு ஒரு பிரதேசத்திலும் மதிப்பே யில்லாமல் போய் விட்டது. மேன் மேலும் பரவி வரும் நிலைக் கண்டு வெருண்ட நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களைப் பகிர்ந்து பிரித்து உற்றுறவினர்க்குள் பகிர்ந்து கொடுத்து பினாமி சொந்தக் காரர்கள் பலரை சிருஷ்டிக்க வாரம்பித்ததால் அவர்கள் பேரில் அருவருப்புக் கொண்ட சோவியத்துகள் அத்தகைய நிலப் பரா தீனங்களைத் தடுத்து சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். ஆனால் மிதவாதிகளைக் கொண்ட சர்க்கார் இக்கோரிக்கையை நிறைவேற்றி வைக்க இணங்கவில்லை. கிருஷிகர் தாங்களே முயற்சி யெடுத்து நிலச்சுவான்தாரைக் கைது செய்தும், ஏராளமான நிலங்களையும் கைப்பற்றினார்கள்.

பொதுவுடமை சர்க்கார் ஸ்தாபிதம்

சர்க்காரின் பேரிலேற்பட்டுள்ள அதிருப்தியை நன்கு உபயோகப்படுத்திக் கொள்ளத் தீர்மானித்த லெனினும், இதற்குள் நாடு திரும்பிய டிராட்ஸ்கியும் கிளர்ச்சியை வெகு தூரம் பரப்பினார்கள். சர்க்காரின் எதிர்ப்பிரசாரம் பலிக்கவில்லை. ஜனங்களின் ஆத்திரமே அதிகமாயிற்று. தந்திரமாக நவம்பர் ௴ (1917ம்) தேதி புரட்சி செய்து கவர்ன்மெண்டைக் கைப்பற்ற லெனின் ஏற்பாடு செய்து அன்றைய தினமே பாங்குகள், டெலிபோன்கள், முதலிய சர்க்கார் அம்சங்களையும் சோவியத்துகள் கைப்பற்றவே கெரென்ஸ்கி ஆதிக்கம் தானாகவே கரைந்து விட்டது; கெரென்ஸ்கியும் நாட்டை விட்டு வெளியேறினார். அதிகாரத்தை சோவியத்து கைப்பற்றினதும் லெனின் பிரதம அதிகாரியானார். டிராட்ஸ்கி வெளிநாட்டு மந்திரியாக நியமிக்கப்பட்டார். இவ்வாறாக உலக சரித்திரத்திலேயே முதன் முதலாக ஏழைத் தொழிலாளிகளின் சர்க்காரொன்று ருஷியாவில் ஸ்தாபிக்கப் பட்டது.

பொது வுடமைத் தத்துவங்களை யடிப் படையாகக் கொண்ட இந்த புதிய சர்க்காருக்கு முக்கியமாக வேண்டியது சமாதானமாதலால் யுத்தத்தை விட்டு விலகாமல் புரட்சியைக் காப்பாற்றுவது கஷ்டம் என்று தென்படவும் 1918 மார்ச்சு மாதத்தில் ப்ரெஸ்ட்—லிடவ்ஸ்க் என்ற இடத்தில் ஒப்பந்த மொன்று செய்யப்பட்டது. அதன்படி ருஷியா சில பிரதேசங்களை இழக்க வேண்டியதாயிற்று. போர்முனையிலிருந்து வீடு திரும்பிய வீரரைத் திருப்தி பண்ண வேண்டியதாயிற்று; அவர்கள் கோரியது நிலம். சமவுரிமைக்கொள்கைகளை நிலைநிறுத்த முதலாளிகளின் பணத்தையும், நிலச்சுவான்தாரின் சொத்தையும், மத ஸ்தாபன ஆஸ்திகளையும் பறிமுதல்செய்ய

ஏற்பாடாயின. புதியசர்க்காருடன் ஒத்துழைக்க மறுத்த சிப்பாய்களையும் உத்தியோகஸ்தர்களையும் லெனின் வெளியேற்றினார். இவ்வாறு லெனின் கண்ணும் கருத்துமாகத் தன் அதிகாரத்திற்குப் பலம் தேடினார்.

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சு தேசத்தில் நடந்த புரட்சியை பயன் படாமல் செய்ய இதர நாடுகள் எப்படி முயற்சித்தனவோ அவ்வாறே ருஷிய போல்ஷிவிக்காரர்களை சோவியத்து சர்க்காருக்கு விரோதமாக, மேனாடுகள் கிளர்ச்சி செய்யப் பின் வாங்கவில்லை. ஜெர்மானியர் உபத்திரவம் கொடுத்தனர். செக் துருப்புகள் ருஷியாவைக் கடக்க வேண்டி பிரயாணம் செய்யும் போது எகடெரின்பர்க் என்ற இடத்தில் சிறைப் பட்ட ஜாரையும் மீட்க எத்தனித்தனர். ஆனால் அவரையும் அவர் குடும்பத்தாரையும் ருஷியர் 16-7-18ல் முப்பது விநாடியில் சுட்டுக் கொன்றனர். இச் சம்பவத்தை பெர்னார்டுஷா 'உலக சரித்திரத்திலேயே நிகழ்ந்துள்ள காருண்ணியமான ராஜவதை' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சுமார் மூன்று மாதத்திற்கப்பால் ஐரோப்பிய யுத்தமும் முடிவு பெற்று நவம்பர் 11, 1918ல் ஐரோப்பிய சமரசம் ஏற்பட்டது. ஆனால் லெனின் சர்க்கார் 1919-20 வருஷங்களில் உள்நாட்டுக் கலவரங்களையும் வெளி நாட்டுப் பிரசாரத்தையும் நிர்வகித்து சமாளிக்க வேண்டியதாயிற்று. மேனாடுகளின் ஏழை மக்கள் ருஷியப் புரட்சிகளை அனுதாபத்துடன் கவனித்து வந்ததால், ருஷிய சர்க்கார் ஏழைகட்குச் செய்யும் சேவையை தைரியமாகக் கண்டிக்க மற்ற கவர்ன்மெண்டார்களுக்கு முடியவில்லை. ஏனென்றால் ருஷிய கொள்கைகள் தங்கள் நாடுகளிலும் பரவி விடுமோ வென்று அவர்கள் பயந்தார்கள். ஆனால் எதிரிகளிருக்கிற மட்டும் அஜாக்கிரதையாயில்லாமல் ஒரு சைனியத்தைத் திரட்ட வேண்டியதாயிற்று. டிராட்ஸ்கி சுமார் ஒரு வருஷத்திற்குள் திறமையுடைய ஒரு சைனியத்தை உண்டாக்கினார். 1919 டிசம்பரில் 435,000 வீரடங்கிய இச்சைனியம் வெகுவாக விரிந்து அடுத்த வருஷ இறுதியில் 53.000,000 வீரருடன் தேசிய உணர்ச்சி ததும்பிய ஒரு பெரும் பக்கபலமாயிற்று. இதனவசியம் ஏற்பட்டது ஏனென்றால் 1920ல் போலந்து ருஷியாவினிடமிருந்து சில பிரதேசங்களைக் கைப்பற்றினதால் அதைப்போன்ற நிலைமை மறுபடியும் ஏற்படாமலிருப்பதற்கு ருஷியா முன்னெச்சரிக்கையாகவேயிருக்கத் தீர்மானித்தது.

உள்நாட்டு விஷயங்களிலும் சிறிது மாறுதல்களைச் செய்ய நேரிட்டது. தேசத்திலுள்ள நிலங்களில் விளைந்த மகசூலைப் பொதுவுடமை கொள்கைப்படி சர்க்காரே எடுத்துக் கொள்ள வேண்டியதனால் பண்படுத்தி சிரமப்பட்டவருக்கு அக்கரை குறைய வாரம்பிக்கவும், சிற்றளவிலே சொந்த வியாபாரம் செய்ய தேவைக்கு மேல் விளைந்த பொருளை பாடுபட்டவரே தங்களிடம் வைத்துக் கொள்ள அனுமதித்து ஒரு பொருளாதாரத் திட்டம் செய்யப்பட்டது. ஆனால் தேசத்தின் இறக்குமதி, ஏற்றுமதி, வெளிநாட்டு வியாபாரம் எல்லாவற்றையும் சோவியலிஸ்டு வேதாந்தப்படி சர்க்காரே கவனித்து வந்தனர். 1921ல் இங்கி

லாக்குடன் ஒரு வியாபார ஒப்பந்தமும் செய்து கொண்டனர்.

லெனின் மறைவு

இவ்வாறாக ருஷிய சமூகத்தைத் திருத்தி யமைத்த லெனின் 1923ம் வருஷத்தில் நோயுற்றார். அவருக்கு வயது சுமார் 53 தான். ஆனாலும் அவருடைய ஆயுள் பூராவும் தேகத்திற்கு சிரமமும், மனதிற்குப் பலத்த வேதனையும் கொண்டது மல்லாமல், சுமார் 30வருஷம் பல வெளிநாடுகளில் சஞ்சரிக்க வேண்டி யிருந்ததாலும், புரட்சி காலங்களி லேற்பட்ட சிரமத்தாலும் அவருடைய தேகாரோக்கியம் குன்றி யிருந்தது. உயிருள்ள வரை எப்போதும் பாது காப்புடனேயே வாழ வேண்டி யிருந்தது. அவர் 1924ல் ஜனவரி 31ம் தேதியன்று உயிர்நீத்தார். ருஷிய மக்கள் ஒரு பிரம்மாண்டமான கம்பீர சமாதியொன்று கட்டி அவரைக் கௌரவித்தனர். அவர் ஆயுட் காலத்திலேயே பெட்ரோகிராட் நகரின் பெயர் லெனின் கிராட் என்று மாற்றப் பட்டது.

லெனின் ஒரு உபாத்தியாயரின் புதல்வர் என்று ஏற்கனவே கூறப் பட்டது. அவர் லத்தீன் பாஷையில் பாண்டித்திய முள்ளவரல்லாமல் ஆங்கிலம் முதலிய இதர பாஷைகளையும் பயின்றார். அவருடைய வாழ்க்கைத் துணைவியான மடேம் குருப்ஸ் கையா சில மாதங்கட்கு முன்புதான் 78 வயதில் காலமானார்.

லெனின் சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்களை உபயோகித்தவ ரல்லவென்றும், மதுபானமும் இடையா தென்றும் தெரியவருகிறது. இவ் விஷயங்களில் ஹிட்லர், பெர்னர்டுஷா முதலானோரை யொத்திருந்திருக்கிறார். சொல்வன்மை அதிகமா யில்லாவிட்டாலும் அவர் பெரிய வேதாந்தியாக இருந்ததுமன்றி, ஒரு கர்ம யோகியாகவும் இருந்ததால் சலியா வுழைப்புடன் கண்ணும் கருத்துமாக ருஷியாவின் தற்கால வாழ்வுக்கு அடிகோல முடிந்தது.

ஜோசப் ஸ்டாலின்

லெனின் மறைந்த பிறகு சோவியத் சமவுரிமைக் கக்ஷியின் காரியதரிசியும், சில காலம் ப்ரவ்டா என்ற பத்திரிக்கைக்கு ஆசிரியராக இருந்திருந்த வருமான ஜோஸப் ஸ்டாலின் ருஷ்ய சர்க்காரின் தலைவரானார். அவர் ஒரு சக்கிலியரின் புதல்வர். ஆகையினாலே எளிய குடும்பத்தையே சார்ந்தவர். 17 வயதிலிருந்தே அரசியல் வாழ்வில் ஈடுபட்டு பத்திரிகைத் தொழிலிலும் அனுபவம் பெற்றவராதலால் புதிய ருஷிய சமூகத்திலுள்ள எல்லா பிரச்சினைகளுடனும் அவருக்கு பரிச்சயமுண்டு. இப்போது அவருக்கு 60 வயது ஆகிறது.

பொதுவுடைமைத் தத்துவங்களை உலகத்தில் பரப்புவதற்கு முன்னரே ருஷியாவிலேயே அவற்றை நன்கு பலப்படுத்த வேண்டுமென்று ஸ்டாலின் கருதினார். இதன் பொருட்டு தன் தேசத்தை எவ்வளவு தூரம் பொருளாதாரத் துறையில் சுபிக்ஷமாக்கக் கூடுமோ அவ்வளவு மட்டும் சிரமப் பட வேண்டியதவசிய மென்று முடிவு கட்டி 5 வருஷ திட்டங்களை வகுத்தார். ஆகவே புரட்சியினால் ஏற் பட்ட புதிய ருஷியாவில் சமூக

சமத்துவத்துடன், பொருளாதார சமத்துவமும் உண்டாக்கப் பட்டது. ருஷிய சரித்திரத்திலேயே முதன் முதலாக தேச மக்களுக்கே தேசத்திலுள்ள உரிமைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. முதல் 5 வருஷ திட்டம் 1928ல் ஆரம்பித்து 1932ல், அதாவது 4 வருஷத்திலேயே சம்பூர்ணமாக நிறைவேற்றி வைக்கப்பட்டது. பிறகு 1933ல் ஆரம்பித்த மற்றொரு 5 வருஷ திட்டமும் வெற்றிகரமாக நிறைவேறியிருக்கிறது. இத்திட்டங்களினம்சங்களையும் அவைகளாலுண்டான மாறுதல்களையும் கவனிக்குமுன் ருஷியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளைக் கவனிப்பதவசியம்.

அயல் நாட்டுக் கொள்கைகள்

1917 புரட்சிக்கப்புறம் ஜெர்மெனியும், நேசதேசங்களும் சோவியத் சமூகத்தை பரிகசித்து, அதன் சர்க்காரையும் ஏதோ ஜாதி பிரஷ்டம் செய்வது போல் தள்ளி வைத்தனர். யுத்தத்திற்கப்பால் ஸ்தாபிக்கப்பட்ட சர்வ தேச சங்கத்தில் ருஷியாவுக்கு இடமில்லை; 1922ல் கூடிய வாஷிங்டன் மகா நாட்டிற்கும் ருஷியருக்கு அழைப்பில்லை. இவ்வாறொதுக்கப் பட்ட ருஷியா 1922ல் ஜெர்மனியுடன் ரபெல்லோ உடன்படிக்கை யென்ற ஒப்பந்தம் செய்து கொண்டதும் மேனாடுகளில் ஒருவித கலக்கமுண்டாயிற்று. 1923ல் இங்கிலாந்திலேற்பட்ட முதல் தொழில் கக்ஷி கவர்ன்மெண்டு ருஷியாவின் நட்பை நாடினும், அந்தத் தொழில் கக்ஷி கவர்ன்மெண்டு அற்பாயுசு வாழ்வுடன் அந்த ருஷிய நட்பும் நின்றது. இங்கிலாந்தில் அதிகாரத்தையேற்ற புதிய சர்க்கார் ருஷியரை வெறுத்து, அவர்களின் லண்டனாபிசையும் சோதனை போட்டனர்.

அவ்வமயம் இதர தேசங்களிலும் ருஷியருக்கு இக்கட்டும் அவமரியாதையுமே கிடைத்தன. போலந்திலும், இத்தாலியிலும் அவர்களின் ஸ்தானிகர்கள் கொலை செய்யப்பட்டனர். ஆனால் சிறிது காலத்திற்கெல்லாம் நிலைமை மாறியது. ஜப்பானுடனும் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். 1926ல் சர்வதேச சங்கத்திலும் ஸ்தானம் பெற்று, அது முதல் லிட்வினவ் முதலியவர் மூலம் சங்கத்தினலுவல்களில் மிக்க சிரத்தை காட்டி வந்திருப்பது மல்லாமல், மற்ற தேசங்களைவிட ஆயுதப்பரிகரண சமாதான பிரயத்தனங்களிலும், சர்வ தேசக் கூட்டுப் பாதுகாப்பு லக்ஷியங்களிலும், சுகாதார, தொழில் முதலிய இதர திட்டங்களிலும் கௌரவமான பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 1928ல் பல தேசங்களிடையில் அமெரிக்க கெல்லாக்கும் பிரெஞ்சு பிரயண்டும் ஏற்படுத்திய அனுக்கிரமிப்புத் திட்டத்துக்கும் ஒப்பமிட்டு அதன் ஷரத்துகளை நிறைவேற்ற ஆற்றல் கொண்டு மிருந்திருக்கிறார்கள். கெல்லாக் ஒப்பந்தத்துடன் நிற்காமல் 1929ல் ஆப்கானிஸ்தானம், பாரஸிகம், துருக்கி முதலிய ஆசியா தேசங்களுடனும், போலந்துடனும், பால்டிக் நாடுகளான எஸ்தோனியா, லத்வியா, முதலிய தேசங்களுடனும் ஒப்பந்தங்கள் செய்து அவைகளுடன் மிக நட்புடனேயே ருஷியா இருந்து வந்திருக்கின்றது. பிரான்சுடன் 1922ல் ஒரு ஒப்பந்தமும், அதற்கு முந்திய வருஷத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட ஆங்கிலேய வியா

பார ஒப்பந்தமும் இந்த இரண்டு தேசங்களுடன் கட்டுநிலைக்கச் செய்து கொள்ளப்பட்டவை.

இவ்விடத்தில் ஆசிய நாடுகளிடம் ருஷியர் காட்டி வந்திருக்கும் அனுதாபத்தையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது. 1920ல் கிரேக்கருடன் கடும் போர் புரிந்த துருக்கியருக்கு ருஷியா உதவி புரிந்தது. இரண்டு வருஷத்திற்கப்பால் கமால் பாஷா அடைந்த வெற்றிக்கு ருஷிய உதவியே காரணம். ஆப்கானியருக்கும் ருஷியர் உதவியிருக்கிறார்கள்; 1919ல் ஆங்கிலேயருடன் செய்த சண்டையில் ருஷியர் அமீருக்கு உதவி புரிந்தனர். அமானுல்லா ஐரோப்பிய சுற்றுப் பிரயாணத்தின் போது மாஸ்கோவில் ருஷியரால் நன்கு வரவேற்கப்பட்டார். 1920-27 இந்த ஏழு வருஷங்களில் ருஷியர் துருக்கியுடனும் (1925) ஆப்கானிஸ்தானத்துடனும் (1926) பாரசிகத்துடனும் (1927) சமாதான உடன்படிக்கைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆப்கானியர் 1921ல் துருக்கியுடனும், 1927ல் பாரசிகத்துடனும் உடன்படிக்கைகள் செய்து கொண்டனர். இவ்வாறாக மேற்கு ஆசியாவிலுள்ள முஸ்லீம் தேசங்களெல்லாம் ஒரு முக்கிய சமாதான வட்டாரமாயின.

ஆசியாவின் கிழக்கு கோடியிலுள்ள ஜப்பானியருடனும் 1925ல் ருஷியர் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டனர். அதே வருஷம் சைனாவில் பீகிங் சர்க்காருடனும் ஒரு உடன்படிக்கை செய்யத் தீர்மானித்திருக்கையில் அந்தத் தேசத்திலுள்ள ஐரோப்பியர் ருஷியாவுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாகாது என்று பீகிங் சர்க்காரைத் தடுத்துவிட்டனர். ஆனால் ருஷியர், உடன்படிக்கையில் சேர்க்க ஏற்பாடாகியிருக்கும் ஷரத்துக்களை பகிரங்கமாக விளம்பரம் செய்ததுடன் சீன சரித்திரத்திலேயே சீன சர்க்கார் அயல் நாடுகளுள் முதன் முதலாக ருஷியாரால்தான் கௌரவமாகவும் சம அந்தஸ்துடனும் நடத்தப்பட்டிருப்பது தெளிவாயிற்று. பிறகு சீன மக்களின் வற்புறுத்தல் மேல் பிரஸ்தாப ஒப்பந்தம் ஊர்ஜிதப் பட்டது. சன்-யாட்-ஸென் ஏற்படுத்திய கவர்ன்மெண்டும் ருஷியருடன் சிநேகப்பான்மையே காட்டியிருக்கிறது. இவ்வாறாக சுதந்திரப் போரிலீடுபட்ட சீனருக்கு ருஷியா அநேக சலுகைகள் காட்டியிருக்கின்றது.

ருஷிய எல்லை பிரிவு

இப்பொழுது ருஷிய சர்க்காரின் பரந்த எல்லைகளைக் குறிப்பிடுவோம். மகாயுத்த காலத்தில் ப்ரெஸ்ட்-லிடவ்ஸ்க் உடன்படிக்கைக்குப் பிறகு ருஷியா 1809 முதல் தன்னாதிக்கத்திலிருந்த பின்லாந்தையும், 1721 முதல் தன்னிடமிருந்து வந்த எஸ்தோனியாவையும், அதனுடன் போலந்து, லத்வியா, லித்வேனியா முதலிய பிரதேசங்களையுமிழந்தது. 1922ல் ருஷ்யாவுடன், உக்ரேன் குடியரசும், வெள்ளை ருஷியா குடியரசும், ஆர்மீனியா, அஷ்பெர்பஞ்சன், ஜியார்ஜியா என்ற மூன்று பிரதேசங்களடங்கிய குடியரசு பெடரேஷனும், ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு சோவியத் சமஷ்டி யமைக்கப்பட்டது. சிறிது காலத்திற்கப்பால் உஸ்பெக், துருக்கோமான், தஜிக்கிஷ்டான் குடியரசுகளும் சேர்ந்தன. இவ்வளவு பெரிய

சமூகத்திற்கு அரசியல் திட்டமொன்று 1924ல் நிர்ணயிக்கப்பட்டது. இப்பொழுது சோவியத் ருஷிய பெடரேஷன் ஏழு குடியரசுகளின் யூனியனாக விளங்குகிறது. பாஷைகள், நாகரீகம், கலை, சமூக வித்தியாசங்கள் கொண்ட சுமார் 200 சமூகங்கள் இந்த மகத்தான சோவியத்து யூனியன் எல்லைக்குள் தங்களுக்கேற்ற பாதுகாப்புகளுடன் இருந்து வருகின்றன. ஐரோப்பாவிலிருந்து ஆசியா கண்டத்தின் மத்தியில் ஊடுருவிச் செல்லும் 5431 மைலுள்ள சைபீரியா ரயில்வேயுடன் 1933ல் 165,000,000 ஜனத்தொகையைக் கொண்ட சோவியத் குடியரசுகளின் யூனியனின் சர்க்கார் உலகத்திலேயே ஒரு சர்க்காரின் கீழேயில்லாத 8 241,921 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பெரிய பிரதேசத்தை யாண்டு வருகிறார்கள்.

உள் நாட்டுச் சமூகப் பொருளாதார திட்டங்கள்

ருஷிய பொருளாதார திட்டத்தில் நகரத்தையும் கிராம வாசிகளையும் ஒன்றாக இணைக்கக் கூடிய லக்ஷியங்கள் பிரதிபலிக்கின்றன. நகரத்திலிருக்கும் சௌகரியங்களை கிராமங்களிலேற்படுத்தி மின்சாரத்தினாலும், உழவுக்கு, டிராக்டர்கள் மூலமாகவும் ரேடியோ மூலமும் கிராம வாழ்க்கையே புது முறையில் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றது.

இத்துடன் ஸ்டாலின் நிர்ணயித்த விவசாய திட்டப்படி பெரிய கிராம விவசாயப் பண்ணைகளேற்பட்டன. பணக்காரர் தங்கள் கால் நடைகளை இழக்கவோ அல்லது தங்கள் கீழிருந்து வந்திருக்கும் எளிய பண்ணையாட்களுடன் கலந்து வேலை செய்யவோ நேரிடுமென்ற பயத்துடன் ஏராளமான கால் நடைகளைக் கொன்றார்கள். இப்பேற்பட்ட கஷ்ட நிலைமைகளையும் சமாளித்து ஒரு 5-வருஷ திட்டம் ஆரம்பித்து 4 வருஷத்திலேயே முடித்து 1933க்கும் 1937க்கும் மத்தியில் இரண்டாவது திட்டமொன்றும் நடத்தி வைத்திருக்கிறார் ஸ்டாலின். நெடு நாளாக அநாகரீகமாகக் கருதப்பட்ட தேசமொன்றை பத்து வருஷத்திற்குள் ஒரு மாபெரும் சமூகமாக மாற்றி வைத்த பெருமை ஸ்டாலினைச் சேர்ந்தது. முதலாளிவர்க்க மென்று சொல்லப்பட்ட உலக மத்தியில் சோஷியலிஸ்டு கொள்கைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வர அவர் பட்ட கஷ்டங்களை கவனித்தால் அவருடைய விடாமுயற்சியும் தேச பக்தியும் திகைப்பையே உண்டு பண்ணுகின்றன. அவருடைய விரோதிகளில் சிலர் ருஷியாவிலேயே யிருந்தனர். டிராட்ஸ்கி சமவுடைமைக் கொள்கைகளை உலகத்திலே பரப்ப வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார். ஆனால் ஸ்டாலின் இந்த அபிப்பிராயத்திற்கு செவி சாய்க்காமல், ருஷிய சமூகம் முதலில் பலப்படுத்தவே முயற்சித்தபடியால் டிராட்ஸ்கியும் நாடு விட்டு வெளியேற வேண்டியதாயிற்று என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

‘ஐந்து வருஷ’ திட்டங்களில் முக்கிய அம்சங்கள் சுரங்கங்கள் விருத்தி செய்தல், மின்சார திட்டம், ஆலைகள், வீடுகள், விவசாய அபிவிருத்தி, கல்விப் பெருக்கு இவைகள்.

திறம்பட்ட சர்வேயர்கள் இஞ்ஜினீயர்களைக் கொண்டு சிறப்பாய் நடத்தி வைக்கப்பட்டன. ஆலைகளைக் கட்டவும், ரஸ்தாக்களைப் போடவும், ரயில்கள் ஏற்படுத்தவும், ஜலபாசனங்களை விருத்தி செய்யவும் வேண்டிய திட்டங்கள் தயாரிக்கப்பட்டதும் அமெரிக்கருடன் அதுவும் குறிப்பாக போர்டு மோட்டார் கம்பெனியாருடன் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு தேவையான சாதகங்களைப் பெற முடிந்தது. மற்றும் சில கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. (உதாரணமாக, இரும்பு ஆலைகளிலுற்பத்தி செய்த எஞ்ஜின்கள் ரயில் போட்டு முடியும் வரை உபயோகிக்க இயலாமல் போயின.) தேவையான எண்ணெய் கிடங்குகள் காகஸஸ், காஸ்பிய பிராந்தியங்களில் கிடைத்தன. பாகு என்ற நகரம் எண்ணெய் ஸ்தலமாக சிறப்புற்றது. தேவைக்கு மேலே கிடைத்த எண்ணெயை இதர தேசத்திற்கு ஏற்றுமதி செய்யவும் செய்தார்கள். உக்ரேன் பிரதேசம் தானிய விளைவுக்குப் பெயர் பெற்றது. அனேக சுரங்கங்களும் விருத்தி செய்யப் பட்டன. தங்கமும் ஏராளமாகக் கிடைத்திருக்கிறது. தேவையான விமானங்களும் யுத்த தளவாடங்களும் தயார் செய்ய வசதிகளேற் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பல துறைகளிலும் ஏற்பட்ட தொழில் அபிவிருத்தியினால் அனேக நகரங்களும் தோன்றி யிருக்கின்றன, ஜனத் தொகையும் பெருகியிருக்கிறது. ட்ராட்ஸ்கிக்குப் பிறகு வரோஷிலாவ் என்பவரின் கீழ் ருஷியப் படைகளும் அபிவிருத்தி யடைந் திருக்கின்றன. இவைகளா லேற்பட்ட சமூகப் புரட்சியே முக்கிய மானது. ஜார்காலத்திய பஞ்ச நிலைமையே 1917 அதிர்ச்சிக்கு காரணம். இப்பொழுதோ ருஷிய தேசத்தில் வேலை யின்மை என்ற பிரச்னையே யில்லை யென்று சொல்லுகிறார்கள். வறுமைப் பிணியைத்தீர்க்க சோஷியலிஸ்டு திட்டங்களினால் தான் முடியும் என்ற அபிப்ராயமும் வலுத்து வருகிறது. ருஷியாவில் எண்ணிக் கையற்ற விஞ்ஞானிகளுக்கு வேலை யிருந்திருக்கிறது. பழைய வழக்கங்களிலும் மூட நம்பிக்கைகளிலும் உழன்று வந்த ருஷியருக்கு மதக் கோட்பாடுகள் சுறுசுறுப்பற்ற அபின் போன்ற மனப் பான்மையையே அளித்ததனால் மதத்தின் ஆதிக்கத்தைப் பெரிதும் குறைத்து விட்டனர். ருஷிய கல்வித் திட்டங்களும் உலகத்தாரின் மனதைக் கவர்ந் திருக்கின்றன. சிறை நிர்வாகம், சட்டஸ்தாபன சிக்ஷை முறைகள் முதலியவைகளிலும் சீர் திருத்தம் செய் திருக்கிறார்கள். ஆடவரும் பெண்டிரும் சரி சமமாக சகல உரிமைகளையும் அனுபவித்து தேசப் பாதுகாப்புக்கு உழைக்கிறார்க ளென்றும் தெரிய வருகிறது. விவாகரத்து, சுகாதார திட்டம், ஆலைத் தொழிலாளர் வேலை திட்டங்கள், சிறுவரைப் பேணுதல் முதலிய துறைகளில் அமோக மாக ருஷியர் முன்னேறி யிருக்கிறார்களென்பது உலகத்தாரால் ஒத்துக் கொள்ளப் பட்டிருக்கிற விஷயங்கள். அராபியர் போன்ற சில சிறுபான்மை சமூகங்களும் லத்தீன் எழுத்துக்களை ஏற்றுக் கொண்டதால் அப் பிரதேசங்களில் கல்வி பரவ சாதகமாய் இருந்திருக்கிறது. ரேடியோ, விஞ்ஞானம், கலை—இவைகளும் அபிவிருத்தி யாயிருக்கின்றன. ருஷியாவில் அனேக யூதர்களும் இருக்கிறார்கள். அவர்கள்

பிரோ—பிஜஜன் என்ற பிரதேசத்தில் ஒன்றாகக் குடியேறி தங்களுடைய வழக்கங்களை அனுஷ்டித்து பாலஸ்தீன யூதருக்கும இதுவரை கிட்டாத சுபிக்ஷத்தை யனுபவித்து வருகிறார்களென்றும் நாம் அறிகிறோம். இவ்வாறாக அபாரமாக சமூக சந்துஷ்டியை ருஷிய மக்களுக்குச் சித்திக்கும்படி ஸ்டாலின் செய்திருக்கிறார். இதனால் சகல விதத்திலும் முன்னேறியிருக்கும் எளிய ருஷிய தேசத்தில் பொருளாதாரத் துறையில் கூட்டுறவுப் பான்மையும் சமாதான முமே நிலவியிருக்கின்றன. தேசத்திலுள்ள எல்லாப் பொருள்களும் தேச மக்களுடைய வையாதலால் சமவுடைமைக் கொள்கைக்கு விரோதமாக பொருள்களைக் கைப்பற்ற முடனுவோர்களை மிகவும் கண்டிப்பாக மரண தண்டனையுடன் சிக்ஷிக்கிறார்கள். 1931ல் டஷிக்ஸ்தானில் சிலர் கிளர்ச்சி செய்யுங்கால் சோவியத் திட்டத்தால் அனுகூலங்கள் பெற்ற கிருஷிகருதவியில்லாமல் அக்கிளர்ச்சி வெற்றி பெறவில்லை. உழைப் போருக்கே உணவு என்ற தாரக மந்திரத்தையே ருஷியர் அடிப்படையாகக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

இவ்வாறு பல துறைகளிலும் சிறந்து விளங்கும் ருஷியாவின் அரசியல் திட்டத்தைக் கவனிப்போம். குடியரசுகளின் நாடு, நகரங்களிலும், தொழிற்சாலைகள் முதலியனவைகளிலுள்ள சோவியத்துகள் அதாவது கௌன்சில்களால் அவ்வப் பிரதேசங்களிலுள்ள காங்கிரஸுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடமிருந்து அகில ருஷிய சோவியத் காங்கிரஸுக்கு அங்கத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டு இவ்வங்கத்தினரால் ஒரு மத்திய நிர்வாக கமிட்டியொன்று ஏற்பட்டு அக்கமிட்டியிலிருந்தும் ஒரு கௌன்சில் நியமிக்கப்பட்டு, அக்கவுன்சிலின் அக்கிராசனர்தான் ருஷிய தேசத்து தலைவர் இவ்வாறு ஜனப் பிரதிநிதித்துவம் கொண்டவரின் அதிகாரமே ருஷியாவில் நடந்து வருகிறது. சமீபத்தில் பார்லிமெண்டு முறைகளையும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

சமீபகால நிகழ்ச்சிகள்

இவ்வாறாக் வடதுசாரி ஜனங்களையும் திருப்தி செய்யக்கூடிய விதத்தில் வெகு ஜாக்கிரதையாய் வளர்ந்து வந்த சோவியத் ருஷியாவை மட்டும் சமீபத்திலேற்பட்ட உலக வியாபார மந்தமானது பாதிக்கவில்லை. சில காலங்களாக ஐரோப்பிய தேசங்கள் ருஷியரின் நட்பை நாடியிருக்கின்றன. சென்ற யுத்தத்திற்கப்பால் ருஷிய தேசமட்டுமே சர்வ தேசத் துறைகளில் தன் கடமையைச் சரிவர செய்திருக்கிறது. மேலும் ஹிட்லரின் மிரட்டலும் அகம்பாவமும் ஐரோப்பிய நாடுகளில் பரபரப்பு உண்டு பண்ணி ருஷிய நட்பைக் கோரும்படி செய்து விட்டன. பிரான்ஸு கூட ஒப்பந்தம் செய்துக் கொண்டது. நாஜி ஜெர்மனிக்கு பயந்த ஜெக்கோஸ்லோவேகியாவும், போலந்தும் வேறு ஒப்பந்தங்கள் செய்து கொண்டன. ஆனாலும் இங்கிலாந்து போல் முதலாளித்துவம் வாய்ந்த தேசங்களுக்கு ருஷியாவின்மேல் பரிபூரண விசுவாசம் ஏற்படாததின் காரணமாக 1938ல் மூனிச் துரோக காலத்தில் ருஷியாவைக் கலக்காமல் ஜெக் பிர

தேசத்தைத் தியாகம் செய்ய வேண்டியதாயிற்று. பிறகும் இவ்வருஷவாரம்பத்தில் ருஷிய கோரிக்கைப்படி ஒரு சர்வதேச மகாநாடு கூட்டக்கூடவில்லை. சமீபத்தில் ருஷியருதவியை போலந்து நாடாமலிருந்து விட்டதன் பயனாக போலந்து ஜெர்மனிக்கு இரையாக வேண்டியதாயிற்று. இவ்வாறாக அலக்ஷியஞ் செய்யப்பட்ட ருஷியா சென்ற சில வாரங்களுள் மிகவும் பலம் பெற்றிருக்கிறது. ஹிட்லருடன் சமீபத்தில் ருஷியா செய்து கொண்ட ஒப்பந்தம் இங்கிலாந்து முதலிய தேசங்களில் ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கிறது. ஒழுங்காய் உலக சமாதானத்தையே கோரிய ருஷிய அயல் நாட்டுக் கொள்கையை முன்னிட்டு முக்கிய யோக்கியதாம்சம் பெற்ற ஹாலிபாக்ஸ் பிரபு போன்ற ஒரு பிரதிநிதியை மாஸ்கோவிற்கனுப்பி இங்கிலாந்து ஒரு ராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் இப்போது நடக்கும் யுத்தத்தை ஹிட்லர் ஆரம்பித்திருக்க மாட்டாரென்று அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனாலும் சென்ற சில தினங்களில் பிரிட்டிஷார் ருஷியாவுடன் வியாபார ஒப்பந்தமொன்று செய்து கொண்டிருக்கிறார்கள். இதன் மாதிரி இன்னும் சில ஒப்பந்தங்கள் ஏற்படலாமென்றும் தோன்றுகிறது. ருஷியாவானது ஜெர்மனியுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தால் தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டிருக்கிறது. போலந்தில் ஒரு பாகத்தைப் பிடித்து, அப்பிரதேசத்தை சோவியத் மயமாக்கி, கிருஷிகளுக்கு தலைக்கு 5 ஏகர் நிலமும் ஒரு பசுவும் கொடுத்து வருகிறார்கள் என்றும் அறிகிறோம். இந்த கோதானபூதானமெல்லாம் பொதுவுடமை தத்வத்தைப் பரப்பவே. இது மட்டுமன்றி தன் ஐரோப்பாவிலும் தன் செல்வாக்கைப்பரப்பி துருக்கியையும் தன்னிடம் நட்பாக விருக்கும்படி செய்து கொண்டிருக்கிறது. பால்டிக் பிரதேச நாடுகளான எஸ்தோனியா, லத்வியா, லித்வேனியா முதலியவைகளிலும் ரயில் சாதனங்களும் தேவையான இதர சலுகைகளும் ருஷியாவில் இப்போது கிடைத்திருக்கின்றன. வட மேற்கு எல்லையில் யுத்த தளவாடங்களும், ஆண்களும் தயார் செய்யவும் ஆரம்பித்திருக்கிறார்கள் ருஷியர். இத்துடன் நிற்காமல் பின்லாந்து தேசத்துடன் நடத்தி வரும் பேச்சு ஹேஷ்யங்களைக் கவனித்தால் உள்நாட்டு அமைதியின் காரணமாகத் தைரியமாய் அயல் நாடுகளில் செல்வாக்கைப் பரப்பி, கூடுமானால் சோவியத் கொள்கைகளை பரப்ப ஐரோப்பாவிலுள்ள • குழப்பத்தை ருஷியா பயன்படுத்திக் கொள்ள முயலுகின்றதென்றே முடிவு கட்ட வேண்டும்.

முடிவு

ருஷியாவின் தற்போதைய நடவடிக்கைகள் உலகத்தில் அனேக பாகங்களில் சங்கட முண்டுபண்ணியிருப்பதி லதிசயமில்லை. ஏனென்றால் முதலாளித்துவமே இதுகாறும் சமூகங்களில் ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறது; அச்சமூகங்களில் சமவுரிமை தத்துவங்கள் பரபரப் புண்டுபண்ணுவது சகஜமே. வேலையின்மை, தொழில் திட்டம், சட்டம் முதலிய பிரச்னைகளை ருஷியா தீர்த்துவைத்த மார்க்கம் உலக கவனத்தை கவர்ந்தேயிருக்கின்றது. ஆனாலும் வேறு திற

புலவர் பாடும் புகழாளர்

பண்டிதர்—வ. மு. இரத்திநேசுவரையர்

சோழ மண்டலத்திலே சடையப் பவள்ளலின் உதவியால் வாழ்ந்த ஒரு புலவர் இலங்கைக்குப் போனார். இலங்கையில் பரராச சிங்கன் என்ற அரசனை அவர் கண்டார். அக்காலம் அங்கே பஞ்சந் தோன்றியிருந்தது. அதனால், புலவருக்குப் பேருதவி புரிய அரசனால் முடியவில்லை. ஆனால், ஏதோ உபசாரனை செய்து, அப்புலவரை எவ்விடமிருந்து தாங்கள் வருகிறீர்கள்? என்னிடம் வந்த காரணம் யாது? என்று அரசன் வினவினான். புலவர் அவ்வரசன் மகிழ நல்விடை கூறினார். பின்னும் சடையப்ப வள்ளலாரின் உயர்ந்த பெருமைகளை விளக்கி அவருதவி நாடினால், பஞ்சமும் பஞ்சாய்ப் பறக்கும் என்று புலவனார் புகன்றார். பரராச சிங்கன் பெரும் புலமை பூண்டவன். அம்மன்னன் கூறியதாக வழங்கும் ஒரு சீரியபாடல் வருமாறு :—

சான பொருளாதார திட்டத்தில் அமைக்கப்பெற்ற பழைய உலகத்தில் சோவியத் முறைகள் புதுமையாகவே யிருக்கின்றன. ருஷ்யாவில் ஏற்பட்டிருந்த நிலைமை கேடாக இருந்ததால் கொடூரமாக சமாளிக்க வேண்டியிருந்தது. ஆனாலும் தற்காலம் பரந்து வரும் அறிவு விசாலத்தினால் முதலாளி வர்க்கம், பொருளைச் சிருஷ்டிக்கப் பாடுபடும் எளிய மக்களுக்கு சாதகங்கள் செய்து, பொருளாதாரத் துறையில் பங்காளிகளாக சேர்த்தும், இங்கிலாந்து முதலிய நாடுகளில் ஏற்பட்டிருக்கும் எஸ்டேட் சட்டங்கள் மாதிரியோ, அல்லது நம் நாட்டில் சமீப காலத்தில் விதிக்கப்பட்டு வரும் பெட்ரோல், விற்பனை போன்ற வரிகளை வரவேற்று தேச வரித் திட்டங்களை நியாய வரம்பிற்குட்படுத்தி திருத்தியமைக்கவும் ஒத்துழைக்க முன்வந்தால் சமவுரிமை தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட சமூக அதிர்ச்சிகளைத் தவிர்க்கலாம். விஞ்ஞான யுகமாகிய நம்முடைய காலத்தில் கொள்கைகள் பரவுவதைத் தடுக்க முடியாது. ஆனால் மானிட சமூகத்தைக் கூட்டுறவு முறையில் திருத்தியமைக்கலாம்.

இரவு நண்பகல் ஆகிலென்! பகலிருள் அறு இரவாகிலென்!
இரவி எண்டிசை ஏகிலென்! கடலேழு மேறிலென்! வற்றிலென்!
மரபுதங்கிய முறைமை பேணிய மன்னராகிலென்! போகிலென்!
வளமையின்புறு சோழ மண்டல வாழ்க்கை காரணமாகவே
கருது செம்பொனி னம்பலத்திலோர் கடவுள் நின்று நடிக்குமே
காவிரித் திருநதியிலே ஒரு கருணைமா முகில் துயிலுமே
தருவுயர்த்திடு புதுவையம் பதி தன்னின் மன்னிய சேகரன்
சங்கரன்றரு சடையன் என்றொரு தருமதேவதை வாழவே

சோழ நாட்டு வாழ்வு கிடைத்தால் இராத்திரி காலம் பகற்காலமாக மாறினாலும், பகற்காலம் வாராது இராத்திரி காலமாகவே இருந்தாலும் வருத்தமே இல்லை. சூரியன் எவ்விடமுதித்து எங்கே மறைந்தாலும் கவலை இல்லை. ஏழு கடலும் பெருக்கெடுத்தாலும் சரி, வற்றினாலும் சரி ஒரு துன்பமுமில்லை. நன்மாயில் பிறந்த அரசன் வாழ்ந்தாலும், தாழ்ந்தாலும் துன்புறுதல் வேண்டாம். இவ்வாறு இறப்பாக இருப்பதற்கு என்ன சாதனம் இருக்கின்றது என்றால், பின் வரும் அரிய காரணங்கள் துணையாக நிற்கின்றன.

பூலோக கயிலாசத்தில் பொன்மன்றில் ஐந்தொழில் நடை பெறச் சிவபரம்பொருள் நடிக்கின்றார். காவேரி யாற்றின் நடுவண் கருணையே வடிவு கொண்ட கருமேகம் போன்ற திருமால் ஸ்ரீரங்கத்தில் அறிதுயில் புரிகின்றார். இவை இரண்டு மன்றித் தரும தேவதையின் வாழ்க்கை சாலப் பெருமை தருகின்றது. மரங்கள் வானுற ஓங்கிச் சிறப்பளிக்கும் புதுவையில் சங்கரன் புதல்வனான சடையப்ப வள்ளலே அத்தரும தேவதை யாகும். அப் பெரியோன் வாழக் கவலை நீங்கி விடும் என்பது பாடலின் சாரமாகும்.

பாடும் பாட்டின் சிறப்பும் பாடத் தகும் பெரியாரியலும் நாம் கவனித்தற்குரியனவாம். சடையப்ப வள்ளலும் இப்பா நயங்கண்டு அரசனுக்குப் பல தோணிகளில் நெல் அனுப்பி உதவி செய்தார் என்று தெரிகின்றது.

மரணம் என்பது கடவுளுக்குச் சொந்த மானது. அதை மனிதன் எந்த உரிமையோடு தொட்டுப் பார்க்க முயல்கிறான்?

—ஓர் அறிஞன்

காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானம்

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் அலகாபாத்தில் ஆனந்த பவனத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் 19-11-39ல் கூடி ஐந்து நாள் நடைபெற்றது. ஐந்து நாள் ஆலோசனைக்குப் பிறகு 23-11-39ல் கீழ்க் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :—

ஐரோப்பிய யுத்தத்தைப் பற்றியும் அதனால் இந்தியாவில் ஏற்பட்டிருக்கிற எதிர் விளைவுகளைப் பற்றியும் காங்கிரஸ் காரியக் கமிட்டி கொண்டிருந்த அபிப்பிராயத்தைத் தேசம் பூரணமாக அங்கீகரித்ததைக் குறித்து காரியக் கமிட்டி மிகவும் திருப்தியடைகிறது. ஏற்கனவே காங்கிரஸினால் வெளியிடப்பெற்ற பல அறிக்கைகளை ஆதாரமாகக் கொண்ட இந்தக் காங்கிரஸ் கொள்கை, செப்டம்பர் மாதம் 14ந் தேதி யன்று ஓர் அறிக்கை மூலமாகத் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. மேற்படி அறிக்கை, அநுபவ பூர்வமாகவும் அரசியல் ஞானத்தைக் கொண்டதாகவும் இருக்கிறதென்று பின்னர் நடந்த சம்பவங்கள் நிரூபித்து விட்டன. பொதுவாக யுத்தம் நடக்கிற மாதிரியும், சிறப்பாக பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரெஞ்சு அரசாங்கமும் அநுஷ்டித்து வருகிற கொள்கையும், இந்தியாவின் சார்பாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கையும் சேர்த்து என்ன தெரிவிக்கின்றனவென்றால், சென்ற 1914-18ப் வருஷ யுத்தத்தைப் போல இந்த யுத்தமும் ஏகாதிபத்திய நோக்கங்களுக்காகவே நடைபெறுகின்றனவென்பதும், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வேரூன்றியிருக்குமென்றும் நன்கு தெரிகின்றன. இந்த யுத்தத்துடனும் இந்த நோக்கத்துடனும் காங்கிரஸ் தன்னைச் சம்பந்தப்படுத்திக் கொள்ள முடியாது. இதற்காக இந்தியாவின் சக்திகள் சுரண்டப்படுவதையும் அது ஆதரிக்க முடியாது.

ஜன நாயகம், ஏகாதிபத்தியம் இவைகள் சம்பந்தமாக யுத்தத்தின் நோக்கமென்ன, இந்த நோக்கங்கள் இந்திய விஷயத்தில் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பவற்றைத் தெரிவிக்க வேண்டுமென்று காரியக் கமிட்டி கோரியது. ஏகாதிபத்தியக் கொள்கை இல்லாமலிருப்பதுவும், இந்தியாவை ஒரு சுதந்திர நாடாகக் கருதுவதும், அதனுடைய கோரிக்கைகள் அதன் ஜனங்களுடைய விருப்பத்திற்குத் தகுந்தபடி பூர்த்தி செய்யப்படுவதுமாக இந்த நோக்கங்கள் இருந்தால்தான் இவை மதித்தற்குரியன என்று கருதப்படும். இந்தக் கோரிக்கைக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் விடுத்திருக்கிற பதில் மிகவும் அதிருப்திகரமாயிருக்கிறது. மற்றும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பாக பிணக்குகளை உண்டு பண்ணவும், முக்கியமான பிரச்னையை மறைத்து வைக்கிற மாதிரியாகவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. காரியக் கமிட்டியின் கோரிக்கைக்

கிணங்க ஓர் அறிக்கை வெளியிட மறுப்பதற்கு ஆதாரமாக வகுப்புப் பிரச்னைகள், சிறுபான்மை, மன்னர்கள் முதலியோருடைய உரிமைகள் முதலியன இந்தியாவின் சுதந்திரத்திற்குத் தடைகளாயிருக்கின்றனவென்று சொல்லப்படுகின்றன.

காங்கிரஸின் கோரிக்கைக்கு இணங்குவதில் எந்தவிதமான வகுப்புப் பிரச்னைகளும் எழவில்லையென்று காரியக் கமிட்டி மிகவும் வற்புறுத்திக் கூறுகிறது. மற்றும், இந்தியாவிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினர், அவர்களுடைய மற்ற வேற்றுமைகள் என்னவாயிருந்த போதிலும், இந்தியாவின் சுதந்திரத்தை எதிர்க்கவில்லை. சுதேச மன்னர், இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் சின்னமாகும். சுதேச சமஸ்தானங்களிலுள்ள பிரஜைகள்தான், சுதந்திர இந்தியாவில் தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள். ஆனால் அவர்களுடைய விருப்பங்களைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எப்பொழுதும் புறக்கணித்தே வந்திருக்கின்றனர். எப்படியிருந்த போதிலும், இந்தியாவின் சுதந்திரத்திற்கு விரோதமாயிருக்கப்பட்டவர்களுடைய அபிப்பிராயங்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடைய நோக்கங்களை வெளியிடுவதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. இங்ஙனம் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தங்கள் நோக்கங்களை வெளியிட மறுப்பதனால் என்ன தெரிகிறதென்றால், இந்தியாவிலுள்ள பிற்போக்கான சக்திகளுடன் சேர்ந்து கொண்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலை நிறுத்திக் கொள்ளப் பார்க்கின்றனர் என்பது தெளிவாகிறது.

யுத்த நெருக்கடியையும் அதிலிருந்து ஏற்படுகிற பிரச்னைகளையும், தர்மநீதியின் பாற்பட்டதென்றே காங்கிரஸ் கருதுகிறது. போர் செய்து லாப மடைய வேண்டுமென்ற எண்ணம் காங்கிரஸுக்கு இல்லை. வேறெந்தப் பிரச்னைகள் தீர்க்கப்படுவதற்கு முன்னரும், யுத்த நோக்கத்தைப் பற்றியும், இந்தியாவின் சுதந்திரத்தைப் பற்றியும் தெரிவிக்க வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், இடைக்காலத்திலுங் கூட, பொது ஜனப்பிரதிநிதிகளுக்கு உண்மையான அதிகாரம் கொடாமற் போனால், காங்கிரஸானது, அரசாங்கப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே, காங்கிரஸ் பிரசிடெண்டு 4-11-39 தேதியிட்டு ராஜப் பிரதிநிதிக்கு அனுப்பிய அறிக்கையை காரியக் கமிட்டி அப்படியே ஆதரிக்கிறது.

இந்தியாவின் சுதந்திரத்தை அங்கீகரிப்பதும், அதற்குத் தேவையான அரசியல் திட்டத்தை அதனுடைய ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பொது ஜன சபையால் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்பதை அங்கீகரிப்பதுமே, பிரிட்டனுக்கு ஏகாதிபத்திய நோக்கமில்லையென்பதை விளக்கும். தவிர, அப்பொழுதே, காங்கிரஸுடைய ஒத்துழைப்பும் பிரிட்டனுக்குக் கிடைக்கும். ஒரு சுதந்திர நாட்டின் அரசியல் திட்டத்தை வகுப்பதற்கு பொது ஜன சபை கூட்டுவதே தகுந்த வழியென்று காரியக் கமிட்டி கருதுகிறது. ஜன நாயகத்திலும் சுதந்திரத்

திலும் நம்பிக்கை கொள்கிற யாரும் இதனை ஆட்சேபிக்க முடியாது. வகுப்புப் பிரச்னைகளையும் மற்றப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு இந்தப் பொது ஜன சபை கூட்டுதலே சிறந்ததென்று காரியக் கமிட்டி கருதுகிறது. இப்படிச் சொல்வதனால், வகுப்புப் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கிற முயற்சிகளில் காங்கிரஸ் சிறிதும் தளரவிடும் என்பது அர்த்தமில்லை.

மேற் கூறப்பட்ட பொது ஜன சபையானது, சிறுபான்மையோருடைய உரிமைகளை அவர்களுடைய திருப்திக்கேற்றவாறு தீர்த்து வைக்கும். அப்படி ஏதேனும் அதிருப்தியான பிரச்னைகள் இருக்குமானால், அவற்றை மத்தியஸ்தத்திற்கு விட்டுத் தீர்த்துக் கொள்ளலாம். எல்லாருக்கும் வாக்குரிமையுண்டு என்ற முறையில், இந்தப் பொதுஜன சபைக்கு அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். இப்பொழுதுள்ளபடி தனித் தொகுதிகளுள்ள சிறுபான்மைச் சமூகத்தினர், அவர்கள் விரும்பினால், அந்தத் தனித் தொகுதிகளையே வைத்துக் கொள்ளலாம். இந்தச் சிறுபான்மைச் சமூகத்தினரின் ஜனத் தொகை விகிதாசாரப்படி, இவர்களுடைய பிரதிநிதிகளும் இருப்பார்கள்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தாரின் சார்பாக வெளியிடப்பெற்ற அறிக்கைகள் அதிருப்திகரமாயிருப்பதாலும், இதனால், பிரிட்டிஷ் கொள்கைகளிலிருந்தும் யுத்த முயற்சிகளிலிருந்தும் தான் விலகிக் கொள்ள வேண்டியிருப்பதாலும் இவைகளுக்கு முதற்படியாக, மாகாணங்களிலுள்ள காங்கிரஸ் மந்திரிகள் ராஜீநாமா செய்தார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தார், தங்கள் கோரிக்கைகளைத் திருத்தியமைத்துக் கொண்டாலன்றி, காங்கிரஸினுடைய கொள்கையை அங்கீகரித்துக் கொண்டாலன்றி, காங்கிரஸினுடைய இந்த ஒத்துழையாமைத் தத்துவம் நீடித்து நிற்கவே செய்யும். எதிரிகளுடன் சமரஸமாகப் போக எந்தச் சந்தர்ப்பத்தையும் இழக்கக் கூடாதென்பது ஒரு சத்தியாக்கிரகியின் கொள்கை. அஹிம்சா யுத்தத்திற்கு எப்பொழுதும் தயாராயிருக்கிறானே யானாலும் சமாதானத்திற்கு வர வேண்டுமென்ற முயற்சியை அவன் சிறிது தளரவிடக் கூடாது. அந்தச் சமாதானத்திற்காகவே அவன் வேலை செய்ய வேண்டும். காங்கிரஸுக்கு எதிராக, சமாதானக் கதவைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் மூடிவிட்ட போதிலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடன் ஒரு சமரஸமாகப் போவதற்கு காங்கிரஸானது எல்லா முயற்சிகளையும் கையாளும். ஆயினும், காங்கிரஸானது, தனது அஹிம்சா தர்ம முறையைக் கொண்டு, இந்திய ஜனங்களின் விருப்பத்திற்கு விரோதமாகப் புகுத்தப்படும் எந்த மார்க்கத்தையும், இந்தியாவின் தன்மதிப்புக்கும் சுதந்திரத்திற்கும் விரோதமாகவுள்ள எதனையும் எதிர்த்து நிற்கும்.

சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பிக்கப்படுகிற அவசியம் ஏற்படுமானால், அதற்குக் காங்கிரஸ்காரர்கள் தயாராயிருப்பதைக்கண்டு காங்கிரஸ் கமிட்டி சந்தோஷமடைகிறது; அவர்களைப் பாராட்டவும் செய்கிறது. ஆனால், சட்டமறுப்பியக்கத்திற்கு, ஒரு ராணுவத்திற்குத் தேவையான

சிறு கதை

கேசவன் லைப்ரெரி

ஸ்ரீ ராமச்சந்திரன்

எங்கள் டவுனில் கேசவனும் ஒரு லைப்ரெரி நடத்தி வருகிறான். அது ஒரு 'சர்குலேட்டிங் லைப்ரெரி'. சுமார் 50 மெம்பர்கள் இருக்கிறார்கள். இந்த சந்தாதாரர்களிடமிருந்து வசூல் செய்யும் தொகையிலிருந்து கேசவன் தன் லைப்ரெரியை நடத்தி வந்தது மன்றி லாபமும் சிறிது பெற்று வந்தான்.

கேசவன் மிகக் கெட்டிக்காரன். பணம் சம்பாதிப்பதில் சமர்த்தன். எனவே அவன் லைப்ரெரி ஒரு 'ஸ்டோர்' ஆகவும் இருந்தது. கேசவன் லைப்ரெரியில் இருந்து கொண்டே காப்பிக் கொட்டை, தேயிலை வியாபாரம் செய்து வந்தான். தீப்பெட்டி, சிகரெட் முதலியன மொத்தமாக வாங்கி விற்பான். ரேஜர் பிளேடுகள் அவன் 'ஸ்டோரில்' எப்பொழுதும் இருக்கும். அவன் கெட்டிக்காரன் என்பதற்கு இன்னொரு உதாரணம் வேண்டுமா? அவன் இன்ஷூரன்ஸ் ஏஜண்டும் கூட.

இப்பொழுது கேசவன் தனது லைப்ரெரியில் ஒரு பெரிய போர்டில் 'டைப் அடித்துக் கொடுக்கப்படும்' எனக் கொட்டை எழுத்துக்களில் எழுதித் தொங்க விட்டிருந்தான்.

ஒழுங்கு தேவையாயிருக்கிறது. எப்படி ஒரு ராணுவமானது, தன்னிடமுள்ள அழிவுக்கருவிகளை நன்றாக உபயோகிக்கத் தெரிந்து கொண்டிருக்க வேண்டியது அவசியமோ அதைப்போல், அஹிம்சைப் போர் வீரர்களும், அஹிம்சையை உபயோகிக்கத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். சட்ட மறுப்புக்குத் தயார்ப்படுத்திக் கொள்வதென்றால், ஒவ்வொரு காங்கிரஸ்வாதியும், தான் நூற்ற கதர் உடுக்க வேண்டும், மற்றச் சமூகத்தாருடன் நெருங்கிய பழக்கம் கொள்ள வேண்டும். தனிப்பட்ட காங்கிரஸ்காரர்கள் ஹரிஜனங்களோடு சகோதரத்துவம் பாராட்ட வேண்டும்.

எல்லாக் காங்கிரஸ் ஸ்தாபனங்களும், எல்லாக் காங்கிரஸ்காரரும், எதிர்காலத் தயாரிப்பை முன்னிட்டு மேற்படி திட்டத்தை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வரவேண்டும். பொதுஜன சபையின் நோக்கங்களையும் தத்துவத்தையும், காங்கிரஸ்காரர்கள் பொதுஜனங்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். இது தான், காங்கிரஸின் எதிர்கால வேலைத்திட்டத்தின் முக்கிய அம்சமாயிருக்கும்.

எனக்கு அவனைப்பற்றி இவ்வளவு தெரிந்ததற்கு காரணம் அவன் என்னுடைய ஆப்த நண்பன். நான் தினமும் அவன் ஆபீஸிற்குச் சென்று சில மணி நேரம் இருந்து பேசி விட்டு வருவேன். எனக்கு நன்றாக டைப் அடிக்கத் தெரியுமாதலால் அவன் 'ஜாப் ஒர்க்' வந்த போதெல்லாம் என்னை டைப் அடித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்வான். நானும் கேசவன் எனது நண்பன்தானே என்று அவனுக்கு இனாமாகவே டைப் அடித்துக் கொடுப்பேன். (அதாவது நான் அடித்துக் கொடுத்ததற்காக எனக்கு அவன் பணம் கொடுக்க மாட்டான். அவ்வளவுதான்.)

என் வீடு கேசவன் ஆபீஸிற்கு மிகவும் சமீபம். எனவே 'ஜாப் ஒர்க்' வந்தவுடனேயே என்னைக் கூப்பிட வந்து விடுவான். எனக்கும் டைப் அடித்துக் கொடுப்பதில் சில அனுகூலங்கள் இருந்தன. முதலாவதாக பணச் செலவு இல்லாமல் டைப் அடிக்க மிஷின் கிடைக்கிறது. எங்கேயாவது [illegible] வேலைக்குப் போனாலும் டைப்பிங் 'ஸ்பீட்' இருக்கும். மற்று நான் டைப் அடித்துக் கொடுத்ததற்காக கேசவன் ஏதாவது பணம் கொடுக்க மாட்டானா என்ற ஆசை. கடைசியாக இனாமாக அவன் ஆபீஸிலுள்ள புஸ்தகங்களைப் படிக்கலாம்.

ஆனால் சீக்கிரத்தில் எனக்கு டைப் அடித்து அடித்து சலித்து விட்டது. தினமும் 2 மணி நேரமாவது நான் அவனுக்காக டைப் அடிக்க வேண்டியிருக்கும். கேசவனுக்கும் தினம் குறைந்தது (நான் அடித்துக் கொடுப்பதனால்) ஒரு ரூபாயாவது கிடைக்கும். ஆனால் அதனால் எனக்கென்ன பிரயோஜனம் என்றால் கேசவன் லாபமடைகிறான்—எனக்கோ அவன் ஒரு சல்லி கூட கொடுப்பது கிடையாது.

ஆம்-இனி நிச்சயித்து விட்டேன். இனி அவன் பணம் கொடுத்தாலன்றி டைப் அடிக்க மறுத்துவிட வேண்டும். அவனுக்குக் கிடைப்பதில் சரி பாதி எனக்குக் கொடுக்க அவன் சம்மதித்தாலன்றி அவனுக்கு டைப் அடித்துக் கொடுக்கக் கூடாது. கேசவனுக்கோ டைப் அடிக்கத் தெரியாது. அவனுக்கு உதவுகிறவர்களோ சமீபத்தில் ஒருவரும் கிடையாது. ஆகையால் நல்ல ஒரு சந்தர்ப்பத்தில் டைப் அடிக்கடி அடிக்க முடியாதெனக் கூறி அவனுக்கு கிடைக்கும் ரூபாயை நஷ்டப்படுத்தி அவனுக்கு நல்ல ஒரு பாடம் கற்பிக்க நிச்சயித்தேன்.

ஒரு நாள் இரவு சுமார் 7 மணி இருக்கும். கேசவன் என் வீட்டுக்கு வந்தான். கையில் ஒரு கோர்ட் ஜட்ஜ்மெண்ட் ஒன்று இருந்தது. சுமார் பத்து பக்கம் கொண்டது. (எனக்கு அவன் வரும் காரணம் தெரிந்து விட்டது. ஆயத்தமாகவே இருந்தேன்) 9 மணிக்குள் அந்த ஜட்ஜ்மெண்டை அடித்துக் கொடுத்து விட வேண்டுமென்றும் அந்த ஜட்ஜ்மெண்டு ஒரு வக்கீலுடையதென்றும் அவர் இரவு 9½ மணி வண்டிக்கு வடக்கே போகப் போவதாகவும், அவசரம் என்றும் கூறினான். நான் ஒரேயடியாக 'முடியாது' என்றேன். கேசவன் பிரமித்தான். பின் என்னை

வேண்டினுன். கெஞ்சினுன். 'எனக்கு இந்த இரண்டு மணி நேரத்தில் இரண்டு ரூபாய் வரும்படி வருவதை நஷ்டப் படுத்தாதே' என்ருன். கடைசியில் நான் எவ்வளவோ மறுத்தும் ஜட்ஜ் மெண்ட் கட்டை என்னிடம் போட்டு விட்டுதான் வக்கீலைப் பார்த்து விட்டு 9 மணிக்கு வருவதாகக் கூறிவிட்டு என் பதிலை எதிர்பாராமலே போய் விட்டான்.

நான் சற்று நேரம் யோசித்தேன். பின் ஒரு முடிவுக்கு வந்தேன். 'கேசவன் திரும்பிவர இன்னும் இரண்டு மணி நேரம் ஆகும். அதற்குள் நாம் இதை டைப் அடித்து விட்டு மறைத்து வைத்திருந்து அவன் கேட்கும் பொழுது டைப் அடிக்க வில்லை என்று கூறி விட வேண்டும். பிறகு அவன் என்னைக் கெஞ்சுவான். ரூபாய் ஒன்று தருவதாகக் கூறி மன்றுடுவான்'—பின் என்ன? ரூபாயை வாங்கிக் கொண்டு கட்டைக் கொடுத்துவிட வேண்டும்.' இவ்வாறு நிச்சயம் செய்தேன்.

டைப் அடித்தேன். இரவில் பெட்ரோமாக்ஸ் லைட் கண்ணைக் குத்துவதையும் பொருட் படுத்தாது 'உயிர் போகும் வேகத்தில்' டைப் அடித்து முடித்தேன். பின் அவைகளை மறைத்து வைத்து விட்டு படுத்துக் கொண்டேன்.

5 நிமிஷத்திற்குள் கேசவன், 'என்ன, அடித்து விட்டாயா' என்ருன்.

'ஓகோ, எனக்கு ஒன்றும் கொடுக்காமல் நீயே இரண்டு ரூபாயும் எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்தாயோ' என்று அவனைப் பார்த்து மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். 'நான் தான் டைப் அடிக்க முடியாது என்று முன்பே கூறி விட்டேனே' என்றேன் உரக்க. பக பக வென்று சிரித்தேன் அவன் நிலைமையை எண்ணி. ஆனால்!—

'நல்ல காரியம் செய்தாய். அந்த வக்கீல் ஊருக்குப் போய் விட்டார். ஜட்ஜ்மெண்டை இப்பொழுது டைப் அடிப்பது அவசியமில்லை என்று கூறி விட்டார். நல்ல வேளை. உனக்கும் இரவில் கண் எரிய டைப் அடிக்கும் சிரமம் இல்லை. சரி, நீ வீட்டிற்குப் போகலாம்' என்ருன் கேசவன்.

அந்த வக்கீலை மனதாரத் திட்டிக் கொண்டே, கண் எரிச்சலுடன் வீட்டிற்குள் வந்து சேர்ந்தேன்.

"தேவி தாசன்"

தமயனின் கடிதம்—8

(விபத்துக் காலத்தில் தம்பிக்குப் பேருதவி புரிந்த ஓர் பேரன்பருக்குத் தம்பியின் விருப்பப்படி தந்த நன்றி.)

பொன்னை விரும்பியே—திரையெறிந்து
பொங்கும் கடல் கடந்து
சின்னஞ் சிறு வயதில்—சேவகமும்
செய்யத் துணிவு கொண்டு 1

மைந்தனென் துணைவனாய்—என்னிளையோன்
மலாய்நாடு வந்தடைந்தான
வைத்து ஆதரித்தார்—பொன்வணிகப்
புண்ணிய சீலரையா. 2

நல்லதோர் பிள்ளையாக—அவனுமங்கு
நடந்து வருகையிலே
அல்லற் போதுமையே—அந்நிமைமை
ஆளாத் துணிந்ததையே. 3

பட்டதோர் காலினிலே—மீண்டும் மீண்டும்
பட்டிடும் பாரினிலே
கெட்ட துடியுமையே—மேலும் மேலும்
கெட்டிடு மென்பதுவும் 4

தங்கத் தமிழ்ப் பெரியார்—அனுபவித்துத்
தந்த மொழி யலவோ
பங்கப் பட்டிடாமல்—அம்மொழியும்
பலித்த தெம் குடியில். 5

யந்திர விபத்தினுக்கே—என்றனிலை
யானு மாகி னையே
சிந்தை தளர்கையிலே—நீ புரிந்த
செய்த பணி நினைக்கின் 6

நெஞ்சக் கரையினையே—உடைத்தன்பு
நீரும் பெருகு தையே
பஞ்சைக் கிரங்கிய வுன்—பன்னரிய
பான்மைக்குத் தம்பிடையே! 7

அன்னையுந் தந்தையுமாய்—உடன் பிறந்த
அண்ணனுந் தம்பியுமாய்
பண்ணிய நின்பணிக்கு—நாங்களென்ன
கைமாறு பண்ணிடு வோம் 8

தம்பியும் நானுமாகத்—தேவிசெய்யத்
தாமரை மலர்ப் பதத்தைக்
கும்பிட்டு வாழ்த்து கின்றோம்—உன்றனக்குக்
கூடுக நன்மை யென்று 9

தேவியின் திருவருளால்—உன்றனக்குத்
திருக்கள் பல விலங்கும்
பூவிலுன் சிருமையே—மிகமிகப்
பொங்கித் தவழு மையே! 10

ஸ்ரீ சரத் சந்திர சட்டர்ஜி எழுதிய

: அக்கா :

எம். வி. வெங்கடராமன்

(சென்ற மாதத்தொடர்ச்சி)

ஐந்தாம் அத்தியாயம்

இன்னும் வெள்ளி முளைக்கவில்லை; கிழக்கு வானம் சிவந்திருந்தது. பிரமீளா ஓடி வந்து சுரேந்திரனுடைய கழுத்தைப் பிடித்துக் கொண்டு, 'ஸார்!' என்று கூப்பிட்டாள்.

சுரேந்திரன் மெதுவாகக் கண்களைத் திறந்து, 'என்ன பிரமீளா?' என்றான்.

“அக்கா வந்து விட்டாள் ஸார்!”

அவன் எழுந்து உட்கார்ந்தான். பிரமீளாவின் கையைப் பிடித்துக் கொண்டு, 'வா, போய் அக்காவைப் பார்த்துவிட்டு வரலாம்' என்றான்.

அவளைப் பார்க்க வேண்டும் என்கிற இந்த ஆவல் அவனுக்கு எப்படி உண்டாயிற்று என்று சொல்ல முடியாது. இவ்வளவு நாள் கழித்து அவன் கண்களைத் தேய்த்துக் கொண்டு, பிரமீளாவின் கையைப் பிடித்துக் கொண்டு ஏன் உள்ளே போனான் என்றும் தெரியவில்லை. ஆனால் அவன் உள்ளே போய், படிகளேறி மேலே சென்றான். மாதவியின் அறை எதிரில் போய் நின்று, 'அக்கா!' என்று கூப்பிட்டான்.

அக்கா ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள். 'என்னடீ?' என்றாள்.

“ஸார்.... ....”

அப்போது 'ஸாரும்' பிரமீளாவும் அறையில் நுழைந்து விட்டார்கள். மாதவிக்கு தூக்கி வாரிப்போட்டது. தலையில் 'முசுக்கை' இழுத்துப் போட்டுக் கொண்டு ஒரு மூலையில் போய் நின்றாள்.

“அக்கா, நீங்கள் இல்லாமல் நான் ரொம்ப கஷ்டம்...........என்று சுரேந்திரன் ஆரம்பித்தான்.

மாதவி நினைத்துப் பின்னால் உதட்டைக் கடித்து 'மனதிற்குள், 'சீச்சி' என்று கொண்டாள்.

“நீங்கள் போனதும்..........”

மாதவி உள்ளுக்குள், 'அட வெட்கமே!' என்று கொண்டாள்; ஆனால் வெளியே மிருதுவான குரலில், 'பிரமீளா, ஸாரை வெளியே போகச் சொல்லு' என்றான்.

பிரமீளா சின்ன குட்டியானாலும் அக்காவின் நடத்தையைக் கண்டு தான் செய்தது தப்பு என்று தெரிந்து கொண்டாள். சொன்னாள், 'வாருங்கோ—ஸார்'.

முதலில் அவன் கொஞ்ச நேரம் முழித்துக் கொண்டு நின்றான். பிறகு, 'வா, போகலாம்' என்று கிளம்பினான். அவனுக்கு அதிகமாகப் பேசத் தெரியாது; பேச இஷ்டமுமில்லை. நாள் முழுவதும் மேகம் சூழ்ந்திருந்தபின் திடீரென்று சூரியன் கிளம்பினால் எல்லாரும் அதையே பார்க்க ஆரம்பித்து விடுவார்கள். அதைப் பார்க்கக்கூடாது, பார்த்தால் கண் கூசும்—வலிக்கும் என்று கூட நினைத்துப்பார்க்க மாட்டார்கள். அது போலவே மேகம் சூழ்ந்த வானத்தடியில் ஒரு மாதம் தங்கியிருந்த அவன், சூரியோதயம் ஆனதும் அதைக் காணச் சென்றான்; ஆனால் அது அப்படி முடிவுறும் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை.

அன்றிருந்து அவனுக்குக் கிடைத்த ஆதரவு கம்மியாகி விட்டது. மாதவியும் கொஞ்சம் வெட்கிப் போய் விட்டாள்; ஏனென்றால் பித்துமதி அத்தை அந்த விஷயத்தைச் சொல்லி கொஞ்சம் கேலி பண்ணிவிட்டாள். சுரேந்திரனுக்குக்கூட கொஞ்சம் சங்கோசமாகத்தான் இருந்தது. 'அக்கா'வின் எல்லையற்ற அன்புக்கு வேலி போட்டுவிட்டது போல் அவனுக்குப் பட்டது. பழைய அக்காவின் ஆதரவு இல்லை. பழைய அம்மாவின் அன்பில்லை. எல்லாம் எட்டியிருந்தே விலகிப்போய் விடுகின்றன.

ஒரு நாள் அவன் பிரமீளாவிடம் கேட்டான், "அக்கா என் மேலே கோபமாக இருக்கிறாளா?" என்றான்.

'ஆம்.'

'ஏன் அப்படி?'

'அன்றைக்கு நீங்கள் ஏன் அப்படி உள்ளே போகணும்?'

'போகப்படாதா என்ன?'

'எங்கே யாவது போகலாமோ! அக்காவுக்கு கோபம் வந்துட்டுது'.

'அப்படியா?' என்றான் அவன் புஸ்தகத்தை மூடினபடி.

அப்புறம் ஒரு நாள் மப்பு போட்டு நல்ல மழை பெய்தது. விஜயபாபு இரண்டு நாளாக வீட்டில் இல்லை. தம் ஜமீன்தாரியைப் பார்க்கப் போயிருந்தார். மாதவிக்கு வேலை ஒன்றுமில்லை; பிரமீளாவும் வம்பு செய்து கொண்டிருந்தாள்.

'பிரமீளா உன் புஸ்தகம் கொண்டு வா; எது வரைக்கும் படித்திருக்கிறாய் என்று பார்க்கிறேன்........'

பிரமீளா அப்படியே வெலவெலத்து விட்டாள்.

'கொண்டுவா' என்றாள் மாதவி.

'ராத்திரி கொண்டுவர்றேன்'.

'இல்லை; இப்பவே!'

ரொம்ப வருத்தத்துடன் பிரமீளா புஸ்தகத்தைக் கொண்டு வந்து சொன்னாள், 'ஸார் எனக்கு ஒண்ணும் சொல்லித்தரதில்லே. அவர் தான் படிச்சிக்கிறார்............'

மாதவி கேள்வி கேட்க ஆரம்பித்தாள். ஆரம்பத்திலிருந்து கடைசி வரை கேட்டு, வாஸ்தவமாகவே ஸார் ஒன்றும் சொல்லித்தரவில்லை என்று அறிந்து கொண்டாள். பிரமீளாவுக்கு முந்தி கொஞ்ச நஞ்சம் தெரிந்திருந்தது கூட 'ஸார்' வந்தபின் மறந்து போய் விட்டது. மாதவி கோபமாக பித்துவைக் கூப்பிட்டு சொன்னாள்: 'பித்து, ஸாரண்டை போய் பிரமீளாவுக்கு இத்தனை நாளாக ஏன் ஒன்றும் சொல்லித்தரவில்லை என்று கேட்டுவா'.

பித்து போன சமயம் ஸார் ஏதோ 'பிராப்ளத்தை'க் கவனித்துக் கொண்டிருந்தார்.

'ஸார், நீங்கள் பிரமீளாவுக்கு ஏன் ஒன்றும் சொல்லித்தரவில்லை என்று அக்கா கேட்கிறாள்'.

ஆனால் ஸாருக்கு ஒன்றும் கேட்கவில்லை. பித்து மறுபடியும் உரத்து, 'ஸார்!' என்று கூப்பிட்டாள்.

'என்ன?'

'அக்கா கேட்கிறாள்'.

'என்னது?'

'பிரமீளாவுக்கு ஏன் ஒன்றும் சொல்லித்தரவில்லை?'

ஸாருக்கு எங்கே ஞாபகம். 'பிடிக்கவில்லை' என்று விட்டார்.

பித்து அப்படியே மாதவியிடம் போய் சொல்லி விட்டாள். மாதவிக்கு இன்னும் கோபம் வந்து விட்டது. அவள் கீழே இறங்கி வந்து, கதவின் பின்னால் நின்று கொண்டு பித்து மூலம் கேட்டாள்: 'பிரமீளாவுக்கு ஏன் ஒன்றும் சொல்லிக் கொடுக்கவில்லை?'

இரண்டு மூன்று தடவை கேட்ட பின் அவன் பதில் அளித்தான்: 'என்னால் சொல்லித்தர முடியாது.'

'பின் எதுக்காக நீங்கள் இங்கே இருக்கிறீர்கள்?' என்றாள் பித்து.

'இருக்காமல் என்ன செய்வது?'

'அப்படியானால் ஏன் சொல்லித்தரவில்லை?'

சுரேந்திரனுக்கு உணர்வு வந்து விட்டது. திரும்பி உட்கார்ந்து, 'என்ன கேட்டாய்?' என்றான்.

பித்து முன்னால் சொன்னதை மறுபடி சொன்னாள்.

'அவள் தினம் படிக்கிறாளே?'

'அவள் படிக்கிறது இருக்கட்டும். நீங்கள் ஒன்றும் கவனிப்பதில்லையா?'

'இல்லை, எனக்கு அவகாசம் இல்லை.'

'அப்படியானால் இந்த வீட்டில் எதுக்காக இருக்கிறீர்கள்?'

சுரேந்திரன் மௌனமாக அதைப் பற்றின யோசனையில் ஆழ்ந்தான்.

'அப்படியானால் நீங்கள் சொல்லித்தர முடியாதா?'

'இல்லை, எனக்குப் பிடிக்கவில்லை'.

உள்ளேயிருந்து மாதவி கேட்டாள்: 'சரி, பித்து, இத்தனை நாள் இங்கேயே ஏன் இருக்கிறார் என்று கேளு'.

பித்து கேட்டாள். சுரேந்திரன் யோசனை எல்லாம் கலைந்து விட்டது. அவனுக்கு கொஞ்சம் யோசித்து சொன்னான்: 'அப்படியா தவறுதலாக இருந்து விட்டேன்.'

'நாலு மாசமாகவா தவறுதல்?'

'ஆமாம்; நான் இதைப்பற்றி யோசிக்கவில்லை'.

மறு நாள் பிரமீளா படிக்க வரவில்லை. சுரேந்திரனும் அதிகமாக அதைக் கவனிக்கவில்லை. மூன்றாவது நாளும் வரவில்லை; அன்றும் அப்படியே கழிந்து விட்டது.

நாலாவது நாளும் அவள் வராமல் இருக்கவே அவன் ஒரு வேலைக்காரனிடம் அவளைக் கூட்டி வரும்படி சொல்லி அனுப்பினான்.

வேலையாள் திரும்பி வந்து சொன்னான்: 'இனி அவள் உங்களண்டை படிக்க மாட்டாளாம்.'

'வேறு யாரண்டை படிப்பாள்?'

வேலைக்காரன் கொஞ்சம் மூளையைச் செலவழித்து, 'வேறே வாத்தியார் வருவார்' என்றான்.

அப்போது ஒன்பது மணி ஆகியிருந்தது. சுரேந்திரன் கொஞ்ச நேரம் யோசித்துக்கொண்டிருந்தான். பிறகு சில புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு எழுந்து நின்றான். மூக்குக் கண்ணாடியை எடுத்து பெட்டியில் வைத்து மூடி, டேபிள் மீது வைத்து விட்டு மெதுவாக அங்கிருந்து புறப்பட்டான்.

'ஸார், இந் நேரத்தில் எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டான் வேலைக்காரன்.

'நான் போய் விட்டேன் என்று அக்காவண்டை சொல்லு.'

'திரும்பி வர மாட்டீர்களா?'

ஆனால் சுரேந்திரன் அதைக் கேட்கவில்லை. பதிலளிக்காமலேயே வாசலைத் தாண்டி போய் விட்டான். மணி இரண்டு அடித்தும் அவன் திரும்பி வராமல் போகவே வேலைக்காரன் மாதவியிடம் போய், 'ஸார் போய் விட்டார்' என்றான்.

'எங்கே போய் விட்டார்?'

'எனக்குத் தெரியாது. ஒன்பது மணிக்குப் போனவர்தான். போகிற சமயம் அக்காவண்டை நான் போய் விட்டேன் என்று சொல்லச் சொன்னார்.'

'என்னடா அது? ஒன்றுமே சாப்பிட வில்லையா?'

மாதவி சுரேந்திரனின் அறையைப் போய் பார்த்தாள். சாமான்கள் எல்லாம் அப்படியே கிடந்தன. டேபின் மீது மூக்குக்கண்ணாடிப் பெட்டி கிடந்தது. சில புஸ்தகங்களை மாத்திரம் காணோம்.

சாயங்காலம் ஆயிற்று. இரவாயிற்று. ஆனால் சுரேந்திரன் வரவில்லை. மறு நாள் மாதவிக்கு இரு வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, ஸாரைக் கண்டு பிடிப்பவனுக்கு பத்து ரூபாய் பரிசு தருவதாகச் சொன்னாள். பரிசுக்கு ஆசைப்பட்டு எல்லோரும் தேடப் போனார்கள்; ஆனால் மாலையானதும் திரும்பி வந்து கை விரித்து விட்டார்கள்.

பிரமீளா அழுது கொண்டே, 'அவர் ஏன் போய் விட்டார்?' என்று கேட்டாள்.

மாதவி அவளைத் தள்ளி, 'வெளியே போ, அழாதே!' என்று சொன்னாள்.

இரண்டு, மூன்று என்று நாள் கழிந்து கொண்டேயிருந்தது. மாதவிக்கும் கவலை அதிகமாகிக் கொண்டிருந்தது.

'அவனுக்காக ஏனம்மா இவ்வளவு கவலை? கல்கத்தாவிலே வேறே வாத்தியார் கிடைக்கமாட்டாரா?' என்று கேட்டாள் பிந்து.

'சீ, போ! ஒரு மனுஷன் கையிலே பைசா கூட இல்லாமல் கிளம்பிப் போய் விட்டான். நீ வந்து என்ன கவலை என்று கேட்கிறாயே!'

'அவனண்டை பைசா கூட இல்லை என்று உனக்கு எப்படித் தெரியும்?'

'எனக்கு எல்லாம் தெரியும். அதைப்பற்றி உனக்கு என்ன கவலை?'

பிறகு பிந்து பேசவில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக ஏழு நாள் ஆகி விட்டது. ஆனால் அவன் வராமல் போகவே, மாதவிக்கு ஓரே ஏக்கமாகி விட்டது. அவளுக்குச் சோறு, ஜலம் ஒன்றுமே பிடிக்கவில்லை. சுரேந்திரன் பசியால் வாடுவது போல அவளுக்குப் பட்டது. வீட்டில் இருப்பதைக் கேட்டு வாங்கிக் கொள்ளத் தெரியாதவன் வெளியில் போய் எப்படி கேட்டுச்சாப்பிடுவான்! அவனிடம் வாங்கித் தின்னக் காசு மில்லை; பிச்சை கேட்க தைரியமும் இல்லை. ஆகையால் அவன் குழந்தை போல் எங்காவது கிடந்து அழுது கொண்டிருக்க வேண்டும்; இல்லா விட்டால் ஏதாவது மரத்தடியில் புஸ்தகங்களைத் தலையணையாக வைத்து தூங்கிக் கொண்டிருக்கவேண்டும் என்றெல்லாம் அவள் யோசித்தாள்.

திரும்பி வந்த விரஜபாபு எல்லா விஷயங்களையும் கேட்டு, மாதவியிடம் கொஞ்சம் வருத்தப் பட்டுக் கொண்டார்.

மாதவி என்ன செய்வாள்! கலங்கிக் கண்ணீர் விட்டாள்.

ஃ ஃ ஃ

வெளியே சுரேந்திரன் தெருவில் திரிந்துக் கொண்டிருந்தான். மூன்று நாள் வரை அவன் ஒன்றும் சாப்பிடாமலேயே கழித்து விட்டான். பைப் ஜலத்துக்கு காசு தேவையில்லையாகையால் பசிக்கும் போது வயிறு நிறையத் தண்ணீர் குடிப்பான்.

ஒரு நாள் ராத்திரி ரொம்பவும் வாடிப் போய் 'காளி காட்டை' நோக்கி சென்று கொண்டிருந்தான்; அங்கே சாப்பிடக் கிடைக்கும் என்று யாரோ சொன்னார்கள். இருண்ட இரவு; ஆகாசம் மப்பாக இருந்தது. முச்சந்தியில் அவன் மீது ஒரு வண்டி ஏறி விட்டது. வண்டிக் காரன் எப்படியோ குதிரையை அடக்கி பிடித்து விட்டான். அதனால் சுரேந்திரனுடைய உயிர் தப்பி விட்டது; ஆனால் மார்பிலும் இடுப்பிலும் சரியானகாயம் பட்டு மூர்ச்சையாகி விழுந்து விட்டான். போலீஸ் காரர்கள் அவனை வண்டியில் உட்கார்த்தி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

நாலைந்து நாளுக்குப் பிறகு ஒரு நாள் மூர்ச்சை தெளிந்ததும் அவன் கண்களைத் திறந்து, 'அக்கா!' என்றான்.

அன்று இரவு வைத்தியக் கல்லூரி மாணவன் ஒருவன் ட்யூடியில் இருந்தான். சுரேந்திரன், 'அக்கா' என்

றதைக் கேட்டு அவன் அருகில் வந்து நின்றான்.

'அக்கா வந்திருக்கிறாளா?' என்று சுரேந்திரன் கேட்டான்.

'நாளைக்குக் காலையில் வருவாள்'.

மறு நாள் சுரேந்திரனுக்கு பிரக்ஞை வந்தது.

ஆனால் அவன் அக்காவைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. அன்று நல்ல ஜ்வரம் அடித்து அவனைத் துடிக்க வைத்து விட்டது. சாயங்காலம் அவன் ஒருத்தனிடம், 'நான் ஆஸ்பத்திரியிலா இருக்கிறேன்?' என்று கேட்டான்.

'ஆம்'
'ஏன்?'

'நீங்கள் வண்டியில் மாட்டிக் கொண்டு விட்டீர்கள்'.

'பிழைப்பேன் என்று நம்பிக்கை இருக்கிறதா?

'கட்டாயம் பிழைத்து விடலாம்'.

மறு நாள் அதே மாணவன் அவன் அருகில் வந்து நின்று 'இங்கே உங்களுக்கு வேண்டியவர்கள் யாராவது இருக்கிறார்களா? என்று கேட்டான்.

'யாரும் இல்லை.'

'அன்றைக்கு ராத்திரி 'அக்கா' என்று யாரையோ கூப்பிட்டீர்களே? அவர்கள் இங்கேதான் இருக்கிறார்களா?

'ஆம்; ஆனால் அவள் வர முடியாது. என் தகப்பனருக்குத் தகவல் தெரிவிப்பீர்களா?

'தெரிவிக்கிறேன்'.

சுரேந்திரன் தன் தகப்பனரின் விலாசத்தை தெரிவித்தான். அந்த மாணவன் அன்றே அவருக்கு கடிதம் எழுதி போட்டு விட்டான். பிறகு 'அக்கா' யார் என்று அறிவதற்காகக் கேட்டான். 'பெண் பிள்ளைகள் இங்கே வர வேண்டும் என்றால் தாராளமாக வரலாம். நாங்கள் அதற்காக ஏற்பாடு செய்கிறோம். உங்களுடைய அக்காவின் விலாசம் தெரிவித்தால் அவருக்கும் விஷயம் தெரிவிக்கிறோம்.

சுரேந்திரன் கொஞ்சம் யோசித்து விராஜ பாபுவின் விலாசத்தைச் சொல்லி விட்டான்.

'என் வீடும் விராஜ பாபுவின் வீட்டருகில்தான். இன்றைக்கு அவரிடம் போய் விஷயம் சொல்லுகிறேன். இஷ்டப்பட்டால் பார்க்க வருவார்.'

சுரேந்திரன் ஒன்றும் சொல்லவில்லை. 'அக்கா எங்கே வரப் போகிறாள்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். ஆனால் மாணவன் தயவு புரிந்து விராஜ பாபுவிடம் விஷயம் சொல்லி விட்டான். அவர் திடுக்கிட்டு, 'பிழைத்து விடுவானல்லவா?' என்று கேட்டார்.

'கட்டாயம் பிழைத்து விடுவார்.'

வீட்டிற்குள் போய் அவர் தன் மகளிடம் 'மாதவி! சுரேந்திரன் வண்டியில் அகப்பட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறானாம்' என்றார்.

மாதவியின் அங்கங்கள் எல்லாம் சிலிர் சிலிர்த்தன.

'அவன் உன் பெயர் சொல்லி 'அக்கா!' என்று கூப்பிட்டானாம். பார்க்க வருகிறாயா?'

அதே சமயம் அடுத்த அறையில் பிரமீளா ஏதோ சாமானைக் கீழே போட்டதால் பலத்த சப்தம் உண்டாகியது. மாதவி அங்கே ஓடிப் போனாள். வெகு நேரம் கழித்துத் திரும்பி வந்து, 'நீ போய் பார்த்து விட்டு வா; நான் வரவில்லை' என்று விட்டாள்.

விஜயபாபு வருத்தச் சிரிப்புடன் சொன்னார், 'அவன்தான் காட்டு மிருகம் போல்; அவன் மீது கோபம் கொள்ளலாமோ!'

ஆனால் மாதவி பதில் அளிக்கவில்லை. விஜயபாபு தனியாக சுரேந்திரனைப் பார்க்கப் போனார். பார்த்து மிகவும் துக்கம் அடைந்தார்.

'சுரேந்திரா, உன் பெற்றோருக்கு விஷயம் தெரிவித்தால் என்ன?'

'தெரிவித்தாகிவிட்டது.'

'ஒன்றுக்கும் பயப்படாதே. அவர்கள் வந்ததும் நான் எல்லா ஏற்பாடும் செய்கிறேன்.'

பணம் இல்லாமல் அவர்கள் வர தடைப்படுமோ என்று யோசித்து அவர் சொன்னார்: 'அவர்களுடைய விலாஸத்தை என்னிடம் சொல்லேன். அவர்கள் வருவதற்கு சிரமமாக இருந்தால் முடியாமல்...........'

ஆனால் சுரேந்திரன் அதை சரியாகப் புரிந்து கொள்ளாமல், 'அப்பா வருவார்; அதில் சிரமம் என்ன?' என்றான்.

விஜயபாபு வீட்டுக்குத் திரும்பி மாதவியிடம் எல்லா விஷயங்களையும் சொன்னார்.

அன்றிருந்து அவர் தினம் சுரேந்திரனைப் பார்க்கப் போக ஆரம்பித்தார். அவருக்கு அவன் மீது பற்றுதல் உண்டாகி விட்டது. ஒரு நாள் வீட்டிற்கு வந்து சொன்னார், 'மாதவி! நீ சொன்னது ரொம்ப சரி; சுரேந்திரனுடைய அப்பா பெரிய பணக்காரர்.'

மாதவி ஆச்சரியம் அடைந்து கேட்டாள்: 'எப்படித் தெரிந்தது?'

'அவர் பெரிய வக்கீல்; நேற்று ராத்திரி வந்து விட்டார்.'

மாதவி மௌனமாக இருந்தாள். அப்பா சொன்னார்: 'அவன் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டானாம்.'

'ஏன்?'

'அவனுடைய அப்பா எல்லா விஷயமும் சொன்னார். இந்த வருஷம் மேற்கே உள்ள ஒரு சர்வகலாசாலையில் ரொம்ப கௌரவத்துடன் எம்.ஏ. பாஸ் செய்தானாம். சீமைக்குப் போக வேணும் என்றானாம். மறதியுள்ள பையனாச்சே என்று அப்பா மறுத்து விட்டாராம். இவன் கோபமாக ஓடி வந்து விட்டான்.' உடம்பு சரியானதும் அவர் அவனைக் கூட்டிக் கொண்டு போவார்.

பெருமூச்சை அடக்கி, துளிர்க்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே மாதவி, 'அது தான் சரி,' என்றாள்.

(தொடரும்)

ஞானக்களஞ்சியம்

வேதாந்த ரகசியங்கள்

—ஸ்ரீ ஸதானந்த சுவாமிகள்

துன்பம் நீங்கும் வழி

ஒரு மூட்டை தூக்கி
மலை தாண்டிய கதை.

பெருஞ்சுமையோடு கூடிய ஒரு வழிப்போக்கன் யாத்திரை செய்து கொண்டு போகும் பொழுது ஆகாயத்தை யளாவி வளர்ந்திருந்த ஒரு பெரிய மலையைக் கடக்கும்படி நேரிட்டது. அவ்வளவு பெரும் மூட்டையைத் தூக்கிக் கொண்டு ஏணி போலிருந்த அம்மலையில் ஏறிச்செல்வதற்கு அவனால் முடியவில்லை. ஆயினும் மூட்டையை விடுவதற்கும் மனம் வரவில்லை.

இவ்வாறு வெகு கஷ்டத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டு பருவதத்தில் ஏறிச்செல்லும் பொழுது காற்று ஒரு பக்கமும் மூட்டை மொரு பக்கமும் இழுக்கவே அவன் கீழே உருண்டு விழுந்து சுக்கு நூறாக ஆகப் போவதை யுணர்ந்து ஆலோசித்து, ‘நாம் மட்டும் தனியே செல்வதானால் இம்மலையில் எவ்விதமேனும் ஏறிச் சென்று விடலாம். இப்பெரும் சுமையல்லவோ நம்மைக் கொல்ல வந்தது. இதையொழித்து விட்டால் நமக்குக் கஷ்டமே யில்லை. சீ! இதனால் அடைந்த துன்பம் போதும்’ என முணு முணுத்து தலையி லிருந்த பெரும் பாரத்தை யெடுத்து எறிந்து விட்டான். அதைப் போல், ஜனன மரணமாகிய சம்சார பருவதத்தைக் கடந்து போக விரும்பும் முமுக்ஷுக்களுக்கு, மக்கள், மனைவி, செல்வம் முதலியன பெருஞ்சுமைகளும் சத்ருக்களுமாகும். இவர்களையும் சேர்த்து இழுத்துக் கொண்டு முக்தியடைவதற்கு விரும்புகின்ற இளம் வைராக்கியக்காரர்கள் முற்கூறப்பட்ட வழிப்போக்கனும் அவன் சுமையும் அம்மலையிலிருந்து கீழே விழுந்து உருண்டு புரண்டு சிதறுண்டு போய் விட நேர்ந்தது போல், தமது மக்கள் மனைவி யாதியுடன் நரகத்தை யடைந்து துக்கத்தை யனுபவிக்க வேண்டிய தாய்வரும். ஆதலால் மோக்ஷம் பெற விரும்புவோர்க்கு ஒழிவும் குரு குலவாசமும் தீவிர வைராக்கியமும் வேண்டும், இல்லாவிடில் மோக்ஷம் சித்தியாகாதென்பது மூட்டை தூக்கி

யின் சரித்திரத்திற் கண்ட ரகஸ்யமாம்.

மனப் பம்பரம் :—

அக்னி பகவானை எய்த்த எறும்புகள்

ஒரு மூங்கிலுக்குள் சில எறும்புகள் கூட்டங்கூடி வாழ்ந்து வந்தன. ஒரு சமயம் அவற்றின் இரு பக்கங்களிலும் நெருப்புப் பற்றிய பொழுது எறும்புகள் வசித்து வந்த பக்கத்தில வரவரச் சூடேறக ஆரம்பித்தது. அப்பொழுது சில எறும்புகள் அம்மூங்கிலினது இரு நுனிகளிலும் கொழுந்துவிட்டு எரிகின்ற அக்னியானது, தம்மையும் தாம் வசித்து வருகின்ற மூங்கிலையும் எரித்துப் பெயர் மாத்திரமே மீந்தும்படி செய்துவிடுமெனக் கருதி, வெகுப் பிரயத்தனஞ் செய்து அக்கணமே மூங்கிலின் நடுவில் ஓர் துளையுண்டாக்கி அதன் வழியே வெளியிற் குதித்து உயிர் பெற்றன. மூங்கிலின் கண்ணே மீந்திருந்த மற்றுஞ் சில எறும்புகள் இங்ஙனஞ் செய்யாது, அவைகள் முன்பு சென்று கொண்டிருந்த வண்ணமே வெளியிற் செல்ல விரும்பியனவாய் மூங்கிலினது இரு நுனிகளும் சென்று சென்று திரும்பித் திரும்பி வந்து கொண்டிருந்தன. இதற்கிடையில் இரண்டு நுனிகளிலும் பிடித்திருந்த அக்கினியானது முறையே பற்றிக் கொண்டு வந்து கடைசியில் அம் மூங்கிலையும் அதனுள் வாழ்ந்து வந்த எறும்புகளையும் எரித்துச் சாம்பராக்கியது. இதுபோல மனித சரீரத்தின் கண்ணே ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்னும் முத்தாப நெருப்புகள் புக் புக்கென சத்தமிட்டுச் செல்லுகின்றன. மிகப் புண்ணியவான்களாகிய சிலர் தாம் இந்நெருப்பினது சுவாலையைத் தாங்க முடியாதவர்களாகித் தமது சரீரம் எரிந்து போகுமுன் தேகத்தினின்றும் தப்பித்துக்கொள்ள இச்சித்தவர்களாய், வைராக்கியம் என்னும் பெருமுயற்சியால், பக்தி, ஞானங்களாகிய துவாரங்கள் (உபாயங்கள்) செய்துகொண்டு அதன் வழியே வெளியிற் குதித்து விதேக (கைவல்யமாகிய) ராஜ்யத்தை யடைகின்றார்கள். மற்று யாவரும் மனைவி, மக்களாகிய கயிற்றால் இறுக்கிக் கட்டப் பெற்று ஆட்டிவிடப்பட்ட பம்பரமே போல் சுற்றிச் சுற்றிச் சதாகாலமும் மயங்கிக் கிடப்பதால் அவர்களின் சரீரத்தினின்று முயிர் தப்பிப் பிழைப் பதற்குத் துணியாது பழைய வாசனையை யனுசரித்து அவர்களின் தேகங்களும் வாழ்க்கைகளும் அவ்வக் கிரியைகளிலேயே வெந்து சாம்பராகி அப்பால் அது சம்சார வர்ஷத்தால் (மழையால்) உண்டான ஜலத்தோடு ஒருங்கே சேர்ந்து காலசக்கிரமாம் நதியிற் கலந்து ஜனன மரணமாகிய துக்க சமுத்திரத்திற்போய்ச் சேருகின்றன.

பயமின்மை:—

உயிருள்ள சிங்கமும் செத்துக் கிடந்த சுண்டெலியும்.

இறந்துகிடக்கின்ற சிங்கம், புலி, பூனை, கருடன் ஆகிய இவற்றின் சமீபத்திற் செல்வதற்குக்கூட முறையே, உயிருள்ள யானை, பசு, எலி, சர்ப்பம் இவைகள் பயந்திருக்குமானால், உயிரோடுஞ் சரீர திடத்தோடுங்கூடிய சிங்கம், புலி, பூனை, கருடன் என்பவை இறந்து கிடக்கின்ற யானை, பசு, எலி, சர்ப்பம் என்னும் இந்த ஜந்துக்களைக் கண்டு சிறிதேனும் பயப்படுமென்பது

ஓர் காலுஞ் சம்பவிக்கக் கூடியதல்ல.

அது போல் ஒரு மனிதனுடைய அஞ்ஞான நிலையிற்கூட அவனது ப்ரத்யகாத்மா ஸ்வரூபத்தை எந்த விதத்தாலும் துன்பப்படுத்துவதற்காவது அல்லது மாயும்படி செய்வதற்காவது அஞ்ஞானத்தினால் ஒரு சிறிது மியலாதிருக்க—பரிபூரண ஞானானுபவம் சித்தித்த சைதன்யஸ்வரூபனும் ஆத்மாவானவன், முக்காலத்து மில்லாததாகிய அவ்வஞ்ஞானத்தையோ அல்லது அதன் காரியமாகிய உலகத்தையோ கண்டு சொற்பமும் பயப்பட வேண்டியதவசியமில்லையல்லவா!

பொருளையறிந்து வினியோகஞ்செய்தல்

புஷ்பப் படுக்கையில் சிரித்த மனிதன்.

ஒரு பிரபு தனது படுக்கையறையிலுள்ள மெத்தையில் ஜாதி, முல்லை, இருவாட்சி, ரோஜா முதலியவாசனைப் புஷ்பங்களை வேலைக் காரர்களின் மூலமாய் தருவித்துப் புஷ்பப் படுக்கையுண்டாக்கி அதில் படுத்துறங்குவது வழக்கம். இவ்வேலைகளை நிறைவேற்றுவதாக அந்தப் பிரபுவினால் அநேகம் வேலைக் காரர்கள் நியமிக்கப் பட்டிருந்தனர். ஒரு நாள் புஷ்பப் படுக்கை தயாரிப்பவர்களில் ஒருவன் தனக்கும் சிறிது நேரமாவது அப் பூமெத்தையில் படுத்தால் நலமாயிருக்குமென வெகு காலமாக மோஹ மடைந்து வந்திருந்ததை யனுசரித்துப் பிரபுவில்லாத சமயத்தை எதிர் பார்த்தவனாய்ப் புஷ்பப் படுக்கையினைச் சிங்காரித்து அதில் ஏறிப் படுத்துக் கொண்டான். வெகு காலமாய் ஆவல் கொண்டிருந்தவனாதலால் மஞ்சத்திலுள்ள புஷ்பங்கள் சரீரத்தில் பட்டவுடனே அவன் மெய்ம்மறந்து தூங்கத் தொடங்கி விட்டான்! அப்பொழுது வெளியே உலாவச் சென்றிருந்த பிரபு திரும்பி வந்து படுக்கையறைக்குச் செல்லலானார். உள்ளே நுழைந்தவுடன் வேலைக்காரன், தனது புஷ்பப் படுக்கையிற் கிடந்து உறங்குவதைக் கண்டு 'நாம் படுக்கின்ற மலர்ப் படுக்கையை இவ் வேலைக்காரன் சிறிதும் மதியாது நம்மையும் அலக்ஷியஞ் செய்து தூங்குகின்றானாதலால், இதனைச் சிறிதுஞ் சகித்துக் கொண்டிருக்க நம்மால் கூடவில்லை. ஆதலால் இவனை நன்றாகத் தண்டிக்க வேண்டுமெனத் தீர்மானித்து வெள்ளிப் பிடியமைத்து வலிதாயிருந்ததோர் பிரம்பு கொண்டு அடிக்கத் தொடங்கினான். அடிபட்டவுடனே வேலைக் காரன் விழித்துக் கொண்டானாயினும் பிரபு அடித்து முடியும் வரையில் வெகு சந்தோஷத்துடன் (சிரித்து) ஆரவாரஞ் செய்யலாயினான். இதைப் பார்த்த பிரபுவிற்கு வெகு விநோதமாய்த் தோற்றியது. 'இஃதென்ன விந்தை! இவ்வளவு கடுமையாக நான் இவனை யடித்தும் இயற்கைக்கு முற்றிலும் விரோதமாய்ச் சிரித்துக் கொண்டிருக்கின்றானே. எதனால் இவன் இங்ஙனம் களித்துக் கொண்டிருக்கின்றான்? இதன் காரணத்தை இவனிடமே கேட்போம் எனக் கருதியவனாய் 'அடே! மூடா! இவ்வளவு நேரம் அடிபட்டும் நீ ஏன் சிரித்துக் கொண்டிருக்கின்றாய்? உனக்கு ஏதேனும் சொல்ல வேண்டியிருந்தால் சொல்லுக' எனக் கூறினான். அதைக் கேட்ட வேலைக்காரன் 'எனதன்பார்க்க பிரபுவே, எனக்குண்டான சந்தோஷத்தையும் அதன் காரணத்தையும் என்னென்று

கூறுவது? நான் ஒரு நாள் புஷ்பப் படுக்கையில் படுத்ததற்குப் பிரபு இவ்வளவு அடி அடித்தீர்கள்! ஆனால் பிரபு எவ்வளவு காலமாகப் புஷ்பப் படுக்கையிலேயே படுத்து நித்திரை செய்து வருகின்றீர்கள். ஒரு நாளைப் புஷ்பப் படுக்கைக்கே எனக்கு இவ்வளவு அடிகள் கிடைத்திருக்குமானால் தாங்கள் எவ்வளவு அடிக்குப் பாத்திரமாவீர்கள்! இதை நினைத்தபொழுது எனக்கு மிக்க அதிசயமாகத் தோற்றினமையால் நான் சிரிக்கலாயினேன்.''

இக்கதையின் கருத்து

இந்தப் பூலோகத்திலுள்ள சகல செல்வங்களும் (பொருள்களும்) ஈசனுடையன வாகும். அவைகளில் ஒவ்வொருவருடையவும் சரீரப் பாதுகாப்பிற்காக எவ்வளவு தேவையாயிருக்கின்றனவோ அவ்வளவை மட்டும் அவரவர் எடுத்து உபயோகித்துக் கொள்ளப் பாத்தியமுண்டு. ஆனால் ஈசனது தனத்தால் (செல்வத்தால்,) போஷிக்கப் பட்ட இச்சரீரத்தை ஈசன் பொருட்டாக விநியோகஞ் செய்ய வேண்டும். அவ்விதம் கடவுளுக்காக உபயோகியாமற் கேவலம் சுயப் பிரயோஜனத்தையே கருதியிருப்பவர் தங்களுடைய ஒரு சாண் வயிற்றிற்காக வேண்டியிருக்கின்ற அன்னமும், ஒரு சாண் உடம்பைப் போற்றுதற்கான வஸ்திரமும் எடுத்துக் கொள்வது (அங்கீகரிப்பது) குற்றமென்று வருமானால்—அது பாவச் செயலாகுமானால்—பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்குரிய உணவுப் பொருள்களையும் வஸ்திர முதலியவற்றையும் ஒருவன் தனது ஆத்ம சுகத்திற்கே உபயோகிக்கும் பொழுது அவன் விளைவிக்கின்ற பெருங் குற்றங்களை என்னென்று விவரிப்பது! ஆதலால் சுயநலங்கருதுதல் எக்காரணத்தானும் ஆதரிக்கத் தக்க தல்ல வென்பதும், பரோபகாரம் புரிவதே மஹா சிரேஷ்ட மென்பதும் அறியத் தக்கதாம்.

உண்மையான ஜன நாயகம் என்பது எப்பொழுதும் இருந்ததில்லை; இனியும் இராது. கடவுளர்களே அடங்கிய ஒரு சமுதாயம் இருந்தால் அது தான் ஜன நாயக முறையில் ஆட்சி செய்யப் படும். அப்படிப்பட்ட ஒழுங்கான ஜன நாயக அரசாங்கம் சாதாரண ஜனங்களுக்குப் பொருந்தாது.

—ரூஸோ

: கம்பர் :

—நா. லக்ஷ்மீநரசிம்மம்

(சென்ற மாதத் தொடர்ச்சி)

5. அடைக்கலம் கொடுத்த அன்பு

ஸ்ரீ இராம சரிதமே சரணாகத தர்மத்தை விளக்குவதாகும். இராமன் அடைக்கலம் கொடுத்துக் காப்பதற்கே அவதரித்த வள்ளல். ஆதலால் அடைக்கலம் தருவது அவனுக்கு இயல்பாக அமைந்ததாகும். அவ்வியல்பினை விளக்கவே இராமாவதாரம் நடைபெற்றதென்று சொல்லலாம்.

முதலில் தேவர்கள் அரக்கருக்கஞ்சி அடைக்கலம் புகுகின்றனர்.

மகாத மனையவர் வாழும் வாழ்வுமே
சிதைத கணைகளால் நீறு செய்யயாம்
தசாத தாகமாகக் கடல் கொள் [காவலன்
தசரதன் மதலை யாவருதும் தாரணி

எனத் தேவர்க்கருள்செய்து அவ்வண்ணமே இராமனாக அவதரிக்கின்றான் திருமால். கானல் நீர் போன்ற பொய்த் தோற்றமாகிய அரக்கர் வாழ்க்கையும் வாழ்வையும் சத்யமான பாணங்களால் ஒழிப்பதற்கு நாற்படையுடைய தசரதன் மகனாக பூமியில் வந்து அவதரிக்கின்றோம் என்று கூறுகின்றான்.

பின்னர் குகனுக்கு அடைக்கலம் தந்து நட்புக் கொள்கின்றான். வனத்தில் முனிவர்க்கு அடைக்கலம் தந்து அரக்கரை அழிப்பதாகச் சபதம் செய்கின்றான். அதன் மேல் சுக்ரீவனுக்கும் அபயமீந்து ஆதரவு செய்கின்றான். முடிவில் இராவணன் தம்பியாகிய விபீஷணனுக்கும் அடைக்கலம் தருகின்றான். தேவருக்கருள் செய்தது தெய்வத்திறம். முனிவர்க்கும் பிறர்க்கும் அடைக்கலம் தந்ததே மனிதாவதாரத்துக்குப் பட்டதாகும். முனிவர்க்கபயம் ஈந்தது அரசனுக்குரிய சாதாரண கடமையேயாகும். குகனுடன் நட்புக் கொண்டது உண்மை அன்பின் விளைவாகும். குகனும் இராமனிடம் ஒரு பயனையும் எதிர்பாராது வந்து சேர்ந்தான். இராமனும் அவ்வாறே சேர்த்துக் கொண்டான். சுக்ரீவன் பயனை எதிர் பார்த்து இராமனுடன் நட்புக் கொண்டான். வாலியின் அழிவுக்கு வழி தேடியே இராமனை அடைந்தான். இராமனும் அவன் வேட்கையைப் பூர்த்தி செய்யவே அவனுக்கு அடைக்கலம் கொடுத்தான். துஷ்டரை நிக்ரகம் செய்து சிஷ்டரைப் பரிபாலிக்க வந்தவனன்றோ. விபீஷணன் தன் தமையனாகிய இராவணனுடன் மாறு கொண்டான். சீதையைச் சிறையில் வைத்

ததைப்பற்றி அவன் தம்பியைக் கடிந்து கூறினான். அதனாற் கடுஞ் சினம் கொண்ட இராவணன் அவனைத் தாக்கிடவே பொய்யான சுற்றங் களைத் துறந்து மெய்யான சுற்றமாகிய இராமனை அடைக்கலம் வந்தடைந்தான். அபயம் வேண்டுவோர் யாவரேயாயினும் அளிக்க நின்ற எம் பெருமான் அவனுக்கும் அடைக்கலம் ஈந்தான்.

சுக்கிரீவனுக்கும் விபீஷணற்கும் அடைக்கலம் ஈந்த பயன் நோக்கியே என்று கூறி விதண்டாவாதம் செய்வர் ஒரு சாரார். இராமனைக் கம்பர் எவ்வாறு கூறிக்கொண்டு செல்கின்றார் என்பதைக் கவனித்தால் அவ்வாதம் செல்லாது என்பது புலனாகும். கம்பரால் கூறப்படும் நிலையிலுள்ள இராமனுக்கு யாருடைய உதவியும் தேவையில்லை. இராவணனது முடிவான பலமாக விருந்த மூலபலத்தை இராமன் ஒருவனாகவே நின்றழித்ததே இதற்குத் தக்க சான்றாகும். ஆதலால் சுக்ரீவன் உதவி இன்றேல் சீதையைக் காண முடியாதென்றோ விபீஷணன் துணையில்லாவிட்டால் இராவணனை வெல்ல முடியாதென்றோ கூறுவது வீண் வார்த்தையே யாகும். ஆனால் இராமன் இவர்களுடைய உதவியைப் பெற்றாற் போலத் தோன்றுவது ஏன்? அதுதான் இராமனுடைய அருங்குணம். உவமைப் பகுதியில் கன்றும் பசுவும் என்ற தலைப்பின் கீழ் விளக்கப்பட்டிருக்கும் இவன் குணச் சிறப்பே காரணமாகும்.

குகனொடும் ஐவரானோம்வனத்
திடைக் குன்றுசூழ்வான்
மகனொடும் அறுவரானோம்
எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதலைய
நின்னொடும் எழுவரானோம்
புகலருங் கானம் தந்து புதல்வரால்
பொலிந்தான் உந்தை.

அடைக்கலம் ஈந்த பின் அவனைச் சோதரராகக் கொள்ளும் ஆழி நண்புடையான் இராமன். விபீஷணற்கு அடைக்கலம் தந்தபின் சகோதரர் எழுவராயினர். 'காடுபுக்கதால் சகோதரர் பெருகப்பெற்றோம். காட்டிற் கனுப்பிப்புதல்வரால் நிரம்பினன் உன் தந்தையாகிய தசரதன்' என்று கூறுகின்றான். தன் தந்தையாகிய தசரதனை உன் தந்தை யென்று கூறும் அன்பினை என்ன சொல்வது? இதே கருத்தை இதற்கு முன்பே கோசலையும் விளக்கியிருக்கின்றாள். 'நாடிறந்து காடுநோக்கி மெய்விரர் பெயர்ந்ததுவும் நலமாயிற்றாம்' எனக் கூறுகின்றாள். 'தோழமை யென்றவர் சொல்லிய சொல் ஒரு சொல்லன்றோ' எனக் குகனை கூறிக் கொள்கின்றாள். குகனுடன் நட்புக் கொண்ட தன்மையைச் சீதை இலங்கையில் சிறையிருக்கும் பொழுது எண்ணுகின்றாள். அத்தகைய அன்பு வெள்ளம் கொண்ட மனைவியிடம் வற்றிவிட்டதே என்றெண்ணி ஏங்குகின்றாள்.

ஆழிநீர்க் கங்கை அம்பி
[கடாவிய
ஏழை வேடனுக்கு
எம்பி நின்றம்பி நீ
தோழன் மங்கை
கொழுந்தியெனச் சொன்ன
ஆழி நண்பினை உன்னி
மயங்குவாள்.

கங்கையில் ஓடமோட்டும் தொழிலுடையான். கல்வியறிவில்லா ஏழை. சாதியில் வேடன். இத்தகைய குகன் உன் அன்பைப் பெற்றான். எவ்வாறு அவனைக்கொண்டாய்? என் தம்பி உன் தம்பி. நீ என் அன்பன். என் மனைவி சீதை உன் அண்ணி என்று அவனை உன் உறவாகப் போற்றிக்கொண்டாய். தொழில், அறிவு, பிறப்பு என்ற இவற்றில் ஏற்றத் தாழ்வு கருதாது அன்பு கொண்டாய்! நீ என்னைக் கைவிடுவாயோ எனக் கூறி மயக்குகின்றான். இராமனுடைய அன்பின் தன்மை சிதையாமல் நன்கு விளக்கப் பெறுகின்றது. வேடனான குகனுக்கும் விலங்கினத்தைச் சேர்ந்த சுக்ரீவனுக்கும் கொடுந் தொழில் அரக்கர் குலத்துதித்த விபீஷணற்கும் அடைக்கலம் தந்த நிலை அதுவே.

குகனுடன் நட்புக் கொண்டதை ஒருவரும் எதிர்க்கவில்லை. குலம் முதலிய வேற்றுமை பாராமைக்கும் அக்காலத்து இல்லையாதலால் சுக்ரீவனுக்கு அபயமீந்ததை இலக்குவன் எதிர்க்கின்றான். தாங்கு என்பதைக் கருதியன்று. தன் தமயனையே பகைத்து அவனைக் கொல்வதற்கு. எமனைத் தேடிக் கொண்டிருக்கின்ற தன்மையுடையான் அந்நியர்க்கு உறவாயிருப்பனோ என்றே எதிர்க்கின்றான். தீமையை யொழிக்க வழி தேடுதலால் அவன் நல்லனே எனக் கூறிவிடுகின்றான் இராமன். விபீஷணற்கு அடைக்கலம் கொடுக்கும் பொழுது பலத்த எதிர்ப்பு ஏற்படுகின்றது. சுக்ரீவனே அதை எதிர்க்கின்றான். அவ்வாறெதிர்ப்பவர்கள் கூறும் காரணங்களையும் கருணை வள்ளலாகிய காகுத்தன் கூறும் விடையையும் கவனிப்போம்.

வார்க்குறு வினைகழற்றம் முன்
  வாழ்ந்த நாள்
சீர்க்குறவாயிடைச்
  செறுநர் சீறிய
போர்க்குறவன்றியே புகுந்த
  போதிவன்
ஆர்க்குறவாகுவான் அருளின்
  ஆழியாய்

தமயன் இன்பத்தொடு வாழ்ந்த காலத்தில் அவனுடன் வாழ்ந்து பகைவரோடு பொரும் போர்ச் சமயத்தில் அவனை விட்டுப் பிரிந்த இவன் வேறு யார்க்குத்தான் உறவாக இருப்பான்? எனக் கேட்கின்றான் சுக்ரீவன். மேலும்

அரக்கரை ஆசறக்கொன்று
  நல்லறம்
புரக்கவந்தனமெனும் பெருமை
  பூண்ட நாம்
இரக்கமில் அவரையே துணைக்
  கொடேறலால்
சுருக்கமுண்டவர் வலிக் கென்று
  தோன்றுமால்

அரக்கரை அடியோடழித்து நல்லறத்தை நிலை நிறுத்த வந்த நாம் இரக்கமற்ற அவருள் ஒருவனையே துணைக்கொண்டால் அவர் வலிக்கு நம் நிலை தாழ்ந்ததென்று தோன்றுமல்லவா என்றும் கூறுகின்றான். அறம் புரத்தற்கு அரக்கரைக் கொல்ல வேண்டுமா என்று கேட்கலா மென்பதை எண்ணி முன்னமே செம்மையில் அரக்கரில் யாவர் சிறியோர் எனக் கூறியிருக்கின்றான். அதனை இன்னும் விளக்கமாகப் பின்னர்க் கூறுகின்றான்.

வஞ்சனை யியற்றிடவந்த
வாறலால்
தஞ்சென வர்வயிற்
சார்ந்தனனையன்
நஞ்செனக் கொடியனை
நயந்து கோடியோ
அஞ்சன வண்ண வென்றறியக்
கூறினன்

இவன் வஞ்சனை செய்யவே வந்தவன். அடைக்கலம் புகவந்தவனல்லன். அழகிய தோற்றத்துடனுண்டாரைக் கொல்லும் விஷம்போற் கொடியவன். இவனை விரும்பி ஏற்றுக் கொள்வாயோ அஞ்சன வண்ணா என்று இராமன் கருத்தறிய நோக்கத்துடன் கேட்டான். தன் அபிப்பிராயம் எவ்வாறிருந்தாலும் அடைக்கலம் புக்காரை ஏற்றுக் கொள்வது இராமன் இயற்கை என்றறிவானாதலால் தன் சொற்களில் முழுநம்பிக்கை கொண்டானல்லன். அருளின் ஆழியாய் என்று கூறியது அவ்வியல்பைக் காட்டுகின்றது. அறியக் கூறினான் என்பது அதனை வற்புறுத்துகின்றது. சுக்ரீவன் இவ்வாறு கூறியபின் சாம்பவானும் அவன் சென்ற வழியே கூறிச் செல்கின்றான். முடிவில்

மேனனி விளைவது விளம்பல்
வேண்டுமோ
கானகத் திறைவி யோடுறையும்
காலையில்
மானென வந்தவன் வரவை
மானுமிவ்
வேனையன் வரவுமென் றினைய
கூறினான்.

பஞ்சவடியில் தேவியுடன் வசிக்கும் பொழுது மாயமானாக வந்த மாரீசன் வரவைப் போன்றதே இவ் விபீஷணன் வரவும் எனக் கூறுகின்றான். இவ்வாறே நீலனும் விபீஷணன் கொள்ளத் தக்கவனல்லன் எனக் கூறி விடுகின்றான். அனுமான் மட்டும் அறிவாலும் அனுபவத்தாலும் விபீஷணனை தன் கூரியவறிவதலால் கொள்ளத் தக்கவனே எனக் கூறுகின்றான்.

தேவர்க்குந் தானவர்க்கு மிசை
முகனா முதலாய தேவதேவர்
மூவர்க்கு முடிப்பரிய காரியத்தை
முற்றுவிப்பான் மூண்டுநின்ற
ஆவத்தின் வந்தபயம் என்றுனை
யயிர்த்தகல விடுதியாயின்
கூவத்தின் சிறுபுனலைக் கடலயிர்த்த
தொப்பாதோ கொற்றவேந்தே.

'தேவர்க்கும் அசுரர்க்கும் நான்முகன் முதலான மும்மூர்த்திகட்கும் முடிக்க முடியாத காரியத்தை முடிப்பதற்குத் துணிந்து விட்டு ஆபத்தில் வந்து அபயம் என்றவனை ஏற்றுக் கொள்ளாமல் விடுவாயானால், கிணற்றின் பெருக்கம் தன்னை மூடி விடுமோ என்று பெருங்கடல் ஐயுற்றாற் போன்றதாகும். மூவர்க்கும் முடிப்பரியதை முடிக்கத் துணிந்துள்ளாய். உனக்கு யாரால் தடை விளைக்க முடியும்! விபீஷணனை ஏற்றுக் கொள்வதில் எவ்வித ஐயமும் ஏற்படவழியில்லையே, வெற்றி வேந்தே' எனக் கூறுகின்றான் அநுமான். அவன் உதவி நமக்கு வேண்டப்படுகின்றது என்றும் அதனால் நாம் அரக்கரினும் வலியிற் றாழ்ந்தவராகக் கருதப்படுவோம் என்றும் கூறிய சுக்ரீவன் கூற்றையும் அக்கருத்திலேயே இக்காலத்தார் கூறுவதையும் அனுமான் அழகாகக் கண்டிக்கின்றான். அடைக்கலம் கொடுப்பதால் தோன்றும் வலிக் குறைவினும் அடைக்கலம் கொடாத

காலையே வலிக்குறைவு அதிகம் தோன்றும். எவராலும் செய்ய முடியாத இக்காரியத்தைச் செய்யத் துணிந்த பொழுது யாருடைய துணையையும் எதிர் பார்க்கவில்லை. ஆதலால் இவனுக்கு அடைக்கலம் கொடுக்க ஐயம் கொள்வது உன் அச்சத்தையும் துணிவின்மையையுமே காட்டும் என்று கூறிவிட்டு 'ஆதலால் இவன் வரவு நல்வரவே எனவுணர்ந்தேன் அடியேன்; உன் வேதநூல் எனத் தகைய திருவுள்ளத்தின் குறிப்பறியேன்' எனப் பணிவோடு கூறினான். அனுமான் கூறியபடியே விபீஷணன் முதலாயினோரால் இராமன் அடைந்த நன்மையினும் சிரமமே அதிகம். விபீஷணனை இராவணனைச் சேர்ந்தோரிடத்தினின்றும் காப்பது அவன் கடமையாகி விட்டது. ஒரு சமயம் விபீஷணன் மேல் ஏவப்பட்ட வேலைத் தன் மார்பின் மீது ஏற்று மண் மேல் வீழ்ந்தான் இலக்குவன். மருந்து மலையால் மீண்டும் எழுந்தான். தான் வரும் வரை விபீஷணனைக் குறிக்கொண்டுக் காக்க என்ற இராமன் கட்டளையைச் சிரமேற்கொண்டே இலக்குவன் அவ்வேலை ஏற்றான். இவ்வாறு விபீஷணனைக் காக்கும் பொறுப்பைக் கும்பகர்ணன் தான் இறக்கும் பொழுது வற்புறுத்துகின்றான்.

தம்பியென நினைந்திரங்கித் தவிரான்
அத்தகவில்லான்
எம்பியவன் தனைக் காணின்
கொல்லும் இறைகல்லானல்
உம்பியைத்தான் உன்னைத்தான்
அனுமனைத்தான் ஒருபொழுதும்
எம்பிபிரியானாக வேண்டுகின்றேன்
எம்பெருமான்

தம்பியென்றிரக்கம் கொண்டுவிட மாட்டான் அத்தீயோன்; இவனைக் கண்டு விட்டால் உடனே கொன்று விடுவான். ஆதலால் உன் தம்பியாகிய இலக்குவனையும் உன்னையும் அனுமானையும் என் தம்பி எப்பொழுதும் பிரியாதிருக்குமாறு வேண்டுகின்றேன் என வேண்டிக் கொள்கின்றான். இத்தகைய பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதுதான் அடைக்கலம் தந்ததால் விளைந்த பயனாகும். சுக்ரீவன் ஒரு சமயம் திடீரென்று இராவணனிடம் தாண்டிச் சென்று முஷ்டியுத்தம் செய்து அவனை மகுடபங்கப்படுத்தி மீள்கின்றான். அவன் மீண்டு வருவதற்குள் இராமன் நெஞ்சம் வெகு பாடுபட்டது. நிராயுதபாணியாய் மாயம்வல்ல அரக்கரிடைத் தனியே சிக்கிக் கொண்டால் அவன் கதி என்ன ஆகும் என்றெண்ணி அஞ்சினான். ஏன்? அடைக்கலம் பெற்றோரைக் காக்க வேண்டிய பொறுப்பு அவனுடையதன்றோ? மீண்டு வந்த சுக்ரீவனை நோக்கி இராமன் கூறும் வார்த்தைகளிலிருந்தே அவன் மனோபாவத்தை அறியலாம்.

இந்நிலை விரைவின் எய்தாது
இத்துணை தாழ்த்தியாயின்
நன்னுதற் சீதையால்
என்னாலத்தாற் பயன் என்தம்பி
உன்னையான் தொடர்வேன்
என்னைத் தொடரும் இவ்வுலகம்
மென்றால்
பின்னையென் இதனைநோக்கி
விளையாடிப் பிழைப்ப செய்தாய்.

இப்பொழுது வந்திராமல் இன்னும் சிறிது நீ தாமதித்திருப்பாயானால் என்ன நடந்திருக்கும் தெரியுமா? நீ இறப்பாயே யானால் சீதையைப் பெற்

றத் தான் நான் என்ன இன்பம் அடையப் போகிறேன். இந்த வுலகத்தால்தான் பயன் என்ன! உன்னை நான் பின் பற்றுவேன். உலகம் முழுவதும் என்னைத் தொடரும். வினையாட்டுத் தனமாக எவ்வளவு பெருந் துன்பங்களை இழைக்க இருந்தாய் என வருந்திக் கூறுகின்றான். அடைந் தோரைக் காக்கும் அருள் வெள்ளம் இது. இனி விபீஷணற் கடைக்கலம் கொடுப்பது பற்றி இராமன் கூறும் விடைகளைக் கவனிப் போம்.

மற்றினியுரைப்ப தென்னே மாருதி
வடித்துச் சொன்ன
பெற்றியே பெற்றியன்ன
தன்றெனிற் பிறி தென்றாலும்
வெற்றியே பெறுக தோற்க
வீக வியாது வாழ்க
பற்றுதலன்றி யுண்டோ
புகலெனப் பகர்கின்றானே.

இனி நான் வேறு சொல்வதற்கென்ன இருக்கிறது? அநுமான் ஆராய்ந்து சொன்னதே சரி. நான் ஜயம் பெற்றாலும் தோல் வியுற்றாலும் வீழ்ந்தாலும் வாழ்ந்தாலும் அபயம் என்று வந்தவனை ஆதரியா திரேன்.

நஞ்சினை மிடற்றுவைத்த நகை
மழுவாளன் நாளும்
தஞ்சென முன்னம் தானே
தாதை பாற் கொடுத்துச் சாதல்
அஞ்சினேன் அபயம் என்ற
அந்தணற்காகி அந்நாள்
வெஞ்சினக் கூற்றை மாற்றும்
மேன்மையின் மேன்மை
யுண்டோ.

அடைக் கலங்காத்தற் கடை யானமாக நஞ்சினைக் கண்டத்தில் தரித்துத் தேவரைக் காத்த பரமசிவன் தானே பதினாறு வயதுடைய புதல்வனைப் பெறுக என்று மார்க்கண்டேயன் தந்தைக்குக் கொடுத்துவிட்டு அம்மைந் தன் சாதல் அஞ்சினேன் அபயம் என்று பணித்ததும் அவனைக்கொண்டு செல்ல வந்த காலன் ஆவியையும் போக்கி அவனைக்காத்ததை அறிந்ததில்லையா? தன் வாக்கிற்கு மாறு படாதென்றறிந்தும் காலன் தன் ஆணையையே நிறை வேற்றுகின்றான் என்பதை உணர்ந்தும் அபயம் கொடுத்தான் பரமசிவன்.

சரணெனக்கியார் கொலென்று
சானகி அழுது சாம்ப
அரணுளக் காவேன் வஞ்சி
அஞ்சலென்றருளி னெய்தி
முரணுடைக்கொடியோன் கொல்ல
மொய்யமர் முடித்துத் தெய்வ
மரணமென்றதை பெற்ற தென்
வயின்வ மூக்கன்றோமே.

எனக்கு அடைக்கலம் தந்து ரக்ஷிப்பாயா? என்று இராவணனாற் கவர்ந்து செல்லப்படும் பொழுது சீதை அழுது புலம்ப நானே உனக்குப்பாது காவலாவேன் தேவி! அஞ்சேல் என்று அருள் மிக வந்து பலமுள்ள தீயோன் இராவணனுடன் போர் செய்து அவனாற் கொல்லப் பட்டு தெய்வத்திறமுள்ள வீர முடிவை என் தந்தை போல்வாராகிய ஜடாயு பெற்றார். அவர் செயல் எனக்கு ஏற்றதில்லையோ?

சீதையைக் குறித்ததேயோ
தேவரைத் தீமைசெய்த
பேதையைக் கொல்வேனென்று
பேணிய விரதப்பெற்றி
வேதியாபயம் என்றார்க்கு அன்று
நான் விரித்துச் சொன்ன

ஓ! இந்தியனே!

I

—"கண்ணன்"

ஓ பாரதப் புதல்வனே! ஆயிரக் கணக்கான வருடங்களாக அவனியில் விளங்கி வரும் புராதன நகரங்களும், மிகோன்னத சிகரங்கள் வாய்ந்த கோபுரங்களைக் கொண்டிருந்த கோவில்களும், வானளாவிய கோட்டை கொத்தளங்களும், பெருமை வாய்ந்த சிற்ப நிர்மாணங்களும், பழமையான வேத சாஸ்திரங்களும், கலைஞானங்களும், உயரிய சமூக அமைப்புகளும், அரசியல் நிர்மாணங்களும், ஒழுக்க முறைகளும் தத்துவ ஆராய்ச்சிகளும் அபரிமிதமாக அமைந்த அன்னை பாரதியின் அருந்தவப் புதல்வனே! உன் அன்னை எப்பேர்ப்பட்டவள் தெரியுமா? அவள் செல்வத்திற் சிறந்தவள், அறிவுக் கிடமானவள், அழகில் மிக்கவள், அகில ஐசுவர்யங்களுக்கும் உறைவிடமானவள், இயற்கைச் செல்வங்களில் இனிது பெருத்தவள், மலைவள முற்றவள், நிலவளம் நிறம்பியவள், நீர்வளம் பூத்தவள், குடிவளம் மிகுந்து குலுங்கிடும் குணத்தவள், இவ்வளவு பெருமை வாய்ந்தவள் அணி வயிற்றில் அவதரித்ததற்காக நீ பெருமை

காதையைக் குறித்து நின்ற
அவ்வுரை கடத்தலாமோ.

இராவணுதியர் வதம் சீதையைப் பெறுவதே நோக்கமாக வுடையது என்று எண்ணுகிறீர்களா? அன்று தேவருக்கிடரிழைத்த அறிவிலியைக் கொல்வேன் என்று தவவொழுக்கங் களையுடைய அந்தணர் அபயம் புக்க காலத்தில் அவரிடம் சபதம் செய்தே னல்லவா? அந்த அடைக்கலம் காத்தலே நோக்கமாகவுடையது. ஆதலால் அபயதானம் செய்தலே கடமை என்றிவ்வாறு கூறி விபீஷணனை ஏற்றுக்கொள்கின்றான் இராமன். அம்மட்டோ!

ஆழியானவனை நோக்கி அருள்
சுரந்து உவகை தூண்ட
ஏழினோடேழாய் நின்றவுலகும்
என்பெயரும் எந்நாள்
வாழுநாளன்று காறும்
வாளெயிற்றரக்கர் வைகும்
தாழ்கடல் இலங்கைச் செல்வம்
நின்னதே தந்தேன் என்றான்.

இராமன் விபீஷணனைப் பார்த்து அருள் சுரந்து மகிழ்ச்சி மிக இப்பதினான்கு லோகங்களும் என் பெயரும் உள்ள வரை இலங்கா ராஜ்யத்தை உனக்கே தந்தேன் எனக்கூறி வாழ்த்துகின்றான். இது கொள்ளார்தேயம் குறித்த கொற்றம், உண்மை வீரர்க்குரிய தன்னம்பிக்கையைக் காட்டுகின்றான். விபீஷணற்கு அழியாவரம் தரும் ஆற்றலையும் வெளிப்படுத்துகின்றான். அறமும் அருளும் விளைத்தலால் தன் பெயருக்குள்ள சிறப்பைத் தான் அறிந்திருக்கின்றான். இவ்வாறு தன்னை யறிந்தும் அறியான் போல் இருக்கும் இராமன் யாவன் என்பதை இனி ஆராய்வோம்.

பாராட்டக் கடமைப் பட்டுள்ளாய் என்பதை மறந்து விடாதே! வில்லும் வாளும் ஏந்திய உன் போன்ற வீரப் புதல்வர்கள் ஒப்பற்ற உயர்மணிகளிழைத்த அரியாசனத்திலமர்ந்து இமய முதல் குமரி வரை படர்ந்த நிலப்பரப்பை செங்கோலோச்சி வந்த பெருமையெல்லாம் போய் இப்பொழுது உன் தன்னரசு குலைந்து அடிமை வாழ்க்கையெய்தி உன் வீரச் சகோதரர்கள் கோழைச் சகோதரர்களாகி கட்டத் துணிக்கும், காலப் போக்கிற்கும் அயல் நாடுகளை எதிர் நோக்கி வாழும் நிலையைக் கண்ட உன் இரத்தம் கொதிப்பேற வில்லையா? உன் மெய் சிலிர்க்க வில்லையா? உன் உடல் துடிக்க வில்லையா? உன் முந்திய நிலையையும் பிந்திய நிலையையும் ஒரு முறை எண்ணிப்பார். இதோ உன் தேசப்பண்டைப் பெருமைகளை சுருக்கமாகத் திரட்டித் தருகிறேன் பார்.

ஓர் தேசத்தின் பண்டைச் சரிதையில் உண்மைப் பெருமைகளை உணர்வதால் அறிவு வளர்ச்சியும், முன்னேற்றமும் தகுந்த முயற்சியுடன் வெகு தீவிரமடையும். புராதனம் நவீனத்திற்குக் கற்பிக்க வேண்டும், நவீனம் புராதனத்தின் பெருமைகளை விளக்கிக் காட்ட வேண்டும். நீ உன் நாட்டின் பழம் பெருமைகளைத் தெரிந்தால் உன்னை நீயே நன் கறிவதுடன் பாரத நாடு இவ்வெளிய நிலைமை நீங்கி, சிறந்து விளங்குங் காலத்தில் நீ அரிய பல வேலைகள் செய்யப் போகிய தூண்டு கோலாயிருக்கும். சுருங்கக் கூறுமிடத்துப் பழம் பெருமை புது உணர்ச்சி யளிக்குமென்பது திண்ணம்,

உன் தேசக் கைத்தொழில் சிறப்பைக் கேள்!

வீபர் என்னும் சரித்திர மேதாவி இந்தியாவைப் பற்றிக் கூறுவதைப் பார்:—

'மிகவும் மெல்லிய பின்னல்களையுடைய விசித்திர நூல் வேலைகளுக்கும், பல நிறங்களை அளவுடன் கலந்து வேண்டிய நிறமுண்டாக்குவதற்கும், உலோக வேலைக்கும், விலையுயர்ந்த கருங்கல் வேலைக்கும் இன்னும் பலவித அரிய வேலைப்பாடுகட்கும், வேலை நுட்பத்திற்கும் இந்தியா வெகு காலத்திற்கு முன்னேயே போற்றப்பட்டது.'

கி. மு. 3000 ஆண்டுகட்கு முன்னேயே பேபிலோன் நகரம் இந்தியாவோடு வியாபாரம் நடத்தியதற்குப் போதிய ஆதாரம் உளது என்பதை உணர். எகிப்து தேசத்தில் கி. மு. 3000 வருஷங்களுக்கு முன்னிருந்த பெரிய பதுமைகள் (Mummies) இந்தியாவின் மெல்லிய மஸ்லின் துணிகளால் சுருட்டப்பட்டிருந்தன வென்பதையும் தெரிந்து கொள்.

இம்பீரியல் கெஜட்டியர் (Imperial Gazetteer of India Vol III p 195) என்ற புத்தகத்தில் என்ன குறிப்பிட்டிருக்கிறது தெரியுமா?

'ரோமாபுரி இந்தியாவின் ஏராளமான கைத் தொழில் சாமான்களை ஏற்று வந்தது. மூத்த பிலினி (இத்தாலி தேசத்து ஆசிரியர்) என்பவர் ரோமாபுரி வருடாந்தரம் ஏராளமான திரவியத்தை இந்திய வியாபாரத்தில் போக்கிவிடுகிற தென்று புகார் கூறி யிருக்கிறார்'........'டக்கா மஸ்லின் துணியை கிரீக் தேசத்தார் 'கங்

சடிகா' (Gangetika) என்றழைத்தனர்.........ஆகவே இந்தியாவில் பஞ்சு நூற்றல் நெசவு செய்தல் இவை 2000 வருஷங்களுக்கு முன்னேயே வெகு முன்னேற்ற மடைந்திருந்த தென்று சந்தேக மின்றி முடிவுக்கு வரலாம்'

பூமா தேவிக்கோர் திலகம் போலும், தொண்டுகிழவி யானாலும் இயற்கை யரசி அழகுபட அமைந்திருக்கும் அன்னை பாரதியின் அருந் தவப் புதல்வனே இன்னுங்கேள்.

புரோபசர் வில்சன் தன் சரித்திரப் புத்தகத்தில் கூறுவதைக் கேள்: 'கைத் தொழில் விருத்தியான இந்த தேசத்தில் (இங்கிலாந்தில்) இரும்பு உருக்குவது வெகு சில வருஷங்களாகத்தான் நடை பெறுகிறது. ஆனால் இந்துக்கள் வெகு காலந் தொட்டு இரும்பை உருக்கவும், அவைகளைப் பொருத்தவும், உருக்காக்கவும் கூடிய கைத் தொழிலைச் செய்து வந்திருக்கின்றனர்'

ரானடே என்பவர் தனது இந்தியாவின் பொருளாதாரக் கட்டுரைகள் (Ranade's 'Essays on Indian Economics', pp 159-160) என்ற புத்தகத்தில் கூறிய பொன் மொழிகளைச் சற்று எடுத்துத் தருகிறேன். உள்ளத்தில் ஊன்றிப்பார்.

'இரும்பு வேலைகள் பொதுவாக வேண்டியவைகளுக்கு உதவிய தல்லாமல் இந்தியா பிறபிற தேசங்களுக்கும் உயர்ந்த இரும்புச் சாமான்களை ஏற்றுமதி செய்யவும் முடிந்தது......... குறைந்தது 1500 வருஷங்கள் வயதையுடைய டில்லிக் கருகிலுள்ள பெயர்பெற்ற இரும்புத்தூணின் விசித்திர வேலையைக் கவனித்தவர்களுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியதோடு புராதன இரும்பு வேலையின் சாமர்த்தியத்தையும் அறிவுறுத்துகிறது. இந்தியாவில் பூமி சாஸ்திர இலாகாவைச் சேர்ந்த பால்என்பவர், கொஞ்சகாலத்திற்கு முன்கூட உலகத்திலேயே அப்படிப்பட்ட இரும்புத் தூண் செய்யும் இயந்திரசாலை இருந்திருக்க முடியாது என்றும் தற்போதுகூட அப்படிப்பட்ட சாலைகள் அனேகம் காண்பதரிது என்றும் ஒத்துக் கொள்கிறார். அஸாம் மாகாணத்தில் பீரங்கிகள் செய்யப்பட்டன. உலகப் பிரசித்தி பெற்ற டமஸ்கஸ் ஈட்டி செய்வதற்கு இந்திய உருக்குகள் உபயோகிக்கப் பட்டன. அக்காலத்தில் பேர்ஸியா தேசத்தார் இந்தியாவுக்கு நடந்து வந்து இந்திய உருக்குகளை வாங்கி ஏற்றுமதி செய்து வந்தனர். இங்கிலாந்திலும் கத்தி முதலியவை செய்ய இந்திய உருக்குகள் அதிகம் தேவையா யிருந்தன. இவ்விதமாக இரும்பு உருக்கு வதிலும், உருக்குகள் (Steel) செய்வதிலும் இந்தியா குறைந்தது 2000 வருஷங்களுக்கு முன்பே முன்னேற்ற மடைந்திருந்தது'

ரோமாபுரியோடு முதலாம் நூற்றாண்டில் வெகு தீவிரமாய் இந்தியா வியாபாரம் நடத்தியது. 4-ம், 5-ம் நூற்றாண்டுகளில் இரு சீன தேசத்துச் சுற்றுப் பிரயாணிகள் இந்தியாவுக்கு வந்து அதன் அற்புதத் தொழிலையும், வியாபார உன்னதத்தையும் பற்றிப் புகழ்ந்துரைத்துச் சென்றிருக்கின்றனர். பிறகு வெனிஸ், ஜெனோவா நகரங்களோடும் வெகு காலம் வியாபாரம் வளர்ந்தோங்கிற்று. இதுபற்றியே மர்ரே என்பவர் (Murray's 'History of India' p. 27) ('இந்தி

யாவின்) வெகு விசித்திரமானதாயும், மனிதர்களால் எங்கும் உண்டாக்கப் படாததாயும் அவ்வளவு உயர்ந்த சாமான்களை அனேக வியாபாரிகள் வெகு அபாயங்கட்கும் கஷ்டங்களுக்கும் ஆளாகித் தேடியோடி வந்தனர்' என்கிறார்.

ஞானம் செறிந்த பாரதத் தாயின் திரு நிறைச் செல்வனே! இவ்வளவு உன்னத நிலையிலிருந்த உன்னுட்டுக் கைத் தொழில் நசித்துப் போன காரணத்தையுங் கேள் சொல்கிறேன்.

வெனிஸ், ஜெனோவா நகரங்கள் க்ஷீண திசையடைந்த பிறகு இந்திய வியாபாரங்களைப் போர்த்துக்கியர்களும் டச்சுக்காரர்களும் கைப்பற்றினர். இங்கிலாந்து தேச வியாபாரிகளும் இதைக் கண் கொண்டு பார்க்கச்சகியாமல் 'ஈஸ்ட் இந்தியா கம்பெனி' ஒன்று இந்தியாவோடு வியாபாரஞ் செய்ய 1600ம் வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதி எலிஜபெத் இராணியின் உத்திரவின் பேரில் உண்டாக்கினர். ஈஸ்ட் இந்தியா கம்பெனி ரிப்போர்ட் பாரா 2ல் குறிப்பிட்டுள்ளபடி இந்த கம்பெனி யுண்டாக்கப்பட்டது. 'இங்கிலாந்தின் கைத் தொழில் சாமான்களைக் கொண்டு போய் இந்தியாவின் இயற்கை சாமான்களுக்கு மாற்றுவதற்கல்ல' ஆனால் இந்தியாவிலிருந்து கைத்தொழில் சாமான்களையும், இயற்கைப் பொருள்களையும் ஏற்றிச் செல்லவே என்று கூறப்பட்டிருந்தது. ஏனெனில் அப்பொழுது இங்கிலாந்தில் கைத் தொழில் சாமான்கள் உண்டாக்கப்பட வில்லை.

லெக்கி என்பவர் தமது சரித்திர நூலில் கூறுவதாவது (Leckys-History of England in 18th Century):—

'17ம் நூற்றாண்டின் இறுதியில் ஏராளமாகக் குறைந்த விலைக்கு நுட்பமான வேலைப் பாட்டையுடைய காலிகோ, மஸ்லின் துணிகள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு ஜனங்கள் வெகு ஆவலாய் வாங்கியதின் காரணமாய் அங்குச் சிறிது உண்டாகியிருந்த உரோமப்பட்டு நெசவுகள் க்ஷீணதிசையடையத் தொடங்கிற்று. ஆகவே 1700-ஆண்டிலும், 1721லும் பார்லிமெண்டில், பலவித நிறங்களைத் தாங்கியிருந்த காலிகோ துணிகளையும், சாமான்களையும் அல்லது பருத்தி கலந்தமற்ற எந்த அச்சு அல்லது நிறங்களிட்ட சாமான்களையும் (சில குறிப்பானவை தவிர) இங்கிலாந்துக்குள் பிரவேசிக்கச் செய்யக்கூடாது என்று ஓர் சட்டம் பிறப்பித்தது'

இப்படியாக இந்தியச் சாமான்களை வரவொட்டாது தடுத்ததுமன்றி இந்தியாவிலேயே இந்தியக் கைத் தொழில் எவ்வாறு நசுக்கப்பட்டது என்பதை ஸ்ரீ ராமேச சந்திர தத்தர் எழுதிய சரித்திர நூலின் மூலம் தெரிந்து கொள் (Mr. Ramesh Dutta-Economic History of British India.)

'இந்தியாவிலேயே கம்பெனிக்குண்டான அதிகாரத்தைக் கொண்டு இந்தியாவில் விருத்தியான கைத் தொழில்களை நசுக்கிவிடயத்தனித்தனர் கம்பெனியார்கள் 1769-மார்ச் மாதம் 17ந் தேதி வங்காள அதிகாரிக்கு, வங்காளத்தில் பட்டு எடுத்து சேகரிக்கும் வேலையை விட்டு அதனை

நெசவு செய்து வியாபாரஞ் செய்யுந் தொழிலை நசுக்கிவிட வேண்டுமென்று எழுதியிருந்தனர். அன்றியும் பட்டு நூல் சுற்றுவோர்கள் கம்பெனியாரின் வேலை செய்யுமிடத்தில் அவர்களுக்காக வேலை செய்ய வேண்டுமே தவிர தங்கள் வீடுகளில் அவ்வித வேலைகள் நடைபெறலாகாதென்றும் கூறினர்' மேலும் அவர் கூறுவதென்ன? 'ஈஸ்ட் இந்தியா கம்பெனியை நடத்தும் அதிகாரிகள் 1783ல் இந்தியாவை ஆளும் விதத்தைக் குறித்து எழுதிய கடிதத்தைக் காமன் சபையின் 9வது ரிப்போர்ட்டில், 37வது அனுபந்தமாகக் குறிப்பிட்டிருந்ததாவது.—இந்தத் திருத்தம் (மேலே குறிப்பிட்டபடி) மிகவும் நன்மையைப் பயக்கக்கூடியதாயிருக்கிறது. முக்கியமாக பட்டு முதலிய நூல் சுற்றுவோர்களை (நமது) வர்த்தக சாலையில் வேலை செய்யக் கொண்டு வருகிறது. இவ்வித நூல் நூற்போர்களைச் சரியான கவனமின்றி தங்கள் வீடுகளில் செய்துவர விட்டிருந்தால் அதைத் தடுப்பது முக்கிய கடமை. கவர்ன்மெண்டாரின் அதிகாரத்தைக் கொண்டு கொடூரமான தண்டனைகளால் அவைகளைப் பரிபூரணமாய்த் தடுத்து விடலாம்.'

ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இவ்வித ஏற்பாடுகள் செய்த பிறகு உன் நாட்டுக் கைத்தொழிலும் வியாபாரமும் எவ்வித நிலைக்கு வந்ததென்று கூறுகிறேன் கேள்.

சர் ஹென்றி காட்டன் என்பவர் (Sir Henry Cotton-' New India' 1890) அப்பொழுது இந்தியாவைப் பற்றிக் கூறியதாவது.

'100 வருஷங்களுக்குள்ளாகவே டக்கா என்ற பட்டணத்தில் வியாபாரம் ஒரு கோடி ரூபாய் பெறுமானதென்றும், அதின் ஜனத்தொகை 200,000 என்றும் மதிப்பிடத்தக்கதாயிருந்தது. 1787-ல் இங்கிலாந்திற்கு டக்காவிலிருந்து மஸ்லின் துணிகள் 30 லட்சம் ரூபாய் மதிப்புக்கு அனுப்பப்பட்டன. ஆனால் 1817ல் அவைகள் ஏற்றுமதியாகவே கிடையாது. நூல் நூற்பதும், நெசவு வேலையும் அநேக ஜனங்களுக்கு வேலை கொடுத்தது போக இப்பொழுது அவ்வித வேலை ஒன்றுங் கிடையாமல் போய் விட்டது. பெரிய பட்டணங்களில் செல்வமாய் வசித்த குடும்பங்களெல்லாம் கிராமங்களுக்குப் போய் தங்கள் ஜீவனத்திற்குத் தேட வேண்டியதாயிற்று'

விரமிதந்த ஓ இந்தியனே! உன் பார்புகழ் இந்தியாவின் கைத்தொழில் சாமான்கள் இங்கிலாந்தில் வந்து விற்பனையாகக் கூடாதென்று அதிக வரிப்போட்டு தடுத்த விதத்தை 1813ல் டிக்பி என்பவர் கூறும் விவரத்தைப் பார்:—

100 பவுன் மதிப்பான காலிகோ துணிக்கு வரி	ப. ஷி. பெ. 81-2-11
100 பவுண்ட் எடை பருத்திக்கு வரி	0-16-11
பருத்தி நெசவுத் துணி 100 பவுன் மதிப்புக்கு வரி	81-2-11
தலைமயிர், ஆட்டு ரோமம் முதலிய சாமான்களுக்கு 100க்கு	84-6-3
பூப்போட்ட வெள்ளை காலிகோ, மஸ்லின் துணி	32-9-2

மற்றவிதப் பஞ்சுத்துணிகள் 32-9-2

சாதாரண பஞ்சு, இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்கு அதிகம் வந்து சேர வேண்டுமென்று ஆலைகளுக்கு 100 பவுண்ட் எடை பருத்திக்கு மாத்திரம் ப. 0-16-11 என்று குறைந்த வரி விதித்திருப்பதைப் பார்த்தாயா? ஆனால் ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் இந்தியா வந்தது முதல் அவர்கள் சாமான்கள் இறக்குமதி வரியின்றியோ அல்லது வெகு சொற்ப வரியுடனோ வந்து புகுத்தப் பட்டன. இந்திய பருத்தி நெசவுத் துணிகள் இங்கிலாந்தில் இறக்குமதி வரி 100க்கு 81 பவுன் கொடுத்த போது இந்தியாவில் ஆங்கிலேயத் துணிகள் 100க்கு 2½ பவுன் மாத்திரம் கொடுத்ததென்றால் உள்நாட்டு கைத் தொழில் நசித்து கட்டத் துணிக்கு அயல் நாட்டாரை எதிர் பார்க்க நேர்ந்தது விந்தையா?

இந்திய சரித்திர ஆசிரியர் வில்சன் (H. H. Wilson) என்பவர் எழுதியதை ரமேச சந்திர தத்தர் தமது புத்தகத்தில் 262-263 பக்கங்களில் எடுத்துக் காட்டியதையும் தருகிறேன் பார்:—

‘(இந்தியப் பட்டு, பருத்தித் துணிகள் மீது) வரிகளும், சட்டதிட்டங்களும் ஏற்படா விட்டால் பெய்ஸ்லி, மான்செஸ்டர் நெசவு ஆலைகள் நின்றுவிட நேர்ந்து நீராவி இயந்திரம் வந்த பின்னும் தொடங்குவது சாத்தியமில்லாமலும் போயிருக்கும். இந்தியக் கைத் தொழில் நாசத்தால் ஆலைகள் தோன்றின. இந்தியா சுதந்தர நாடாயிருந்தால் தன்னை அபகரித்தவர்களுக்கு அபகாரஞ் செய்து பிரிட்டிஷ் சாமான்களின் மீது வரிகளை அதிகம் போட்டு வரவிடாது தடுத்து தனது கைத் தொழில் நாசமாகாது பாதுகாத்திருக்கும். இவ்வித சுய பாதுகாப்புக்கு இடமில்லாது போய் விட்டது. அவள் (இந்தியா) அன்னியரின் ஆதிக்கத்திலிருந்தாள். பிரிட்டிஷ் சாமான்கள் யாதொரு வரியும் கொடாமல் புகுத்தப்பட்டன. அன்னியக் கைத்தொழிலாளர் சரி சமானமாயிருந்து போராட முடியாமல் தன் எதிரியை-இந்தியத் தொழிலாளர்களை-அரசியல் அதிகார அநியாயத்தைக் கொண்டு அடக்கிக் கழுத்தில் சுருக்கிட்டுக் கொன்றனர்.’

ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வருவதற்கு வெகு காலத்திற்கு முன்பே சகல துறைகளிலும் இந்தியா தன்னரசு நாடாக உயர்ந்திருந்ததாக பேனாட்டு சரித்திர ஆசிரியர்கள் உள்பட யாவரும் எடுத்துக் காட்டியிருக்க ஆங்கிலேயரின் கடந்த 300 ஆண்டுகள் ஆட்சியில் இந்தியா ஈனநிலை யடைந்து சுதந்திர ஆட்சிக்கு இன்னும் தகுதி யற்றிருக்கிற தென்று சொன்னால் அப்பொறுப்பு— அந்தப் பழியாரைச் சார்ந்தது?

இந்தியாவும் மூலப் பொருள்களும்

—"வாதூலன்"

இந்தியா மூலப் பொருள்கள் நிறைந்த ஒரு தேசம். அதன் பலதிறப்பட்ட மூலப் பொருள்கள் ஏராளமாக தேசம் பூராவும் சிதறிக் கிடக்கின்றன. பூமி தேவி இந்தியாவின் தரையிலும் தண்ணீரிலும் ஏராளமான சொத்தை அருளியிருக்கிறாள். வேறு எந்த தேசமும் இது விஷயத்தில் பெருமை பாராட்டிக் கொள்ள முடியாது. இந்தியாவில் வியாபாரம் எப்பொழுது ஆரம்பமாயிற்றென்று சொல்ல முடியாது. உலகத்தில் மனித சரித்திரம் எழுதப்படுவதற்கு முன்னிருந்தே ஆரம்பமாயிருக்கிறதென்று சொல்லலாம். கிருஸ்தாப்தத்திற்கு ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னிருந்தே வியாபார தேசமாயிருந்து வந்திருக்கிறதென்பதற்குச் சரித்திரமில்லாமலில்லை.

பதினேழாம் நூற்றாண்டு ஆரம்பம் வரை வியாபார உலகத்தின் இருதயம் போலிருந்து அதற்கத்தியாவசியமான பொன்னும் பொருளும் விநியோகித்து வந்திருக்கிறது. அது வியாபாரம், கைத் தொழிலாகிய நதிகள் வந்து சேரும் சமுத்திரமாயிருந்து அதன் ஜனங்களுக்குச் சுபிக்ஷத்தை அளித்திருக்கிறது. இந்தியாவின் இந்தச் சுபிக்ஷம் ஐரோப்பிய தேசங்களின் கவனத்தைக் கவர ஆரம்பித்தது. ஒவ்வொரு தேசமும் இந்தியாவுக்கு வழியைக் கண்டு பிடித்து அதனுடன் வியாபாரத் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்பிற்று. இவர்களுடைய நோக்கம் என்ன? இந்தியாவை தாழ்மைப் படுத்தி தங்கள் தேசத்தை மேன்மைக்குக் கொண்டு வருவதுதான். 17, 18ம் நூற்றாண்டுகளில் இந்தியாவையும் அதன் ஐஸ்வர்யங்களையும் பற்றிய சதா சொப்பனம் கண்டு கொண்டிருந்தார்கள். இத்தேசத்துக்கு வழி கண்டு பிடிக்க, தனிமனிதர்களும் கூட்டுக் கம்பெனிகளும் பல சர்க்கார்களும் ஏராளமான ஜனங்களை இதில் ஈடுபடச் செய்ததுடன் பணம் முடக்குவதிலும் பின் வாங்கவில்லை. இம்முயற்சியின் பயனாய் அமெரிக்காவைக் கண்டு பிடித்ததைக் கொண்டு அவர்கள் திருப்திப் படவில்லை. அவர்களுடைய ஒரே நோக்கம் நவரத்தினங்களை விளையாட்டுப் பொருள்களாக உபயோகிக்கும் குழந்தைகளையுடையதும் பல திறப்பட்ட மூலப் பொருள்களும் ரஸாயன வஸ்துக்களும் நிறைந்ததுமான இந்தியாவுக்கு வழி கண்டு பிடித்து பூகோள படத்தில் அதன் ஸ்தானத்தைக் குறிப்பிடுவதுதான்.

பலதிறப்பட்ட பெருங் கஷ்டங்களுக்குப் பின் இந்த சம்பத்தான பூமி கண்டு பிடிக்கப்பட்டது. இதிலிருந்து மறைமுகமாகவும் எளிதில் தெரிந்து கொள்ள முடியாததுமான முறைகளில் சுரண்டல்கள் ஆரம்பிக்கப்பெற்று இன்னும் விடாது நடந்து கொண்டு வருகின்றன. தேசிய இயக்கம் ஆரம்பிக்கப் பெற்று ஜனங்களிடையே தேசப்பற்றுதலை யுண்டாக்கிற்றேயாயினும் அது தற்காலிக பரபரப்பாகவே முடிந்தது.

ஆனால் இந்த விடுதலைக்கான ஆரம்ப வேலை, பொருளாதார அபிவிருத்திக்குப் போதிய உதவி யளித்துள்ளதென்று நிச்சயமாய்ச் சொல்லலாம் 1905 முதல் 1931 வரையிலும் அதற்குப் பின்னும் நடந்து வரும் இயக்கங்கள் ஜனங்களிடையே சிறிய, பெரிய, நடுத்தரமான தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் ஆர்வத்தை உண்டு பண்ணி தொழிற்சாலைகளும் ஏற்பட்டுள்ளன. இது பிற்கால வியாபார, கைத்தொழில் உலகத்தில் இந்தியா ஒரு முக்கிய ஸ்தானத்தைப் பெறுமென்பதற்கறிகுறியாகும்.

இன்று இந்தியாவில் 5, 15,813 வேலையாட்கள் கொண்ட 380 பஞ்சாலைகளும், 72,935 தொழிலாளிகளுடன் 154 சினி ஆலைகளும் 21,440 ஆட்களுள்ள 61 நெருப்புப் பெட்டி ஆலைகளும் 5,973 பேர் கொண்ட 78 பின்னல் துணி ஆலைகளும் 5973 தொழிலாளிகளுள்ள 15 கம்பளித் தொழிலாலைகளுமிருந்து வருகின்றன. சென்ற முப்பத்தைந்து வருட விடாமுயற்சியினால் இங்குமங்கும் சில ஆலைகளே ஏற்பட்டு தேசத் தேவையின் ஓரளவுக்குக்கூட போதுமான உற்பத்தியைச் செய்கிறதில்லை. ஆயிரம் மடங்கு ஆலைகளேற்பட்டு உற்பத்தியும் ஆயிரம் மடங்கு அதிகமானால்தான் தேசத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்கும். தேவைக்குப் போதுமானவை கிடைக்கப் பெறாததால் அன்னிய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. மேலே சொல்லிய, இந்தியாவில் ஸ்தாபிக்கப் பட்டுள்ளதொழிற் சாலையில் உற்பத்தியாகும் அதே பொருள்கள் அந்நிய தேசங்களிலிருந்து இந்தியாவில் இறக்குமதியாவதைக் கவனிப்போம்.

துணி	14,15,27,167
ஜீனி	45,57,548
நெருப்புப் பெட்டி	23,51,758
கண்ணாடிச் சாமான்	1,25,12,053
கம்பளி	1,94,14,298
ரப்பர்	1,40,56,036
தாளும் தாள்பொருளும்	3,50,32,837

இந்தியாவில் அநேக ரப்பர் தொழிற்சாலைகளும், தாள் சாலைகளுமிருந்து வருகின்றனவென்றாலும் அவைகள் பெரும்பாலும் இந்தியரல்லாத முதலாளிகளுக்குச் சொந்தமானவையாயும், அன்னிய முதலாளிகள் லாபத்தைப் பெருக்கக் கூடியனவாயுமிருக்கின்றன. இவைகள் இந்திய தேசத்தில் ஆரம்பிக்கப்பெற்றது. இந்தியாவின் ஏராளமான மூலப் பொருள்களை உபயோகப் படுத்துவதற்கும் இங்கு கிடைக்கும் குறைந்த விகிதக் கூலிகளை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுவதற்கும் கடைசியாக இந்தியக் கம்பெனியென்ற பெயரைத் தரித்துக் கொள்ளுவதற்குமேயாகும். இந்தியாவில் விடாது நடந்து வரும் அரசியல் பொருளாதார இயக்கத்

னால் தேசியத்தில் ஆர்வம் கொண்டுள்ள பாமர மக்களை தேசியச் சாமானென்று சொல்லி இந்தியாவைச் சுரண்டுவதற்கு இது ஒரு சிறந்த வழியாயமைந்துள்ளது. அன்னிய நாட்டு முதலாளிகள் இந்தியாவில் உற்பத்திச் சாலைகள் ஏற்படுத்தி அதற்குச் செய்யும் நாமகரணத்துடன் இந்தியா லிமிடெட் என்னும் அடைமொழியை சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இம்முறையால் இறக்குமதி வரி போட வேண்டுமென்று பொதுஜனக் கிளர்ச்சிக்கு இடமில்லாமல் செய்து விடலாமென்பதை நன்கு கண்டுள்ளார்கள். இத்தமாதிரி ஏற்பட்ட ஸ்தாபனங்களினால் இந்தியா சுங்க வரியின் கஷ்டமடைவதுடன் அன்னிய நாட்டு முதலாளிகள் தங்கள் சரக்குகள் 100க்கு 100 இந்தியச் சரக்கென்று சொல்லி பொது ஜனங்களை ஏமாற்ற நல்ல சந்தர்ப்பமேற்பட்டுள்ளது. இந்திய ஆரம்பக் கைத்தொழில்கள் முன்னேறி வர வேண்டுமானால் இவ்விதப் போலி இந்தியத் தொழிற் சாலைகள் இன்னும் அதிகரிக்காதிருப்பதற்குச் சீக்கிரமான வழியைத் தேட வேண்டியது அத்தியாவசியமாகும்.

இவ்விதமாக இந்தியா உள் நாட்டிலிருந்தும் வெளி நாட்டிலிருந்தும் சுரண்டப் பட்டாலும் அத்தேச மக்களின் கஷ்டம் நீங்காமலும் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயராமலுமிருப்பது வருந்தத் தக்கதே. அன்னிய நாட்டுச் சரக்குகளை இறக்குமதி செய்யக் கூடாதென்று எண்ணியிருக்கிறார்களென்பதோடு இன்னும் சிலர் தேவையற்ற சாமான்களை உற்பத்தி செய்யக் கூடாதென்றும் கருதுகிறார்கள். ஆடம்பர வாழ்வு கூடாதென்பதே இவர்களது நோக்கம். இவர்களுடைய முயற்சி மேதாவிகளுக்கும் தபசிகளுக்கும் பொருந்துமே தவிர பொது மக்கள் செவி சாய்க்க மாட்டார்கள். தேசத்தின் நாகரிகம் மாறிக் கொண்டே வருகிறது. ஜனங்கள் ஒவ்வொரு நாளும் புதிய புதிய சாமான்களை விரும்புகிறார்கள். இந்தியத் தொழிற் சாலைகள் இதனை அளிக்கா விட்டால் அன்னிய நாட்டுத் தொழிற் சாலைகளுக்கு இது வெகு சாதகமாயிருக்கும். ஆகவே இந்தியர்களின் செளகர்யத்திற்காக இந்தியாவிலேயே பூராவும் இந்தியர்களின் மூலதனம் கொண்ட பல திறப்பட்ட தொழிற் சாலைகள் ஏற்படுத்த வேண்டியது அவசியமும் அவசரமுமாகிறது. அன்னிய நாட்டு இறக்குமதி குறைத்தலும் தேசிய தொழிற் சாலைகள் நிறுவுதலும் ஒரே சமயத்திலேற்பட வேண்டியவை. நம் தேசத்தில் வருடந்தோறும் எவ்வளவு மூலப் பொருள் கிடைக்கின்றன வென்று ஒரு சிலரே அறிவர். இவ்விளைவின் பெரும்பாகத்தை வெளி நாடுகளுக்கனுப்பி விட்டு ஒரு சிறு பாகத்தையே தேசஉபயோகத்துக்காக வைத்துக் கொள்கிறோம்.

மூலப் பொருளை வெளி யேற்றுவதென்பது நம்முடைய ஆஸ்தியையே வெளி யேற்றுவதாகும். நவீன இயந்திரங்களின் உதவியாலும் சாஸ்திர நிபுணர்களின் புத்திசாதுர்யத்தினாலும் காலணா விலையுள்ள நம்நாட்டு மூலப் பொருள், ஒரு ரூபாய் மதிப்புள்ள பொருளாக மாற்றப்பட்டு அப்பொருளின் உற்பத்திக்கான சாமான்களை ஏற்றுமதி செய்த நாமே அதனைத் தாராளமாக வாங்குகிறோம். இந்த

விஷம மார்க்கம் 200 வருஷங்களுக்கு முன் ஆரம்பிக்கப் பட்டு இன்னும் அதிலிருந்து விடுவித்துக் கொள்ளாமலிருந்து வருகிறோம். இந்தச்சரண்டல் எவ்வளவுக் கெவ்வளவு நடந்து கொண்டிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நாளுக்கு நாள் தரித்திர நிலைமை அடைவோ மென்பது நிச்சயம்.

இவ்வுண்மை கீழே தந்துள்ள, 1937-38 வருடத்தில் நடைபெற்றிருக்கிற மூலப்பொருள் ஏற்றுமதியிலிருந்து விளங்கும்.

மூலப்பொருள்	விலை
அரிசி	Rs. 2,61,73,760
கோதுமை	Rs. 5,51,84,850
பார்லி	28,51,865
நிலக்கடலை	8,93,30,000
லின்ஸீட்	3,56.03,000
பருத்திக்கொட்டை	3,07,238
ஆமணக்குக்கொட்டை	64,09,000
எள்ளு	19,18,289
மல்லி	9,27,893
Fenugreek	3,42 890
உலோக வர்க்கம்	8,02,00,000
பதம் செய்யாத தோல்	4,43,00,000
ஷெ. சணல்	14,77,00,000

மேலே சொல்லிய புள்ளி விபரங்களிலிருந்து இந்தியா அதன் ஆஸ்தியை எப்படி வெளியேற்றுகிறதென்பதும், அதன் நித்திய உபயோகத்திற்குத் தேவையானவற்றிற்கு வெளிதேசத்தை எவ்வாறு எதிர் நோக்கியிருக்கிறதென்பதும் தெரிய வரும். வருடந் தோறும் ஏற்றுமதியாகும் மூலப்பொருளின் பெரும் பாகத்தை உபயோகப்படுத்தும்படியான பெரும் தொழிற்சாலைகள் நாளது தேதி வரை இந்தியாவில் ஸ்தாபிக்கப் பெறவில்லை. இதற்குக் கூட்டுறவு அத்தியாவசியமாகும். இங்கு மங்கும் சிற்சில தனி மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டவைகள் ஆட்டத்திலிருக்கின்றன. கைத்தொழிற்சாலைகள், எண்ணிக்கையில் அதிகரிக்கின்றன வென்றாலும் இவைகள் பெரும்பாலும் சோப் முதலிய வாசனைத் திரவிய உற்பத்திசாலைகளே இவைகள் உபயோககரமானதும், அன்னிய நாட்டு இறக்குமதியைக் குறைக்கக் கூடியவையுமே யாகும். ஆனால் சாஸ்திர முறைப்படி செய்து விரிவாக இதனைச் செய்ய ஏற்பாடு செய்யாதது வருந்தவதற்குரியதே.

மேல் நாடுகள் காலத்தின் மாறுதலுக்கேற்ப சாஸ்திர முறையில் ஜனங்களுக்கு உபயோக கரமான எல்லாச் சாமான்களையும் உற்பத்தி செய்கின்றன. மூலப்பொருள்கள் நிறைந்துள்ள நம் நாட்டில் நாம் வேதாந்தம் பேசி காலத்தை வீணாக்கி வருகிறோம். நம் பக்கத்துத் தேசமாகிய ஜப்பான் இன்று உலகத்திலேயே கைத் தொழிலபிவிருத்தியில் முன்னணியில் நிற்கிறது. எழுபது வருடங்களுக்கு முன்னால்கூட அந்தத் தேசம், கைத்தொழிலென்பதே இன்னதென்று தெரியாமலிருந்தது. இன்று அது எல்லோரையும் மலைக்கச் செய்கிறது. இது ஏன்? ஜப்பான் புதிய முறைகளையும் இருட்டை நீக்கி எல்லாப் பாகத்தையும் ஒன்று போல் பிரகாசிக்கச் செய்யும் சாஸ்திரீய முறைகளையும் கைக்கொண்டதுவேதான் காரணம். அது சாஸ்திரத்தின் உதவியை தடையின்றி ஏற்றுக்கொண்டது. ஆனால் இந்தியா சாஸ்திரம் கொடுக்கும் உதவியை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. ஆனால் கடைசியாக இப்போது இந்தியாவுக்கு ஞான உதயமாயிருக்கிறதென்று

ஸம ஸமாஜம்

— வ. அ. தியாகராஜன் M.A.

திருக்குறளில் தர்மம் உண்டு என்பதற்கு அத்தாட்சியாக பல்லக்கில் உட்கார்ந்து இருப்பவனுக்கும் பல்லக்கை சுமந்து போகிறவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை பார் என்று எழுதி இருக்கிறது.* இப்பொழுது பல்லக்குக் காலம் போய் விட்டது பல்லக்கில் உட்கார்ந்து இருந்தவனையும், பல்லக்கைச் சுமந்தவர்களையும் ஒன்று சேர்த்து ரயில் வண்டியும் மோட்டாரும் இழுத்துச் செல்லுகின்றன. ஒரு மனிதனை மற்ற மனிதர்கள் தூக்கிச் செல்ல வேண்டிய அவசியம் போய் விட்டது. இதுவே விஞ்ஞான சாஸ்திரத்தின் மகிமை. மனிதன் தன்னுடைய புத்தி கூர்மையினால் வறுமையையும் வியாதியையும் போக்கடிக்க முடியும் என்று இதனால் தெரிகிறது. புதிய காலத்துக்குத் தக்கபடி புதிய தர்மம் வேண்டி இருக்கிறது. இந்தப் புதிய தர்மமே ஸம ஸமாஜத்தின் கொள்கை. ஸம ஸமாஜம் ஒரு தேசத்தில் ஏற்பட வேண்டுமானால் எந்தெந்த விதத்தில் ஏற்பட வேண்டும் என்பதையும், அதனால் உண்டாகும் பயன்கள் என்னவென்பதையும் நாம் இப்பொழுது கவனிப்போம். உலகம் என்பது ஒன்றே என்று நாம் கருதுவதால் மேனாட்டு தேசங்களில் இந்த ஸம ஸமாஜக் கொள்கை எப்படிப் பரவியது என்பதையும் கவனிப்போம்.

சுமார் 150 வருஷங்களுக்கு முன்னால் பிரான்ஸ் தேசத்தில் புரட்சி ஏற்பட்ட போது 'சுதந்திரம், சகோதரத்துவம், ஸம ஸமாஜம்' என்ற மூன்று வார்த்தைகளில் புரட்சியின் கொள்கைகளை அடக்கி பொது ஜனங்களுக்குத் தெரிவித்தார்கள். இம்மூன்றில் 'சுதந்திரம்' என்பதால் சட்டத்துக்கு முன் எல்லாரும் ஒன்றே என்பது முக்கியமாக எடுத்துச் சொல்லப்பட்டது. ஏனென்றால் அந்தக் காலத்தில் சட்டம் எல்லாருக்கும் ஒரே விதமாய் இல்லை. பெரிய நிலச்சுவான்தார்களும் பாதிரிமார்

சொல்லலாம். இந்திய தேசியத் திட்டக் கமிட்டியார் பல ஸப் கமிட்டிகள் நிறுவி இந்தியாவை கைத்தொழில் தேசமாக்குவதற்கு எல்லா வித முயற்சிகளும் செய்து வருகிறார்கள். கூடிய சீக்கிரம் இந்தியாவில் சாஸ்திர முறையில் சிறியவையும் பெரியவையுமான கைத்தொழில்கள் ஏற்பட்டு அபிவிருத்தி யடையலாமென நம்ப இடமிருக்கிறது.

களும் அரசாங்கத்திற்கு வரி செலுத்துவது இல்லை. சாதாரண ஜனங்களே எல்லாவிதமான வரியையும் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. அதனால் சட்டத்துக்கு முன் எல்லாரும் ஒன்றேயானால் சகோதரத்துவமும் சமரஸமும் தானே ஏற்படும் என்று கருதப்பட்டது. இதற்காகத்தான் பிரான்ஸில் குடியரசு ஏற்படுத்தப்பட்டது. இதன் பயனாக என்ன நன்மைகள் விளைந்தன என்பது சரித்திரத்தைச் சேர்ந்ததாகும். நாம் இப்பொழுது கவனிக்க வேண்டியது என்னவென்றால், சட்டத்துக்கு முன் எல்லாரும் ஒன்றே என்றால் மட்டும் போதாது. பிரான்ஸில் இருந்த வித்தியாசங்கள் இல்லாவிட்டாலும், பொருளாதாரத்தில் அங்கு சமரஸம் ஏற்படவில்லை. பொருளாதார விஷயத்தில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்ற கருத்துடன் அரசாங்கம் சும்மா இருந்து விட்டதால் தொழிற்சாலை ஸ்தாபனங்களில் வேலை செய்பவர்களுக்கு மிகக் குறைவாய் கூலி கொடுத்து அதிகமாய் வேலை வாங்கி, பணம் உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை அதிகமாக்கி விட்டது. சுதந்திரம் மாத்திரம் இருந்ததே தவிர சமரஸக் கொள்கை போய் விட்டது. மனிதர்களுக்குள் வித்தியாசம் இருக்க வேண்டும் என்றும், அப்படி வித்தியாசங்கள் இருப்பது நல்லது என்றும் கருதப் பட்டது. வித்தியாசங்கள் இருப்பதால் தான் முன்னுக்கு வருவதற்கு ஊக்கத்தைக் கொடுக்கிறது என்றும் கருதப் பட்டது. மேலும் டார்வின் என்பவர் இயற்கையிலேயே போட்டியும் சண்டையும் இருக்கிறது என்றும், சிறிய மீனை பெரிய மீன் விழுங்குவது நியாயம் என்றும் கற்பித்தார். ஒரு தேசத்தில் எப்பொழுது ஸகோதரத்துவம் என்பதை மறந்து விட்டார்களோ அப்பொழுதே சமரஸக் கொள்கை போய் விட்டது. சுதந்திரம் என்றால் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் யார் சண்டை போட முடியாமல் இருக்கிறார்களோ அவர்களை ஜயித்து விடுவது என்ற அர்த்தத்திற்கு வந்தது. அதனால்தான் ருஷியாவில் புரட்சி ஏற்பட்ட போது லெனின் சொன்னது என்னவென்றால் சுதந்திரம் என்பது பிசகு. சுதந்திரம் வேண்டியது இல்லை. சமரஸம் ஒன்றே வேண்டும். சமரஸம், ஸகோதரத்துவத்தின் மூலம் வராது. அதனால் புரட்சியாளர்கள் தமது விரோதிகள் என்று யாரைக் கருதுகிறார்களோ அவர்களைத் தண்டனைக்கு உட்படுத்த வேண்டும் என்றான். இதனால் என்ன ஏற்படுகிறது என்றால் சுதந்திரம், ஸகோதரத்துவம், சமரஸம் என்ற மூன்றும் ஐரோப்பிய தேசத்தில் எந்த நாட்டிலும் மூன்றும் ஒன்று கூடி இருந்தது கிடையாது. இதனால் தான் ஐரோப்பிய தேசத்தில் எந்த நாடும் இன்னும் உயர் நிலைமைக்கு வந்தது கிடையாது.

இப்பொழுது நமது தேசத்தின் தேவைகளைக் கவனிப்போம். நாம் சுதந்திரத்தைக் கோருகிறோம் என்பதைப்பற்றியும் ஏன் கோருகிறோம் என்பதைப் பற்றியும் இப்பொழுது கவனிக்க வேண்டியது இல்லை. நாம் அஹிம்சையை எல்லா தர்மத்திற்கும் முக்கியமாய்க் கருதும் வரை ஸகோதரத்துவத்தைப்பற்றியும் அதிகமாய்ச் சொல்ல வேண்டியது இல்லை. சமரஸம் என்பதைப்பற்றி மாத்திரம்

இப்பொழுது கவனிப்போம். நமது தேசத்தில் ஸம ஸமாஜம் ஏற்பட வேண்டுமானால் அது மூன்று விதமாய் ஏற்பட வேண்டும். முதலாவது மத விஷயத்தில், இரண்டாவது அரசாங்க விஷயத்தில். மூன்றாவது பொருளாதாரத்தில்.

மத விஷயத்தில் நமது தேசத்தில் ஸம ஸமாஜம் எவ்வளவுமட்டில் இருந்தது அல்லது இருக்கிறது என்று சொல்வது அரிது. கீதையில், ஒருவன் யானையையும், நாயையும் சண்டாளனையும் பார்த்து இவர்கள் எல்லாரிலும் இருக்கும் ஒரே கடவுளை எவன் ஒருவன் வணங்குகிறானோ அவனே ஞானி என்று சொல்லப்படுகிறது. பிரஹ்லாதன் கதையிலிருந்தும் கடவுள் எங்கும் இருக்கிறார் என்பது கற்பிக்கப்பட்டது. ஆனால் பலகாரணங்களால் இந்தக் கொள்கை ஓலைச்சுவடிகளிலும் புஸ்தகங்களிலும் இருந்ததே ஒழிய செயற்கையில் நாம் பலதரம் மறந்துபோய் இருக்கிறோம். இந்து மதத்திலுள்ள பல ஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்யக்கூடாது என்றும் அவர்கள் ஒரு மரத்தடியில் ஒரு செங்கலை வைத்துப் பூசை செய்தால் போதும் என்றும் தடுத்து விட்டோம். நந்தனார் சரித்திரத்திலிருந்து பாட்டுகளைப் பாடுபவர் பலர். அதன் அர்த்தத்தை உணர்ந்தவர் சிலரே. மத விஷயத்தில் கொள்கைக்கும் செய்கைக்கும் உள்ள பள்ளத்தாக்கின்மேல், முதல் முதலில் ஒரு வாராவதி கட்டினவர்கள் பிரம்ம ஞான சபையார் (தியசாபிகல் சொஸைட்டி) ஆவர்கள். இந்தச் சமயத்தில் இவர்களுக்கும் இந்தச் சபையின் தலைவராயிருந்த பெசண்டு அம்மையாருக்கும் நமது நன்றி. காசியில் ஸ்ரீமாளவியா அவர்கள் கங்கைதீரத்தில் சிவராத்திரி யன்று தீண்டாமையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மந்திரம் உபதேசம் செய்ததும், திருவாங்கூர் மன்னர் தமது சமஸ்தான ஆலயங்களை எல்லாருக்கும் திறந்து வைத்த பிறகு காந்தியடிகள் சுற்றுப் பிரயாணம் செய்ததும் எல்லாருக்கும் ஞாபகம் இருக்கிறது. இதனால் என்ன தெரிகிறது என்றால் மத விஷயத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் ஸம ஸமாஜம் ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது. வீரமாதர்கள் மிளகாய்ப் பொடியைத் தூவினாலும் சரி, மண்ணை வாரி இறைத்தாலும் சரி, இது நிற்காது. ஏனென்றால் இதுதான் புதிய காலத்துத் தர்மம். இந்தச் சமயத்தில் நாம் முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது என்னவென்றால், ஆலயப் பிரவேசத்தைப் பிறருக்கு விடுவதால் அவர்கள் நாம் ஏதோ நல்லது செய்து விட்டோம் என்று கருதக்கூடாது. பஞ்சதந்திரத்தில் ஒரு சிறுகதை ஞாபகம் வருகிறது. ஒரு எலியும் ஒரு தவளையும் நட்புக் கொண்டு இருந்தனவாம். அதனால் இரண்டும் எப்போதும் ஒன்றாய் இருக்க எண்ணி ஒரு கயிற்றினால் தங்கள் கால்களை கட்டிக் கொண்டனவாம். பிறகு தவளை தண்ணீரில் குதித்ததாம். செத்துப் போன எலி நீரில் மிதப்பதைக் கண்டு அதை எடுத்துப் போக வந்த பறவை உயிரோடு இருந்த தவளையையும் எடுத்துக் கொண்டு போய் விட்டதாம். இதனால் என்ன தெரிகிறது என்றால், இந்து மதம், அதை வழிபடுபவர்களுக்கெல்லாம் பொது என்றும், அந்த மதத்தின் கொள்கைகள் என்ன வென்பது பலருக்குத் தெரியாவிட்டால் மற்ற

வர்களுக்கும் ஞாஷேமம் கிடையாது என்பதும்தான். ஒரு தேசத்தின் வாழ்க்கையை ஒரு மனிதன் உடலுக்கு ஒப்பிடலாம். எப்படி ஒரு உடலில் ஒரு பக்கம் வியாதி பிடித்தால் அது உடல் முழுதும் பரவுகிறதோ அது போல் ஒரு சமூகத்திலும் ஒரு பான்மையார் அறிவு இல்லாமல் இருப்பார்களானால் அவர்கள் மற்றவர்களையும் பள்ளத்தில் இழுத்து விடுவார்கள். அதனால் பிறர் வாழ்க்கைக்கு மாத்திரமல்ல, தம்முடைய வாழ்க்கைக்கே கேடு நேரும்.

இரண்டாவதாய் நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் அரசாங்க விஷயத்தில் எப்படி ஸமஸமாஜம் ஏற்படலாம் என்பது. 'மனிதனைக் காண்பி, நான் சட்டத்தைக் காண்பிக்கிறேன்' என்று இருக்கக் கூடாது. நியாயஸ்தலங்களில் பணம் உள்ளவர்கள் கெட்டிக்கார வக்கீல்களை வைத்து தப்பு செய்தாலும் தண்டனைக்கு உள்படாமல் தப்பித்துக் கொள்ள முயல்கிறார்கள். இது நமது தேசத்தில் மட்டுமல்ல, இங்கிலாந்திலும் இருப்பதாகத் தெரிகிறது. கால்ஸ்வொர்த்தி என்ற ஆங்கில அறிஞர் இந்த விஷயத்தைப்பற்றி 'வெள்ளி மூக்குப் பொடி டப்பி' என்று ஒரு நாடகம் எழுதி இருக்கிறார். மற்றொரு முக்கிய விஷயம் என்னவென்றால், தேசம் ஒன்றே என்று கவனிப்போமானால், பெரும் பான்மையோர், சிறு பான்மையோர் என்று தேசத்தைப் பிரித்து பெரும் பான்மையோருக்கு ஒருவிதமான விதி, சிறு பான்மையோருக்கு மற்றொரு விதமான விதி என்பது மிகவும் தப்பானது. எப்படிப் பார்த்தாலும் சிறு பான்மையோர் பெரும் பான்மையோர் ஆக முடியாது. எவ்வளவு முயன்றாலும் தவளை எருதை விடப் பெரிதாக முடியாது. அப்படி முயலுமானால் அதற்கே கேடு நேரிடும். அதனால் சிறுபான்மையோர் 'தலையானால் நான் ஜெயித்தேன். பூவானால் நீ தோற்றாய்' என்று எப்படி போனாலும் தாங்களே மேன்மைக்கு வர வேண்டும் என்று முயலுவது அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கெடுதியை விளைக்குமே யொழிய நன்மையை விளைவிக்காது. ஒரு ஸமாஜம் ஒரு உடல் போன்றது என்று முன்பே சொல்லி இருக்கிறோம். அதில் ஒவ்வொரு வகுப்பினரும் ஒரு அவயவம் போல். கண்ணுக்கும் கைக்கும், காலுக்கும் மூக்குக்கும் சண்டை ஏற்படுமானால், எந்த அவயவத்துக்குச் சேதமானாலும் உடலுக்குச் சேதம்தான். இந்தச் சண்டையில் ஜெயித்தவர்கள் யாரும் கிடையாது. ஆனால் எல்லாரும் தோல்வியடைந்தவர்கள்.

மூன்றாவது பொருளாதாரம். பொருளாதார விஷயத்தில் சுகம் ஏற்படவேண்டும் என்று எண்ணுவதுகூட சில சமயங்களில் கஷ்டமாய் இருக்கிறது. எப்படி ஆலயப்பிரவேசத்தில் ஆலயத்தில் உள்ளே போக உரிமையுள்ளவர்கள் உரிமை இல்லாதவர்களைத் தடுக்கிறார்களோ, அப்படியே பொருளாதார விஷயத்திலும் வித்தியாசங்களால் நன்மை அடைகிறவர்கள், வித்தியாசங்கள் இல்லாமல் இருப்பதை தடுக்கிறார்கள். இவர்கள் தங்கள் சுகம் எது என்று தெரியாமல், மற்றவர்களுக்குச் சுகமில்லாமல் இருப்பதே தங்கள் சுகம் என்று கருதுகிறார்கள். பழையகாலத்துக்கிற்ற தவப்படங்களில்

சுவர்க்கத்தின் படம் ஒன்று இருக்கிறது. இந்தப் படத்தில் சுற்றிலும் நரகம். பலவிதமான கஷ்டம். இதன் மத்தியில் ஒரு தீவு. இந்தத் தீவில் சுவர்க்கத்தில் உள்ளவர்கள் உட்கார்ந்து கொண்டு மற்றவர்கள் கஷ்டப் படுவதைப் பார்த்து நமக்கு இந்தக் கஷ்டம் இல்லையே என்று சந்தோஷப்படுகிறார்கள். இந்த மாதிரி சுவர்க்கம் நமக்கு வேண்டியதில்லை. மற்றவர்கள் கஷ்டப்படுவதைப் பார்த்து எப்படி சந்தோஷப்பட முடியும்? நமது சுவர்க்கம் எது என்றால் எல்லோரும் சுகமாய் இருந்து அவர்கள் முகத்தில் பறக்கும் ஒளியையும் ஆனந்தத்தையும் காண்பதுதான். நமது தேசத்தில் பொருளாதார விஷயத்தில் அதிகமாய் வித்தியாசங்கள் ஏற்பட்டு இருப்பதால் பலகேடுகள் நேர்ந்திருக்கின்றன. முற்காலத்து மன்னர் சிலருக்குப் பல மனைவிகள். ஆயிரக் கணக்கில். தெய்குர்ஷா என்ற மன்னருக்கு 10,000 மனைவிகளாம். அல்லாவுத்தீன் மன்னரின் மந்திரிக்கு, 2,000 மனைவிகளாம். இந்த மனைவி சைநியத்தைப் பாதுகாக்க ஒரு சிறு பேடி சைனியம். சிறுவர்களைப் பிடித்து, அவர்களுக்கு ஒரு சிறிய ஆபரேஷன் செய்து இந்த மனைவி சைனியத்தைக் காக்கப் போட்டிருப்பார்களாம். இதனால் யாருக்கு என்ன சுகம் என்று தெரியவில்லை. அந்தக் காலத்து மன்னர்களுக்காவது, அல்லது அவர்களுடைய மனைவிகளுக்காவது, அல்லது அவர்களைக் காப்பதற்காவது எந்த சுகமும் விளைந்ததாகத் தெரியவில்லை. வருங்காலத்தில் பார்ப்பவர்களுக்கு, நமது காலத்துப் பொருளாதார வித்தியாசங்கள் இதே மாதிரியாய்த் தோன்றும். இப்படிப் பட்ட வித்தியாசங்களை ஏன் ஜனங்கள் பொறுத்திருந்தார்கள் என்று ஆச்சரியம் அடைவார்கள்.

ஸம ஸமாஜம் என்ற மாத்திரத்தில், எல்லோருக்கும் எப்பொழுதும் ஒரே மாதிரியாய் இருக்க வேண்டும் என்று அர்த்தம் இல்லை. எல்லோருக்கும் ஒரே மாதிரியான உடை, ஆகாரம், இருக்குமிடம் என்று அர்த்தம் இல்லை. எப்படி எல்லோரும் ஒரே உயரமாயும், ஒரே பருமனையும் இருக்க முடியும்? அதனால் ஒரு மனிதன் நீளமாய் இருந்தால் அவன் காலை வெட்டிவிடு; குள்ளமாய் இருந்தால் நீட்டிவிடு என்பது ராக்ஷஸர்களுடைய நியாயம்; மனிதர்களுடைய நியாயம் அல்ல. ஸம ஸமாஜம் என்றால் என்ன என்பதை நன்கு உணர வேண்டும். யானைக்கும் பூனைக்கும் ஒரே அளவு ஆகாரத்தைப் பகுத்துக்கொடு என்பது இல்லை. அப்படிச் செய்வோமானால், யானை ஆகாரம் இல்லாமல் செத்துப் போகும். பூனை அதிகமாய்த் தின்று செத்துப் போகும். நாம் சொல்வது என்னவென்றால் யானைக்கு வேண்டியதை யானைக்குக் கொடு. பூனைக்கு வேண்டியதை பூனைக்குக் கொடு. ஒன்றை நினைத்து மற்றொன்றை மறக்கக் கூடாது என்பதுதான். ஒரு ஸமாஜம் ஒரு குடும்பத்தைப் போன்றது. ஒரு பிள்ளை பலசாலியாய் இருக்கலாம். நன்றாய்ச் சாப்பிட்டு ஜீரணித்துக் கொள்ளும் சக்தி இருக்கலாம், மற்றொன்று நோயாளியாய் இருக்கலாம். அதனால் நோயாளிப் பிள்ளையை மலைமேல் விட்டு விட்டுக் கழுகுகள் தின்றுவிடட்டும் என்று விட்டு விடுவதில்லை. ஸமாஜம் என்றால் ஒன்றே என்று நினைத்து

ஒவ்வொருவருடைய தேவையையும் கவனிக்க வேண்டும். உலகத்தில் எல்லாருடைய வரும்படியையும் ஒன்றாய்ச் சேர்த்து, உலகத்தில் எத்தனை ஜனங்கள் என்று அதை வகுத்து, ஒவ்வொருவருக்கும் இவ்வளவு என்று பங்கிட்டு கொடு என்று அர்த்தம் இல்லை. ஸமஸமாஜம் என்னவென்றால், 'ஒவ்வொருவருடைய தேவையையும் கவனி. ஆனால் தேவை போக மிச்சம் இருப்பதை சரியான வழி மூலம் ஒன்று சேர்த்து பொது ஜனங்களின் நன்மைக்கு உபயோகி' என்பதுதான். ஒரு ஊரில் நல்ல ரோட்டுகள் போட்டால், அதில் சிலர்தான் நடக்கலாம். அல்லது மற்றவர்கள் நடக்கக் கூடாது என்று கிடையாது. அல்லது ரோட்டுகளில் மோட்டார் வண்டிகள் மாத்திரம்தான் போகலாம், மாட்டு வண்டிகள் போகக் கூடாது என்று கிடையாது. நல்ல ரோட்டுகள், நல்ல குழாய்ஜலம், நல்ல ஆஸ்பத்திரிகள், எல்லாருக்கும் நல்ல பள்ளிக்கூடங்கள், இவைகளை மிச்சமான பணத்திலிருந்து ஏற்படுத்த வேண்டும். இப்போது யுத்தத்தில் இங்கிலாந்து அரசாங்கம் ஒரு நாளுக்கு 50 லக்ஷம் பவுன் செலவழிக்கிறது. இந்த 50 லக்ஷம் பவுன் வீதம் சமாதானம் இருந்தபோது ஏன் பொது ஜனங்களின் சவுக்கியத்திற்காகச் செலவழிக்கக் கூடாது? சமாதானத்தின் வெற்றி யுத்தத்தின் வெற்றியை விடப் பெரிது. சமாதானத்தில் வெற்றியடைந்த தேசம் யுத்த வெற்றியை விரும்ப வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் சமாதானம் எப்பொழுதும் இருப்பது. யுத்தம் சில காலங்களில் மாத்திரம் தான் இருக்கும். எப்படி யுத்தத்தில் வெடிகுண்டுகள் முட்டாளையும் கெட்டிக்காரனையும் வித்தியாசம் பாராட்டாமல் அழித்து விடுகின்றனவோ, அப்படியே ஸமஸமாஜம் இல்லாத தேசத்தில், வறுமையால் கஷ்டப்படுபவர்களிடையில் பிறக்கும் வியாதிகள், வறுமை இல்லாதவர்களிடையிலும் புகுந்து இருவரையும் கஷ்டத்துக்கு ஆளாக்குகின்றன. ஸமஸமாஜம் ஏற்பட்டால் எல்லாரும் புத்திசாலிகளாகவும் பலசாலிகளாகவும் இருப்பார்கள் என்று சொல்லுவதிற்கில்லை. ஆனால் நிஜமான புத்திசாலி யார் என்று எடுத்துக் காட்டும். இப்பொழுது அவகாசம் இல்லாமல் இருக்கும் வகுப்புகளிலிருந்து பெரிய கலைஞர்களும் விஞ்ஞான சாஸ்திர நிபுணர்களும் வரலாம். மனிதன் மனிதனால் செய்யப்பட்ட தடைகள் இல்லாமல், தன்னுடைய நிஜமான 'உயரத்திற்கு' வளரலாம். இதுவே வருங்காலத்தின் கனவு.

ஒரு ராஜாங்கத்தை நல்ல முறையில் ஆள்வது மிகக் கடினம். அதிலும், ஒரு தனி மனிதனா அந்தக் காரியத்தைச் செய்து முடிப்பதென்பது அதனிலும் மிகக் கடினம். இந்த நிலையில், அரசன், தன் ராஜ்யத்தை ஆளும் பொறுப்பை தன் பிரதிநிதிகளிடம் விட்டு விட்டால் கேட்பானேன்!

— ரூஸோ.

ஸையத் ஹஸன் இமாம்

ஜனனம்—1871

மரணம்—1933

—"ஒரு காங்கிரஸ் வாதி"

1918ம் வருஷம் செப்டம்பர் மாதம் பம்பாயில் காங்கிரஸின் விசேஷக் கூட்டமொன்று கூடியது. மாண்டேகு-செம்ஸ்போர்ட் சீர் திருத்த சம்பந்தமாக காங்கிரஸினுடைய அபிப்பிராயமென்ன வென்பதைப் பற்றித் தீர்மான மாகச் சொல்ல வேண்டிய அவசியம் காங்கிரஸுக்கு அப்பொழுது ஏற்பட்டது. இந்த நெருக்கடியில்கூடிய காங்கிரஸுக்குத் தலைமை வகித்தவர் ஸையத் ஹஸன் இமாம் அவர்கள். இவர் பீஹார் வாசி. பாட்னா ஜில்லாவைச் சேர்ந்த நேவ்டா என்ற கிராமத்தில் இவர் 1871ம் வருஷம் ஆகஸ்ட்மாதம் 31ந் தேதி பிறந்தார். பாட்னாவிலும் அர்ரா என்ற ஊரிலும் இவர் பாலியத்தில் கல்விப் பயிற்சி பெற்றார். சரித்திர பாடத்திலும் ஆங்கிலத்திலும் இவருக்கு அதிகமான அக்கரை ஏற்பட்டது. 14வது வயதிலேயே ஆங்கில பாஷையிலுள்ள உயர்தரக் கவிகளை யெல்லாம் படித்து அவற்றின் சாரத்தை கிரகித்துக் கொண்டார். ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருக்கிற போதே, வாதப் போட்டிகளில் கலந்து கொள்வார். இவருடைய புத்திசாலித் தனத்தைக் கண்டு, இவருடைய தாயார், மேற் படிப்புக்கு இங்கிலாந்துக்கு அனுப்பத் தீர்மானித்தார். அப்படியே 1886ம் வருஷம் ஜுலை மாதம் 24ந் தேதி லண்டனுக்குச் சென்றார். அப்பொழுது லண்டனில் பீஹார் வாசியான ஸ்ரீ சச்சிதானந்தா சின்ஹா இருந்தார். அவருடன் இவரும் கூடச் சேர்ந்து வசித்தார். தமது படிப்பு விஷயத்தில் இவர் அதிக கவனஞ் செலுத்தி வந்ததோடு, ஆங்காங்கு பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொண்டார். அநேக கூட்டங்களில் பேசினார். தாதாபாய் நௌரோஜியினால் ஸ்தாபிக்கப்பட்ட இந்தியா சங்கத்தின் காரியதரிசியா யிருந்தார். இங்ஙனமே லண்டன் அஞ்சுமான் இஸ்லாமியா என்ற சங்கத்திற்கும் இவர் காரியதரிசியா யிருந்தார். வில்லியம் டிக்பி என்ற ஒரு பிரபல அரசியல் வாதியின் கீழ் சிறிது காலம் அந்தரங்கக் காரியதரிசியாகவும் இருந்து வேலை பார்த்தார். தாதாபாய் நௌரோஜி, பார்லிமெண்டுக்கு அபேட்சகராக நின்ற போது, இவர் மிகவும் பாடுபட்டு உழைத்தார். 1892ம் வருஷம் பாரிஸ்டர் பரீட்சையில்

தேதி விட்டு இந்தியா திரும்பினார். அப்பொழுது இவருடைய மூத்த சகோதரரான சையத் அலி இமாம், பாரிஸ்டர் தொழிலில் பிரசித்தி அடைந்து வந்திருந்தார். அவருடன் இவரும் வந்து சேர்ந்து கொண்டு, வக்கீல் தொழிலில் இருவரும் நல்ல பொருள் சம்பாதித்தார்கள். 1910ம் வருஷம் சையத் இமாம் கல்கத்தாவுக்குச் சென்று அங்கே வக்கீல் தொழில் நடத்தத் தொடங்கினார். நல்ல புகழும் பொருளும் கிடைக்கும் போலிருந்தது, ஆனால் அதற்குள் இவர் ஹைகோர்ட் ஜட்ஜாக நியமிக்கப்பட்டு விட்டார். இப்படியிருக்கிற போது, இவருடைய தேக நிலை கெட்டு விட்டது. ஒரு சமயம், கல்கத்தா ஹைகோர்ட் மாடிப்படியிலிருந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தார். பிறகு, தமது பதவியை ராஜிநாமா செய்து விட்டு, பாட்னாவுக்கு வந்து பாரிஸ்டர் தொழில் நடத்தினார்.

இந்தக் காலத்தில் இவர் பொதுஜன சேவையில் அதிகமாக ஈடுபடலானார். ஜாதி, மாகாணம் முதலிய குறுகிய பற்றுக்களிலிருந்து இவர் விடுதலையடைந்தவராய், தேச நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு சேவை செய்தார். ஒரு சமயம் ஒரு பிரசங்கத்தில் இவர் பின் வருமாறு குறிப்பிடுகிறார் :—

'சகோதரர்களே! உங்கள் ஆசையில் முதல் ஸ்தானம் பாரத மாதாவுக்குக் கொடுங்கள்; அதற்கடுத்தபடியாக உங்கள் மாகாணத்திற்கு; பிறகு உங்களுக்கு இஷ்டப்பட்டபடி உங்கள் ஆசையைப் பகிர்ந்து கொடுங்கள்.'

இவர் பொதுஜன சேவையில் ஹிந்து, முஸ்லீம் என்ற வேற்றுமையே பாராட்டியது கிடையாது. அலிகார் முஸ்லீம் சர்வ கலாசாலைக்கும், காசி ஹிந்து சர்வ கலாசாலைக்கும் சமமாக இவர் நன்கொடையளித்திருக்கிறார். பீஹார் நேஷனல் காலேஜுக்கு ஒரு சமயம் பண நெருக்கடி ஏற்பட்ட போது இவர் லட்சக்கணக்காக உதவி செய்திருக்கிறார்.

இவர் பொதுஜன சேவையில் ஈடுபட்ட காலத்திலிருந்து, இவர் அநேக காங்கிரஸ்களில் கலந்து கொண்டிருக்கிறார். இவர் எப்பொழுதுமே தேசத்தை முன்னணிப் படுத்திக் கொண்டு பேசி வந்தாரே தவிர, ஜாதியை முன்னணிப் படுத்திப் பேசி வந்ததேயில்லை. இவருடைய பரந்த நோக்கமும், விஷயத்தைத் தைரியமாக எடுத்துச் சொல்லும் ஆற்றலுமே, 1918ம் வருஷத்துச் செப்டம்பர் மாதத்தில் பம்பாயில் கூடிய விசேஷ காங்கிரஸுக்கு இவரைத் தலைவராகத் தெரிந்தெடுக்கச் செய்தது.

1920ம் வருஷம் மகாத்மா காந்தியின் தலைமையில் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கப் பெற்ற காலத்தில், பீஹார் மாகாணத்தில் சத்தியாக்கிரகப் பத்திரத்தில் முதன் முதலாகக் கையெழுத்திட்டவர் இவர்தான். 1930ம் வருஷ உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது இவர், தேக அசௌக்கியம் காரணமாக நேர்முகமாகக் கலந்து கொள்ள முடியவில்லையாயினும், மாதம் ஐந்நூறு ரூபாய் வீதம் நன்கொடையாக அளித்து வந்தார்.

சையத் ஹஸன் இமாம், 1933ம் வருஷம் திடீரென்று மாரடைப்பினால் இறந்து போய் விட்டார்.



1914-39 - ஹிட்லரும் மஹா யுத்தமும்

ஆசிரியர்: ஸ்ரீ எ. ஜி. வேங்கடாச்சாரி; வெளியிட்டோர்: பிருந்தாவனப் பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் 1x16 அளவு: 401 பக்கங்கள்: விலை: ரூ 1—4—0

பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூல், சென்ற கால் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிகழ்ந்த அரசியல் விவகாரங்களை நமக்கு நன்றாக எடுத்துக்காட்டுகிறது. ஸ்ரீ வேங்கடாச்சாரியார், வார்சேல் சமாதான ஒப்பந்தத்திலிருந்து ஆரம்பித்துக் கொண்டு, ஒவ்வொரு நாடும் அடைந்த அரசியல் மாறுதல்களை வரிசைப்படுத்திக் கொண்டு கூறிச் செல்கிறார். ஒவ்வோர் அரசியல் வாதியின் கையிலும் இந்தப் புஸ்தகம் இருக்க வேண்டுவது அவசியம் என்று கூறுவோம். 'நம் நாட்டில் கவனிக்கப்பட வேண்டிய விவகாரங்கள் எத்தனையோ இருக்க, உலக விவகாரங்களைக் கவனிப்பது அநாவசியம்' என்ற மனப்பான்மை தமிழ் நாட்டிலிருந்து மறைந்து வருகிறதென்பது இந்த நூலிலிருந்து நன்கு தெரிகிறது. இந்த மாதிரியான நூல்கள் இன்னும் பல பல வெளிவர வேண்டுமென்பது நமது ஆசை. ஸ்ரீ வேங்கடாச்சாரியாருக்கு நமது பரிபூர்ணமான பாராட்டுதல்.

லெனின்

ஆசிரியர்; ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி எம்.ஏ; வெளியிட்டோர்; நவயுகப்பிரசுராலயம் லிமிடெட், ஜி. டி. மதராஸ்; டபிள் கிரவுன் அளவு 1x16; 157 பக்கங்கள்; விலை: எட்டு அணா.

லெனின் ஒரு மஹாபுருஷன். அவனுடைய எதிரிகள் கூட இதை ஆட்சேபிக்க முடியாது. இந்த மஹாபுருஷனுடைய சரித்திரம் ஒரு மகா காவியமாக வெளியாக வேண்டும். இப்பொழுது நமது பார்வைக்கு வந்திருக்கும் நூலில் லெனின், ஒருவாறாக நமக்குக் காட்சியளிக்கிறான். ஆனால், நூலின் இறுதியில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் மாக்ஸிம் கோர்க்கியின் மொழி பெயர்ப்பில், லெனினோடு நாம் நெருங்கிப் பழகுகிறோம். ஒரு ஜீவிய சரித்திரத்தில் இந்த மாதிரியான அம்சங்கள் நிறைந்திருக்க வேண்டும். ஆயினும் குறைந்த பக்கங்களில், லெனினை நமக்குச் சுருக்கமாக எடுத்துக் காட்டி

யிருக்கும் ஸ்ரீ நாராயணஸ்வாமியை உண்மையில் பாராட்டவே செய்கிறோம்.

புஸ்தகத்தின் 97-வது பக்கத்தில் பின்வரும் வாக்கியங்கள் காணப்படுகின்றன :—

> ஆனால் இரத்தக்கோபமும் துவேஷமும் முதலாளித்துவத்தால் உலகில் நடக்கும் சகிக்க முடியாத அநியாயங்களாலும் ஏழைகளின் கஷ்டங்களாலும் தோன்றினவையே தவிர, திருவாளர் ஈ.வே. ராமசாமி நாய்க்கரின் கோபத்தையும் துவேஷத்தையும் போல் உடம்புடன் ஒட்டிப் பிறந்தவையல்ல.

இந்த உவமையை நாம் கொஞ்சம் கூட ரசிக்க முடியவில்லை. லெனினுடைய சரித்திரத்தில் ஸ்ரீ ராமசாமி நாய்க்கரின் பெயர் வர வேண்டிய சந்தர்ப்பமே இல்லை. இந்த நூலில் தமது பெயர் புகுத்தப்பட்டிருப்பதைக்கண்டு ஸ்ரீ நாய்க்கர் பெருமை கொள்ளவோ, சிறுமையடையவோ மாட்டார்.

இன்னொரு விஷயம். 1917ம் வருஷம் ஏப்ரல் மாதம் லெனினும் அவனுடைய சகாக்களும் ஜெர்மனி வழியாக ஒரு ‘சீல்’ வைத்த வண்டியிலேயே அனுப்பப்பட்டார்கள் என்று சாதாரணமாக லெனினைப் பற்றி எழுதப்பட்டுள்ள எல்லாச் சரித்திரங்களிலும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அந்தப்பரம்பரையை அநுசரித்தே ஸ்ரீ நாராயணசாமியும்

> ஆனால் லெனினும் மற்ற அபேதவாதிகளும் ஜெர்மனி வழியாகச் செல்லும் போது அவர்கள் ‘ஸீல்’ வைக்கப்பட்ட வண்டியில் தான் போகலாம் என்று அவர் நிபந்தனை யிட்டார். அதன்படியே லெனினும் அவருடைய தோழர்களுமாய் ‘ஸீல்’ வைத்த ஒரு ரெயில் வண்டியில் அனுப்பப்பட்டனர். —பக். 39

என்று எழுதி யிருக்கிறார். வண்டி முழுவதையும் அடைத்து ‘ஸீல்’ போட்டு விட்டால், அதிலே உட்கார்ந்திருந்தவர்கள் அத்தனை பேரும் எப்படி மூச்சு விட்டிருப்பார்கள்? அவர்களுடைய ஆகாராதி விஷயங்கள் ஒருபுறமிருக்கட்டும். உண்மை யென்னவென்றால், லெனினும் அவருடைய சகாக்களும் அவர்களுடைய பிரயாண காலத்தில் வெளியார் யாரும் தங்களுடன் பேசக்கூடாதென்றும் எவ்விதமான போக்கு வரத்தும் வைத்துக் கொள்ளக்கூடாதென்றும் நிபந்தனை போட்டிருந்தார்கள். அதாவது ‘நீங்கள் ஒன்றும் பேசக் கூடாது’ என்று யாரையாவது நாம் பார்த்துச் சொல்கிற போது, அப்படிச் சொல்லாமல் ‘உங்கள் வாய் சீல் போடப்பட்டிருக்கிறது’ என்று சொல்கிறோமில்லையா? அப்படி யென்றால் வாய் சீல் போட்டு கட்டி வைக்கபபட்டிருக்கிறதென்று நாம் அர்த்தப்படுத்துகிறோமா? இல்லையே. இதனை, லியோன் ட்ராட்ஸ்கி தமது ‘ருஷ்யப் புரட்சி’ யென்ற நூலில் தெளிவுபடுத்திக் கூறுகிறான் :—

> பிரயாணத்தின் போது, பிரயாணிகளையோ, அவர்களுடைய பாஸ்போர்ட்டுகளையோ, அவர்களுடைய சாமான்களையோ யாரும் பரிசோதனை செய்யக் கூடாதென்று லெனின் கேட்டான். எந்த ஒரு நபரும் பிரயாணத்தின் போது ரெயில் வண்டியில் பிரவேசிக்கக்கூடாது என்றும் நிபந்தனை போட்டான். (இதனாலேயே ‘சீல் வண்டி’க்கதை ஆரம்பமாயிற்று.)
>
> —பக். 309

மங்கையர்க் கரசியின் காதல் முதலிய கதைகள்

(இரண்டாம் பதிப்பு)

ஆசிரியர்: காலஞ் சென்ற ஸ்ரீ வ. வே. ஸு. ஐயர்; வெளி யிட்டோர்:

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 198 பக்கங்கள்; விலை: பன்னிரண்டு அணா.

ஸ்ரீ வ. வே. ஸு. ஐயரின் இந்தக் கதைகள், தமிழ் நாட்டுக்குப் புதியவை யல்ல. ஸ்ரீ ஐயரின் ஜீவிய தசையிலேயே வெளியான இந்தக் கதைகளை, தமிழர்கள் படித்துப் படித்து, ஐயரின் பெருமையை அளந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தத் தலைமுறையிலே படித்திராதவர்கள், இப்பொழுது இந்த இரண்டாம் பதிப்பை ஆவலுடன் வாங்கிப் படிப்பார்கள் என்பது நிச்சயம். ஐயரவர்களுடைய கற்பனா சக்தியைப் பற்றியோ அவருடைய லாகவமான நடையைப் பற்றியோ நாம் இங்கே எழுத வேண்டுவதில்லை. அவருடைய 'குளத்தங்கரை அரசமரம்' ஒன்றே அவருடைய கற்பனைக்குச் சிகரமாய் விளங்குகிறது. வழக்கம் போல் ஸ்ரீ அல்லயன்ஸ் கம்பெனியாருடைய இந்த வெளியீடு மிக உயர்ந்த முறையில் அமைந்திருக்கிறது.

கன்யா குமாரி முதலிய கதைகள்

ஆசிரியர்: ஸ்ரீ கு. நா. குமாரஸ்வாமி பி. ஏ: வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 207 பக்கங்கள்; விலை பன்னிரண்டு அணா.

ஸ்ரீ கு. நா. குமாரஸ்வாமி, தமிழ் நாட்டுக்குப் புதிய எழுத்தாளர் அல்லர். வங்க நூல்களின் மொழிபெயர்ப்புகள் பலவற்றைத் தமிழில் செய்திருக்கிறார். இவருடைய நடை லாகவமானது; எந்த விஷயத்தையும் தட்டுத் தடங்கலின்றி எடுத்துச்சொல்லும் ஆற்றல் இவருக்கு இருக்கிறது. இந்த அம்சங்களை இந்த நூலில் நாம் நன்கு காண்கிறோம். இதிலுள்ள பதினேரு கதைகளும் மிகவும் சுவை பொருந்தியனவாய் இருக்கின்றன.

படுகளத்தில் பாரததேவி

ஆசிரியர்: ஸ்ரீ ஐ. மாயாண்டி பாரதி: வெளியிட்டோர்: லோகசக்தி பிரசுராலயம். சௌத்கூவம் ரோட், மௌண்ட் ரோட் சென்னை; டபிள் கிரவுன் அளவு 1x16; 84 பக்கங்கள்; விலை: நான்கு அணா.

உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டு பண்ணக்கூடிய ஒரு நூல் இது. உரத்துப்படித்தால் மிக நன்றாயிருக்கும்.

திருக்குறள் நாட்குறிப்பு

'தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தாரால் வெளியிடப்பட்டிருக்கிற இந்த 1940ம் வருஷத்துத் திருக்குறள் நாட்குறிப்பில் 731 முதல் 10[illegible]6 குறள் மணிகள் கருத்துரையுடன் அடங்கியுள்ளன. வழக்கம் போல் எல்லா விவரங்களும் இருக்கின்றன.

இராமகிருஷ்ண சங்கத்தின் இலட்சியங்களும் அது செய்துவரும் சேவைகளும்

—"ஆசிரம வாசி"

இந்த தர்மத்துக்குப் புத்துயிர் அளித்தவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவருடைய பிரிய சிஷ்யராய் விளங்கி, தம் குருவின் உபதேசங்களையும் நம் தர்மத்தின் உண்மையையும் உயர்வையும் எவரும் அறியும்படி பிரசாரஞ் செய்தவர் ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள். தமது குருநாதர் பெயரால் வழங்கும் சங்கத்தை ஸ்தாபித்த தனிப்பெரும் பெருமையும் இவருக்கே உரியது. ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய திருநாமமும், ஸ்ரீ விவேகாநந்தருடைய பேரும் புகழும் உலகெங்கும் வழங்கப்படுகின்றன. இது அனைவருக்கும் தெரிந்ததே.

"தியாகமும் சேவையுமே இந்தியாவின் தேசிய இலட்சியங்களாகும். இந்த இலட்சியங்களை நீங்கள் பேணி வளர்த்தால் மற்றவை தமக்குத் தாமே வரும்".

விவேகாநந்தர்

'இராமகிருஷ்ண சங்கமும், ஆச்ரமங்களும்' என்னும் விஷயம்பற்றி தமது 'ஆரியா வர்த்தத்தின் இருதயம்' (Heart of Aryavarta) என்னும் நூலில் ரோனல்ட்ஷே பிரபு பின்வருமாறு கூறுகிறார் :—

"சன்னியாசிகளையும், பிரம்மச்சாரிகளையும் அங்கத்தினராகக் கொண்ட ராமகிருஷ்ண ஆச்ரமங்கள் பல. அவற்றோடு தொடர்புபட்ட ஒரு சங்கமும், உண்டு. இவ்விரண்டு ஸ்தாபனங்களும் தேசிய இலட்சியங்களாகிய தியாகத்தையும் சேவையையும் குறிக்கின்றன. சங்கமானது சமூகம், கல்வி, தர்மம் என்னுந் துறைகளில் பலவகையான பணி செய்து வருகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரைப் பின்பற்றி உயர் வாழ்வை விரும்பும் ஸாதுக்களுக்கும், பக்தர்களுக்கும் ஆச்ரமங்கள் நிறுவப்பட்டன."

இந்து தர்மத்தின் உயர்ந்த கொள்கைகளையும், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உபதேசங்களையும் உலகமெங்கும் பரப்புவதற்கு இவ்விரு ஸ்தாபனங்களும் நிறுவப்பட்டன. வெளிநாடுகளில் வேதாந்த

சமய போதனை செய்ய வேண்டிய அவசியத்தையும் அதனால் இந்தியாவுக்கு வரும் நன்மையையும் சுவாமி விவேகானந்தர் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

"நமது இந்து தர்மத்தின் மகத்தான உண்மைகளை உலகத்துக்கெல்லாம் எடுத்துரையுங்கள். உலகம் அவற்றிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. வேதாந்தப் பிரசாரம் செய்ய நீங்கள் வெளியே செல்ல வேண்டும். உலகிலுள்ள ஒவ்வொரு தேசத்தாருக்கும், ஒவ்வொரு சாதியாருக்கும் உங்கள் மதத்தின் உண்மைகளை எடுத்துரைக்க வேண்டும். இதுவே முதலில் செய்ய வேண்டிய வேலை. இந்தியாவின் ஆத்ம வித்தையினால் உலகை வெற்றி கொள்ள வேண்டும். நமது தேசிய வாழ்வு அவற்றையே பொறுத்திருக்கிறது. அப்போது தான் தேசியவாழ்வு புத்துயிரும் புதிய பலமும் பெற்றுச் சிறந்து விளங்கும்.'

சங்கத்தின் அங்கத்தினர் தத்தம் ஆத்ம லாபத்துக்கும் உலக நன்மைக்கும் பாடுபட முயல வேண்டுமென்பது சுவாமிகளின் அபிப்பிராயம். இக்காரணம் பற்றியே, பண்டைக் காலத்து சாதுக்களின சாதனைகளோடு சமூக சேவையையும் தற்காலத்துக் கேற்ற ஒரு புதுச் சாதனையாக அவர் கைக்கொண்டார். சாதி மத பேதமின்றி எல்லா மனிதருக்கும் ஆண்டவனின் அம்சம் எனக் கருதி அவர்களுடைய தேவைக்குத் தக்கவாறு ஆத்மஞானம், அறிவு வளர்ச்சி, உடல் நலம் என்னும் துறைகளில் சேவை செய்ய வேண்டுமென்பதே சுவாமிகளின் கொள்கையாகும்.

தியாக சிந்தையின்றி எவனும் பிறருடைய சேவையில் தன் இதயம் முழுவதையும் ஈடுபடுத்த முடியாது. நாம் இறப்பது நிச்சயம்; ஆதலால் சிறிய நோக்கத்துக்காக உயிரைத் தியாகஞ் செய்வோம். எங்கள் செயலெல்லாம் எங்களுடைய சுயநலத் தியாகத்துக்கு வழி காட்டியாயிருப்பதாக. உணவினால் போஷிக்கப் பட்ட இப்பூத உடம்பை மக்களின் நன்மைக்காகத் தியாகஞ் செய்வோம். கல்விப் பயிற்சியினால் ஈட்டிய அறிவை அஞ்ஞானத்தில் மூழ்கிக் கிடப்பவர்களுக்கு அர்ப்பணஞ் செய்வோம். விவேகம், வைராக்கியம் என்பனவற்றால் மனதைப் பண்படுத்தி அதன் பயனாக அடைந்த ஆத்ம ஞானத்தை உயர் வாழ்வை விரும்பும் மனிதர்களுக்கு உபயோகித்தல வேண்டும்.

இராமகிருஷ்ண சங்கம் ஒரு சமய ஸ்தாபனம். அது செய்து வரும் பணிகள் அதனுடைய சாதனையாகும். சர்வ மதங்களுக்கும் சம்மதமான கொள்கைகளை அது போதிக்கின்றது. வேதங்களிலுள்ள அடிப்படையான உண்மைகளைப் பரப்புவதற்கு இந்தியாவிலும் மேனாட்டிலும் பல ஆச்சிரமங்கள் முயன்று வருகின்றன. சமரச சன்மார்க்க போதனையால் பல்வேறு மதத்தினர்களுக்கும் இடையே சகோதரத்துவத்தை ஏற்படுத்துவது இச்சங்கத்தின் ஒரு நோக்கமாகும். அதன் கல்விச் சாலைகள் பண்டைக் காலத்து குருகுலங்களைப் போன்றவை. அவற்றில் மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரத்துடன் வேதாந்தமும் கற்பிக்கப்படும். இங்கு அளிக்கப்

படும் கல்வி பிரம்மச்சரியம், சிரத்தை, தன்னம்பிக்கை என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தர்ம வைத்தியசாலைகளில் சாதுக்களே வைத்தியர்களாகவும், சேவை பண்ணுகிறவர்களாகவும் பணி புரிந்து வருகின்றனர். ஏழைகளின் கஷ்டங்களை நீக்கும் பொருட்டு பல தர்ம ஸ்தாபனங்கள் உழைத்து வருகின்றன. பஞ்சம், வெள்ளம், நெருப்பு, புயல், தொற்று நோய் முதலியவற்றால் துன்பப்படும் மக்களுக்கு இச்சங்கம் தற்காலிக உதவி புரிந்து வருகின்றது.

சேவா மார்க்கம் ஆண்டவனை அடைவதற்கு ஒரு நிச்சயமான வழியாகும். எல்லாவற்றிலும் இறைவனைக் கண்ட தீர்க்க தரிசனத்தினாலேதான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்ஸரும் அவருடைய பிரிய சிஷ்யரும் சிவத்தொண்டுக்குப் பதிலாக ஜீவ சேவையை வற்புறுத்தினர். 'நான் அவனை (ஆண்டவனை) எல்லாரிடத்தும் காண்கிறேன்; எல்லாமாகவுங் காண்கிறேன். மனிதரும் மற்றும் பிராணிகளும் தோலினால் போர்த்த உருவங்களாகவும், அவ்வுருவங்களுள்ளே ஆண்டவன் இருப்பதாயும் எனக்குப் புலப்படுகிறது. ஒரே பொருளே உலகிலுள்ள பல தோற்றங்களின் உருவைத் தாங்கி நிற்கிறது. எல்லாம் ஒரு பொருளிலிருந்து தோன்றுகின்றன வென்பதை நான் அநுபவ வாயிலாக அறிகிறேன்' என்பது குருநாதர் திருமொழி. இக்கொள்கையின் படி கல், மண் முதலியனவற்றால் கட்டப்பட்ட கோயிலில் மட்டுமன்றி, சதை, இரத்தம் என்பனவற்றால் ஆக்கப்பெற்ற சரீரமாகிய ஆலயத்திலும் வழிபடலாமென்பது பெறப்பட்டது.

இதைக் குறித்தே சுவாமிகளும் 'ஆண்டவனைத் தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்பட்டவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்களெல்லாரும் அத்தனை தெய்வ வடிவங்களே யல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக் கூடாது? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றிச் சிந்தியுங்கள்; அவர்களுக்கு ஊழியம் புரியுங்கள்; அவர்களுக்காக இடைவிடாது பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழி காட்டுவார்' என்று கூறியிருக்கிறார்.

இராம கிருஷ்ண சங்கத்தைத் தொடங்கிய காலத்து சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு ஒரு செய்தியை விடுத்தார். அதில் அங்கத்தினர் செய்ய வேண்டிய கடமையைத் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

'இளைஞர்களே! ஏழைகள், அறிவிலிகள், அடிமைகள் ஆகிய இவர்களிடம் பச்சாத்தாபப் படுதலும், அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் போராடுதலும் உங்கள் கடமை என்பதே நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய கடைசி வார்த்தைகள். உடனே நீங்கள் பார்த்தசாரதி கோயிலுக்குச் சென்று, ஏழ்மையும் பணிவுமுள்ள கோகுலர்களின் நண்பனும், நீசனை குகனை ஆலிங்கனஞ் செய்து கொள்ளப் பின் வாங்காதவனும், தன்னை எதிர் கொண்ட பிரபுக்களிடம் போகாமல் ஓர் வேசையின் உபசாரங்களை ஏற்றுக் கொண்டு, பிறகு அவளுக்குப் புத்தாவதாரத்தில் நற்கதியளித்தவனுமான கண்

ணபிரானின் திருமூர்த்தியைத் தலை வணங்கி நமஸ்கரித்து உங்களிடமிருப்பவற்றை அர்ப்பணம் செய்யுங்கள். யாருக்காகப் பகவான் அவதரிக்கின்றாரோ, எந்த தீனர்களுக்கும், தாழ்ந்தோருக்கும், அடிமைகளுக்கும் அன்பு பூண்டு நிற்கின்றாரோ அவர்கள் பொருட்டு நீங்கள் உங்கள் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்யுங்கள். நாளுக்கு நாள் கீழான நிலைமையை அடையும் இம் மூன்று கோடி ஜனங்களை உய்விப்பதற்காக உங்கள் ஆயுள் முழுவதும் உழைப்பதாக கடவுளின் திருமுன்னிலையில் சத்தியம் செய்யுங்கள்.'

உயர்ந்த நோக்கங்களைக் கிரியாம்சத்தில் எவ்வாறு இச்சங்கம் பயன்படுத்தி வருகிறதென்பதைச் சற்று ஆராய்வோம். முதலாவதாக சமரச சன்மார்க்க போதனையை எடுத்துக் கொள்வோம். 1893ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ந் தேதி சிகாகோ நகரத்திலே உலகிற்குப் பொதுவாகக் கூடிய சமய ஆராய்ச்சிக் கழகத்தில் சுவாமி விவேகானந்தரே இத் தொண்டை ஆரம்பித்து வைத்தார். அத்தருணம் அவர் அறை கூவி மொழிந்த வார்த்தைகளில்

"எண்ணு மிரு நிலத்தெழுந்த பல நதியு
மிறுதியில் வந்தெறி நீர் வேலை
நண்ணுகின்றவியல்பது போற் பலவேறு
தகைமையராய் ஞானநாடும்
மண்ணகத்தோர் செல்லுநெறி செம்மைய [தாய்க்
கோடணையாய் மருவுமேனும்
புண்ணியனே நினையடையு மார்க்கமவை
யனைத்துமெனப் புகல்வன் யானே."

"மெய்வகையதிது வென்ன
வேண்டியவர் வேண்டியன
அவ்வகைய தெய்வமுமாய்
அளிப்பேனும் யானேகாண்"

'ஏதாயினும் ஒரு மார்க்கத்தைப் பின்பற்றி என்னை எவன் நாடுகின்றானோ நான் அவனை அடைகின்றேன்' என்னும் வேதவாக்கியங்கள் இன்றும் உலகெங்கும் தொனிக்கின்றன. சுவாமிகளின் வழித்தோன்றல்களும் அவரைப் பின்பற்றி உலகில் பல பாகங்களிலும் அரிய சேவை செய்து வருகின்றார்கள். அவர்கள் முயற்சியின் பலனாக அமெரிக்கா, ஆபிரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, சுவிட்ஜர்லாந்து என்னும் அயல் நாடுகளில் பல ஆச்ரமங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலும் இந்தியர் குடியேறியுள்ள நாடுகளாகிய பர்மா, சிங்கப்பூர், இலங்கை, பீஜி, மொறிசியஸ் என்னும் இடங்களிலும் பல சாதுக்கள் வேதாந்தப் பிரசாரம் செய்து வருகிறார்கள்.

இராமகிருஷ்ண சங்கம் இலக்கியத்தைப் பரப்புவதற்கும், பொதுஜனங்களுக்கு தேசிய சமுதாயத் துறைகளில் முன்னேற்றத்துக்கு வேண்டிய வழிவகைகளைப் போதிப்பதற்கும், வெளி நாட்டாருக்கு இந்தியாவின் சாஸ்திரங்கள், கலைகள் என்பனவற்றை விளம்பரப்படுத்தவும் சங்கப் பிரசுரங்களாகிய பிரபுத்த பாரதம், வேதாந்த கேசரி, கீழ்த்திசைச் செயதி, வேதாந்த தர்ப்பணம், என்னும் ஆங்கிலப் பத்திரிகைகளும், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், பிரபுத்தகிராளம், உத்போதன் என்னும் தேசிய பாஷைப்பத்திரிகைகளும் சிறந்த கருவிகளாக விளங்குகின்றன. புத்தக

சாலைகள், வாசகசாலைகள் பொது வாக எல்லா ஆச்ரமங்களிலும் உண்டு. இவை மக்களின் அறிவு வளர்ச்சிக்கு மிகவும் பிரயோசனப்படுகின்றன.

சங்கத்தின் கல்விச் சாலைகள் உயர்ந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை. "கல்வி யென்பது மனிதனுக்குள்ளிருக்கும் பூரணத் தன்மையின் வெளித்தோற்றம். குரு செய்ய வேண்டிய ஒரே காரியம் என்ன வென்றால் வழியிலிருக்கும் தடங்கல்களை யெல்லாம் நீக்குவதே. மனிதத் தன்மை அளிப்பதே கல்விப் பயிற்சியின் இலட்சியமா யிருத்தல் வேண்டும். பண்டைக் காலத்துக் குரு குலங்கள் போன்ற கல்விச் சாலைகள் தேவை. அவற்றில் மேனாட்டு விஞ்ஞான சாஸ்திரத்துடன் வேதாந்தமும் கற்பிக்கப் படவேண்டும். கற்கும் விஷயங்கள் நன்கு ஜீரணிக்கப் பட வேண்டும். அவை உயிர் ஊட்டுவன வாய், மனிதத்தன்மை தருவனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்க வேண்டும். சுடர் விட்டெரியும் தீயை யொத்த தூய ஒழுக்க முடைய ஆசிரியனோடு ஒருவன் தன் குழந்தைப் பிராயத்திலிருந்து வசித்தல் வேண்டும். உயரிய கல்விப் பயிற்சிக்கு உயிருள்ள ஓர் உதாரணமாக அவ்வாசிரியன் இருத்தல் வேண்டும்." சுவாமி விவேகாநந்தருடைய தற்காலத்துக் கேற்ற கல்வி முறையின் சாரம் இதுவேயாம். உலக மெங்கும் ஒரு புதிய உணர்ச்சியை உண்டாக்கி யிருக்கும் மஹாத்மா காந்தியின் வார்தா கல்வித்திட்டம் சுவாமிகளின் கல்வி இலட்சியங்களை ஒருவாறு ஆதாரமாகக் கொண்டிருக்கிற தெனலாம்.

வங்காளம், மதராஸ், இலங்கை, மலையாளம் என்னும் இடங்களில் பல கல்விச்சாலைகள் உண்டு. இவற்றில் சாதி சமய வேறுபாடின்றி எல்லா மாணவர்களுக்கும் கல்விப் பயிற்சி அளிக்கப் படுகிறது. கலாசாலை ஆசிரியர்கள் மேல்நாட்டு சாஸ்திரங்கள், கைத் தொழில், கமத் தொழில், கீழ்நாட்டு சாஸ்திரங்கள் என்னும் பாடங்களில் பாண்டித்தியம் பெற்றவர்கள். சில உயர்தரப் பாடசாலைகளில் மாணவர் இல்லமும் ஒரு முக்கிய அம்சமாகக் காணலாம். ஏழை மாணவருக்கே இந்த அநாதை இல்லங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. மதராஸ், கல்கத்தா, திருச்சூர், கோயம்புத்தூர் என்னும் இடங்களிலுள்ள மாணவ ரில்லங்களும், மாம்பலம் உயர்தரக் கலாசாலை, சாரதா வித்தியாலயம், நிவேதிதா பாடசாலை என்னும் ஸ்தாபனங்களும் குறிப்பிடத் தக்கன.

பர்மா தேசத்திலும் சங்கத்தின் இரண்டு பெரியஸ்தாபனங்கள் உண்டு. அவை சேவாச்ரம தர்ம வைத்திய சாலையும், ரங்கூன் ராமகிருஷ்ண மிஷன் சபை நடத்திவரும் புத்தக சாலையும் வாசக சாலையுமேயாம். சேவாச்ரமம் சென்ற இருபதாண்டுகளாக இந்நாட்டு மக்களுக்கு வைத்திய உதவி செய்து வருகின்றது. தொடக்கத்தில் பிணியாளர் விடுதியில் 22 நோயாளிகளுக்கு இடவசதி யிருந்தது. இதைவிட நூற்றுக் கணக்கானவர் வெளியிலிருந்து வந்து சிகிச்சை பெற்றனர். பல பரோபகாரிகளின் பொருளுதவியைக் கொண்டு வைத்தியசாலை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரு

கின்றது. தற்சமயம் நோயாளிகள் விடுதிகளில் 170 பேருக்கு இடவசதியும், வெளியிலிருந்து வரும் ஆயிரக் கணக்கான நோயாளிகளுக்கு சிகிச்சை மட்டும் கொடுப்பதற்கு வேண்டிய சௌகரியங்களும் உண்டு. இதன் அபரிமித வளர்ச்சியே சேவாச்ரமம் செய்து வரும் அரிய சேவையை விளக்குகின்றது.

இராமகிருஷ்ண பரமஹம்ஸ தேவரது நூற்றாண்டு ஜெனன விழா 1936ம் ஆண்டு உலகமெங்கும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்தப் பெரியார் மஹா சமாதி யடைந்து ஐம்பது ஆண்டுகளுக்குள் அவருடைய அமிர்த மொழிகள் உலகின் பல பாகங்களிலும் பரவியிருப்பது ஆச்சரியமாகும். ஐரோப்பா, அமெரிக்கா போன்ற பெரிய நாடுகள் தொடங்கி பீஜித் தீவு, மொறிசியஸ் தீவு போன்ற சிறு நாடுகள் வரை அவர் போதனைகள் சென்றிருக்கின்றன. வேதாந்தப் பிரசாரத்தின் மூலம் உலக சகோதரத்துவத்தை நிலை நாட்ட இச்சங்கம் செய்த முயற்சி ஒருவாறு சித்தியடைந்திருக்கிறது. நூற்றாண்டு விழாக் காலத்தில் கல்கத்தாவில் கூடிய சர்வமத மகா சபையில் பிரசன்னமாயிருந்த உலக சமயங்களின் பிரதிநிதிகள் இதற்கு ஓர் சான்றாகும். பேலூர் தலை மடத்தில் நிறுவியிருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண தேவாலயம் ஓர் அமெரிக்கப் பெண் மணியின் அன்புக் கொடை யென்றால் இச்சங்கத்தின் அரிய சேவை புலப்படும்.

இவ்வளவு சொற்ப காலத்தில் சங்கம் இப்பெரும் பயன் அடைந்தால் வருங்காலத்தில் அதி ஆச்சரியமான சம்பவங்கள் நிகழும் என்பதில் சந்தேகமில்லை. அதன் பயனாக இந்தியா புத்துயிரும் புதிய பலமும் பெற்று மறு மலர்ச்சி யடையும். இதைக் குறித்தே சுவாமி விவேகாநந்தரும் 'வருங் காலத்தில் அதி ஆச்சரியமான, மகிமை வாய்ந்த இந்தியா தோன்றப் போகிறது. இதற்கு முன் எப்போதும் இருந்ததைவிட அது பெருமை பொருந்தி விளங்கும். பண்டைக்கால ரிஷிகளையும் விடப் பெரிய மகான்கள் தோன்றுவார்கள். உங்கள் மூதாதைகள், ஆவி உலகங்களில் தத்தம் இடங்களிலிருந்து, தங்கள் சந்ததிகள் இவ்வளவு மகோன்னதம் பொருந்தி விளங்குவதைக் கண்டு மகிழ்ச்சியும், பெருமையும் அடைவார்களென்பதில் சந்தேகமில்லை' எனக் கூறியருளினார்.



1939

அக்டோபர்

31 பீஹார் காங்கிரஸ் மந்திரிச் சபை ராஜீநாமா செய்து விட்டது.

மேற்கு யுத்தப் போர் முனையில் ஜெர்மானிய ஆகாய விமானங்களும், நேசக் கட்சி ஆகாய விமானங்களும் சந்தித்துச் சண்டையிட்டன,

கேயர்ன்மோனு என்ற ஒரு பிரிட்டிஷ் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

சோவியத் பார்லிமெண்ட் இன்று கூடியது. அந்நிய நாட்டு மந்திரியான மோலோடோவ், ருஷியாவுக்கு எவ்வித ஏகாதிபத்திய நோக்கமும் இல்லையாதென்று கூறினார்.

நவம்பர்

1 ப்ராண்டே என்ற பிரிட்டிஷ் கப்பல் அத்லாந்திக் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்டது.

பின்லாந்தின் சுதந்திரத்தைப் பாதிக்கக் கூடிய மாதிரியாக யாருடனும் எந்தவிதமான ஒப்பந்தமும் செய்து கொள்ள முடியாதென்று பின்லாந்தின் பிரதம மந்திரி கூறினார்.

துருக்கி பார்லிமெண்டை. குடியரசின் தலைவரான பிரசிடெண்டு இனோனு திறந்து வைத்துப் பேசுகையில் ஆங்கிலோ-துருக்கிய ஒப்பந்தம் எந்தக் கட்சியினருக்கும் விரோதமாக ஏற்பட்டதல்லவென்று கூறினார்.

2 பிரிட்டன் மீது ஜெர்மனி ஏராளமான ஆகாய விமானக் குண்டுகளைப் போட்டு அதிக சேதத்தை உண்டு பண்ணலாமென்று ஹெர்பர்ட் மாரிஸன் என்பவர் காமன்ஸ் சபையில் கூறினார்.

பிரெஞ்சு கடற்படை மந்திரியுடன் கலந்து பேச இன்று ஸ்ரீ சர்ச்சில் பாரிஸ் வந்து சேர்ந்தார்.

மத்திய சீனாவில் சீன-ஜப்பானிய யுத்தம் மும்முரமாக நடைபெறுவதாகச் சொல்லப்படுகிறது.

3 போலந்தை, ருஷ்யாவும் ஜெர்மனியும் பங்கு போட்டுக் கொண்டனவல்லவா? இரண்டு பாகங்களிலுமுள்ள அந்தந்த நாட்டு மக்களை பரஸ்பரம் மாற்றிக் கொள்வதென்று இரண்டு நாட்டினரும் தீர்மானித்திருக்கின்றனர்.

4 எண்பதினாயிரம் சோவியத் துருப்புகள் பின்லாந்தின் எல்லைப் புறத்தில் தங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

5 பிரான்ஸின் வட பாகத்தின் மீது ஆகாய விமானங்கள் சில வெடி குண்டுகளைப் போட்டனவென்று சொல்லப்படுகிறது.

காங்கிரஸுக்கும் முஸ்லீம் லீக்குக்கும் ஏற்பட்ட சமரசப் பேச்சுகள் முறிந்து போய் விட்டதைக் குறித்துத் தாம் பெரிதும் வருந்துவதாக இந்திய ராஜப் பிரதிநிதி ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

முஸோலினி, இன்று தமது ராணுவ தளகர்த்தர்களுடன் கலந்து பேசினார்.

6 பால்டிக் சமுத்திரப் பிரதேசம் முழுவதிலும் எவ்வித கப்பல் போக்கு வரத்தும் நடைபெற வொட்டாதபடி ஜெர்மானியர்கள் கடற் சுரங்கங்களை வைத்திருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

பெல்ஜியத்தின் மீது ஜெர்மானிய ஆகாய விமானங்கள் பறந்து சென்றனவாம். இதை, பெர்லினிலுள்ள பெல்ஜிய ஸ்தானீகர் ஆட்சேபித்திருக்கிறார்.

7 யுத்தத்திலே சம்பந்தப் பட்டிருக்கிற எல்லா நாடுகளும் ஒருவித சமரஸத்திற்கு வர வேண்டுமென்று பெல்ஜியம் மன்னரும், நெதர் லாண்டஸ் அரசியும் ஓர் அறிக்கை விடுத்திருக்கின்றனர்.

உலகத்தில் சமாதானம் நிலவ வேண்டுமென்ற எண்ணம் ருஷ்யாவுக்கு இல்லையென்று ரோமாபுரி பத்திரிகையொன்று கூறுகிறது.

இந்தியாவின் கடைசி லட்சியம் குடியேற்ற நாட்டந்தஸ்து என்பதை லார்ட் ஜெட்லண்ட் லார்ட்ஸ் சபையில் கூறினார்.

8 ஹாலந்து தற்காப்பு நிமித்தம் யுத்த முஸ்திப்புகளைச் செய்து கொண்டு வருவதாகத் தெரிகிறது.

ஹிட்லர், தமது ராணுவ தளபதிகளிடம் இன்று கலந்து பேசினார்.

ராஜப் பிரதிநிதியின் அறிக்கைக்குப் பதிலாக பண்டித ஜவஹர்லால் நேரு ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

9 ஹிட்லர், பெர்லின் நகரத்தில் ஓரிடத்தில் பிரசங்கம் புரிந்து விட்டுச் சென்ற பிறகு அங்கு பெரிய வெடி குண்டு விபத்தொன்று ஏற்பட்டது.

10 ஹிட்லர், எங்கேயோ ஓரிடத்திற்குப் போய் விட்டதாக பாரிஸ் ரேடியோ செய்தியொன்று கூறுகிறது.

ஜெர்மனிக்கும் டென்மார்க்குக்கும் இடையிலுள்ள எல்லைப்புறத்தில் இரண்டு நாட்டுத் துருப்புகளுக்கும் கை கலந்த சண்டை நடைபெற்றது.

போலந்து அரசாங்கத்தை இன்னும்தான் அங்கீகரித்துக் கொண்டிருப்பதாக ஜப்பானிய அரசாங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறது.

பீரார் மாகாண நிருவாகத்தைத்தான் ஏற்றுக் கொள்வதாக மேற்படி மாகாண கவர்னர் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எகிப்து மன்னரான பரூக் மீது யாரோ ஒருவனால் ஒரு புட்டி எறியப்பட்டது. ஆனால் அரசருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை.

11 ஹிட்லர், தமது ராணுவ தளபதிகளுடன் நீண்ட நேரம் கலந்து பேசினார்.

12 இன்று கல்கத்தாவில் ஆகாய விமானத்திலிருந்து குண்டு எறியப்படப் போவதாக அதிகாரிகள் எச்சரிக்கை செய்தார்கள்.

13 ஸ்காத்லாந்துக்கு வடபுறத்திலுள்ள ஷெட்லாந்தில் ஜெர்மன் ஆகாய விமானங்கள் குண்டுகளை வீசி யெறிந்தன.

சிங்கப்பூருக்கு அருகாமையில் சர்தானா என்ற கப்பல், கடற் சுரங்க மொன்றைத் தட்டி மூழ்கி விட்டது.

14 ஒரு பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பலும் மத்ரா என்ற ஒரு கப்பலும் இன்று மூழ்கி விட்டன.

போலந்தின் பிரதம மந்திரியாயிருந்த தளபதி சிகோர்ஸ்கி இன்று லண்டனுக்கு வந்து பிரிட்டிஷ் மந்திரிகளுடன் கலந்து பேசினார்.

ரைன் நதியில் வெள்ளப் பெருக்கெடுத்தோடுகிறது.

15 பிரிட்டிஷ் பார்லிமெண்டரி தொழிற் கட்சித் தலைவராக மேஜர் அட்லி தெரிந்தெடுக்கப்பட்டார்.

அஸ்ஸாம் மாகாண காங்கிரஸ் மந்திரிச் சபை இன்று ராஜீநாமா செய்து விட்டது.

யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து நவம்பர் மாதம் நான்காந் தேதி வரை 54 பிரிட்டிஷ் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

சீன அரசாங்கத்தோடு கடல் தொடர்பு கொண்ட பக்கோயி என்ற துறைமுகப் பட்டணத்தை ஜப்பானியர் கைவசப் படுத்திக் கொண்டனர்.

முஸோலினி, ரோமாபுரியில் பேசிய போது, இத்தலி சமாதானமாயிருப்பது பலஹீனத்தினாலல்ல வென்றும், ஆயுத பலத்தினாலேயே சமாதானமாயிருக்கிற தென்றுங் கூறினார்.

16 பிரான்சின் வட பாகத்திலும், வட கிழக்குப் பாகத்திலும் ஜெர்மானிய ஆகாய விமானங்கள் வட்டமிட்டதாகச் சொல்லப்படுகின்றன.

பெல்ஜியம், நெதர் லாண்ட்ஸ் இவற்றின் நடு நிலைமையைப் பாதிக்கக்கூடிய விதமாக ஜெர்மனி நடந்து கொள்ளுமென்று ஹேஷ்யம் இருப்பதாக ஸர் ஜான்ஸைமன் பார்லிமெண்டில் கூறினார்.

17 ஜெர்மனியில் மாஜி சேனாதிபதியாயிருந்த வான் ப்ளாம்பெர்க் சுட்டுக் கொல்லப் பட்டாரென்று ஒரு வதந்தி எழுப்பிவிடப் பட்டிருக்கிறது.

ஜெர்மனியில் பிரபல நிலக்கரிச் சுரங்க முதலாளியாகிய தைஸன் என்பவர் எங்கேயோ ஓடிப் போய் விட்டாரென்று ஒரு வதந்தி கூறுகிறது.

18 பிரேக் முதலிய நகரங்களில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஸைமன் பொலிவார் என்ற டச்சுக்கப்பல் மூழ்கடிக்கப்பட்டது.

19 காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் அலஹாபாத்தில் டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் தலைமையில் கூடியது.

ஹிந்து மகா சபையின் காரியக் கமிட்டி கூட்டம் பம்பாயில் வி. டி. சவர்க்காரின் தலைமையில் கூடியது.

20 ஸ்விட்ஜர்லாந்து எல்லைக்குள் ஜெர்மன் ஆகாய விமானங்கள் அடிக்கடி பறந்து செல்வதை ஆட்சேபித்து ஸ்விட்ஜர் லாந்து அதிகாரிகள் ஜெர்மனிக்கு ஓர் அறிக்கை அனுப்பியிருக்கிறார்கள்.

இன்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் மூன்று மணி நேரம் கூடியது. மஹாத்மா காந்திக்குச் சர்வாதிகாரமும் கொடுக்கப்படலா மென்று சொல்லப் படுகிறது.

பொஹிமியாவிலும் மொரேவியாவிலும் ஜெர்மனிக்கு விரோதமான உணர்ச்சி பரவியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

21 காங்கிரஸ் காரியக் கமிட்டி இன்று மீண்டும் கூடியது. மஹாத்மா காந்தி நீண்ட நேரம் பேசினார். உண்மையான சத்தியாக்கிரகிகள் என்ற முறையில் நாம், நமது எதிரிகளுக்கும், சமரஸத்திற்கு வர சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்று, நாமும் சமரஸமாகப் போகக் கூடிய எந்தச் சந்தர்ப்பத்தையும் உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறினார்.

ஜெர்மனியில் உற்பத்தி செய்யப் படும் எல்லாச் சாமான்களும் இனிப் பறிமுதல் செய்யப்படு மென்று பிரிட்டிஷ் பிரதம மந்திரி, பார்லி மெண்டில் கூறினார்.

22 காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் இன்று கூடியது. மத்திய மாகாண சட்ட சபையிலுள்ள மூன்று காங்கிரஸ் அங்கத்தினர்கள், மூன்று வருஷ காலம் எந்த காங்கிரஸ் ஸ்தாபனங்களிலும் உத்தியோகம் வகிக்கக்கூடா தென்று தடுக்கப்பட்டிருப்பதாக ஒரு தீர்மானத்தைப் பிரேரித்து நீண்ட நேரம் பேசினார்.

23 காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டம் இன்று கூடி நீண்ட தொரு தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கத்தாருடன் சமரஸ மாகப் போக இன்னும் மார்க்கம் இருக்கிற தென்று இந்தத் தீர்மானம் கூறுகிறது.

பார்லி மெண்டைத் தள்ளி வைக்கும் சுதந்திரத்தைக் கொண்டு அரசர் பெரு

மான் நீண்ட தொரு சொற் பொழிவு நிகழ்த்தினார்.

ஜெர்மன் அதிகாரிகள் கையாளும் அடக்கு முறை காரண மாக ஜெக் நாட்டில் 1700 பேர் இறந்து விட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

ருமேனியாவில் மந்திரிச் சபை கலைந்து விட்டது.

ஸ்காத்லாந்துக்கு வடபுறத்தில் ஆறு ஜெர் மன் ஆகாய விமானங்கள் வெடி குண்டு களை வீசி யெறிந்தன.

அஸ்ஸாம் மாகாணத்து மாஜி கவர்னரும் அவர் மனைவியும், லண்டனிலுள்ள தங்கள் இல்லத்தில் சுட்டுக் கொல்லப் பட்டுக் கிடந்தார்கள்,

24 துருக்கியில் பூகம்ப அதிர்ச்சி ஏற்பட் டது. 43 பேர் மரணம்.

பர்மாவின் அரசியல் லட்சியம் குடியேற்ற நாட்டந்தஸ்து என்று பர்மா கவர்னர் இன்று மந்திரிகள் முன்னிலையில் ஓர் அறிக்கை சமர்ப்பித்தார்.

அடுத்த மாரி காலத்திற்குள் ஐரோப்பிய யுத்தம் முடிவு பெறலா மென்று அமெ ரிக்க பிரஸிடெண்டு ரூஸ்வெல்ட் கூறினார். இதற்குக் காரணம் கூறவில்லை.

ருமேனியாவில் டட்டாரெஸ்கியுவின் தலை மையில் புதிய மந்திரிச் சபை அமைந்து விட்டது.

25 ஸ்காத்லாந்தின் வட பாகத்தில் இன்று மீண்டும் ஜெர்மன் ஆகாய விமானங்கள் வட்டமிட்டன.

26 ராவல்பிண்டி என்ற 17,000 டன் பிரிட் டிஷ் கப்பல் மூழ்கி விட்டது.

ஜெக்க நாட்டில் நானூறு கத்தோலிக்கப் பாதிரிமார்கள் கைது செய்யப்பட்டி ருப்பதாகச் சொல்லப்படுகிறது.

27 பிரிட்டிஷ் ஆகாய விமானப் படைக்கு நைஜாம் மன்னர் ஒரு லட்சம் பவுன் நன் கொடை யளித்திருக்கிறார்,

ஜெர்மன் சாமான்களைப் பறிமுதல் செய் யும் உத்திரவில் அரசர் பெருமான் இன்று கையெழுத்திட்டார்.

ஜெர்மனியும் பெல்ஜியமும், ஜெர்மனியும் டென்மார்க்கும் சந்திக்கிற எல்லைப்புறத் தில் ஜெர்மானியப் படைகள் அணிவகுக் கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

28 ருஷ்யாவுக்கும் பின்லாந்துக்கும் நெருக் கடி ஏற்பட்டிருக்கிறது. இரண்டு நாட் டுத் துருப்புகளும் சில இடங்களில் சச்சரவிட்டுக் கொண்டன.

பிரிட்டிஷ் பார்லிமெண்டின் இரகசியக் கூட்டங்கள் கூடலா மென்று தெரிகிறது.

29 பின்லாந்து-சோவியத் அநாக்கிரமிப்பு ஒப் பந்தத்தை பின்லாந்து ரத்து செய்திருக்கி றது. இப்படியே ருஷ்யாவும் ரத்து செய்திருக்கிறது.

30 பிரிட்டிஷ் பார்லிமெண்டின் முக்கிய அங் கத்தினர்களில் ஒருவரான ஸர் ஸ்டா போர்ட் க்ரிப்ஸ், இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

ருஷ்யாவுக்கும் பின்லாந்துக்கும் யுத்தம். ருஷ்யத் துருப்புகள் பின்லாந்து எல்லை யைக் கடந்து விட்டன.

எஸ். எஸ் பெகு என்ற கப்பல், பிரிட் டிஷ் கடலோரத்தில் மூழ்கிவிட்டது.

ஜெர்மன் சாமான்களைப் பிரிட்டிஷ் அர சாங்கம் பறி முதல் செய்யுமானால் அதற் குத்தான் இணங்க முடியா தென்று ஜப் பானிய அரசாங்கம் ஓர் அறிக்கை வெளி யிட்டிருக்கிறது.